சுதேசமித்திரன்

இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்



WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

நேர்த்தியான
நிகழ்ச்சிகள்....
மனதைத்துலுக்கும்
சம்பவங்கள்....
சாகசச்சிக்கல்கள்
பூத்துக்குலுங்கும்
கலைத்தோட்டம்....
ஜூபிடரின்
வேலைக்காரி
பிப்ரவரி
25உ
வெளிவருகிறது
கதை, வசனம்: ஸி.என். அண்ணாத்துரை
டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ. சாமி
ஸ்டூடியோ: சென்ட்ரல்

சுதேசமித்திரன்

பொருளடக்கம்

		பக்கம்
யோக ஜாதகம்!	சு ரா.	5
ரமாவைக் கேளுங்கள்!	'குங்குமம்'	7
பெண்மை அழகு	லட்சுமி அம்மாள்	10
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	12
விமலா (கதை)	எல் வி எஸ் ரமணியன்	17
சென்னை பால்காரர் பிரார்த்தனை	'நீலம்'	22
கலாமண்டபம்	'சாண்டில்யன்'	23
தாயில்லாக் குழந்தை	'ஹரி சரண்'	27
பெரிய புராணம்	பி ஸ்ரீ	33
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	35
பெண்கள் முன்னேற்றம்	'மணி'	37
நோயற்ற வாழ்வு	வைத்யரத்னம் துரைஸ்வாமி ஐயங்கார்	40
வெள்ளை யானைக்குட்டியின் நன்றி	லட்சுமி	46

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XX] ஸர்வதாரி௵ மாசி௴ 9௳ ★ 1949-௵ பிப்ரவரி௴ 20௳ No. 3

மாயப் பொறி!

வெற்று வெட்டுக்களாலும், வீண் வெருட்டல்களாலும் நலன்களை முன்னேற்றிக்கொள்ளலாம் என்று நினைப்பது வெறும் பிரமை; அது தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்வதுமாகும். நமக்குக் கிடைத்திருக்கும் சுதந்திர வாழ்வு சுகவாழ்வாகப் பரிணமிக்க வேண்டுமானால் இன்று நம்மை உருட்டிப்பார்த்து விழிக்கும் பொருளாதாரச் சிக்கல்கள் தீரவேண்டும்; தீர்க்க வேண்டும். இவ்வேலையில் அனைவருக்கும் பங்குண்டு; பொறுப்புண்டு எல்லாரையும் காட்டிலும் தொழிலாளருக்குள்ள பொறுப்பு பதின் மடங்கு மகத்தானது.

தேசத்தின் தேவைக்கேற்ப உற்பத்தி பெருகவில்லை உணவுக்கும், உடைக்கும் மக்கள் படும் அல்லல் சகிகக முடியவில்லை. பணப் பெருக்கத் தொல்லை இன்னொருபுறம். முக்கியமான பொருள்களின் உற்பத்தி பெருகாத நிலையில் பணப்பெருக்கமட்டிலிருப்பதால் விலைவாசிகள் உச்சத்தை அடைவதில் வியப்பேது? இந்தச் சீர் கேடடைக் களைந்து, விலை வாசிகளைக் கட்டுப்படுத்தி, உணவுப்பொருள், ஜவுளி இவற்றிற்குக் கட்டுப்பாடுகளை விதித்து, நெருக்கடியைச் சமாளிக்க நேருவும் அவரது சர்க்காரும் முழுமனதுடன் முயன்று வருகின்றனர் இவ்வேலை சிதறுண்டு விடாமல் சிறப்புற நிறைவேறுவதற்கு தொழிலாளர் துறையில் அமைதி நிலவவேண்டும். அவ்வமைதியைக் குலைப்பதற்கான முயற்சிகள் பல, குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஒவ்வொரு திக்கிலிருந்தும் தலை தூக்கி வரக் காண்கிறோம். உதாரணமாக நாட்டின் இன்றியமையாத சாதனங்களாகவுள்ள ரயில்வே, தபால் சிப்பந்திகளின் சுகவாழ்விலும், க்ஷேம லாபத்திலும் சில தலைவர்கள் எல்லையில்லாமல் பரிவு காட்டி அனுதாபப்படுகிறார்கள்! அவர்கள் எடுத்துக் காட்டும் சித்தாந்தம், லட்சியங்கள் இவையனைத்தும் கவர்ச்சிகொண்டவையாயிருக்கலாம்; பூலோகத்தைச் சொர்க்க பூமியாகவே நிர்மாணிக்க உதவலாம். ஆனால் அனுபவ சாத்தியமான படிகளையேறியேதான் லட்சிய சித்தி பெற வேண்டும். இன்று தொழிலாளர் தலைவர்களாயிருப்பவர்கள், சமூகத்தில் அனைவருக்கும் நியாயம் வழங்க வேண்டுமென்ற ரீதியில் மேநாட்டில் உருவகமான ஒரு கோட்பாட்டை இந்நாட்டில் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றனர். இன்று இந்நாடுள்ள நிலைமையில் அதை அனுஷ்டிக்கமுடியுமா? இதைத்தான் அவர்கள் சிந்திக்க வேண்டும். மேல்நாட்டில் தொழிலாளர் துறையில் ஏற்பட்ட அதிருப்திக்கெல்லாம் காரணம் செல்வம் சீரான முறையில் வினியோகமாகாதது. இந்திய நிலைமை அப்படியல்ல. அந்நியச் சுரண்டல்களினாலும். அதைப் போன்ற மற்றும் அநேகம் விபரீதங்களினாலும் செல்வம் கொள்ளை போயிருக்கிறது. இடையே கொடிய யுத்தம் குறுக்கிட்டது. ஆசியா பூராவுமே பட்டினியாலும், பணப் பெருக்கக்கேட்டாலும் தவிக்கும்படி ஏற்பட்டிருக்கிறது இந்த இரண்டு கொடுமைகளையும் தலை கிளப்பாமல் செய்ய உற்பத்தி பெருக வேண்டும். அப்போதுதான் நாட்டில் செல்வம் பெருகும். செல்வமென்றால் கரன்ஸியல்ல. கரன்ஸியென்பது மாற்று. ஆனால் இன்று தொழிலாளர்களின் தலைவர்கள் கோருவதென்ன? வாழ்க்கைச் செலவு உயர்ந்து நிற்பதற்கேற்ப அதிகப்படியாக ஊழியர்களுக்கு படி கொடுக்க வேண்டுமென்கின்றனர்: உற்பத்தி போதிய அளவில் இல்லாத நிலையில் மேற்கொண்டு அவ்வப்போது படியை உயர்த்திக்கொண்டேபோவதானால் அது விலை வாசிகள் மேலும் உயரவே உதவும். எனவே இது விஷச் சக்கர நிலைதான். அறிந்தவர் அறிவுறுத்த வேண்டும். அறியாதவர் அறியவேண்டும்.

செல்வ நிலை க்ஷீணித்து செலாவணி பெருகியிருகதும் இச்சந்தர்ப்பத்திலே தான், உற்பத்திக்கும் வினியோகத்துதும உலை வைக்கும் வேலை நிறுத்த யோசனை தொழிலாளர் தலைவர்கள் என்று சொல்லுவோரிடத்தில் உதயமாகியிருக்

—அடுத்த பக்கம்

கிறது சமூகத்தில் இதனால் ஏற்படும் விளைவுகள் சாமான்யமாயிராது இதன் தாக்குதலிலிருந்து நாடு நிமிருவதற்குப் பண்டித ஜவாஹர் ஆமதாபாதத்தில் சமீபத்தில் சுட்டிக்காட்டியிருப்பதைப்போல 20 வருஷங்களாகும். தொழிலாளருக்கு வேலை நிறுத்தம் செய்வதற்குள்ள உரிமையை யாரும் மறுக்கவில்லை; ஆனால் நேரமும், பொழுதும் இதுவல்ல. சிந்தனையின்றி இத்தகைய மாயப் பொறியில் சிக்கிச் செயலில் ஈடுபடுவது பெரிய சமூகத் துரோகம் என்பதுடன், அவதிப் படுவோரைத் துன்பக் கேணியில் தள்ளி, தாங்களும் அதில் விழுந்து மரிப்பதற்கே ஒப்பாகும் விலைவாசிகளின் ஏறறத்தாலும், தேவைக்கேற்றபடி நாட்டில் சரக்கின்மையினாலும் கஷ்டப்படுபவர்கள். ரயில்வே, தபால் இலாகா தொழிலாளர்கள் மட்டுமில்லை அவ்விரண்டு சங்கங்களும் சமூகம் முழுவதையுமே பிடித்து நெரித்துக்கொண்டிருக்கின்றன. அன்றாட காலட்சேபத்தை நடத்த வகையின்றித் திணறும் தொழிலாளர்கள் பலர் இந்நாட்டில் இருப்பதை மறந்து விடுவதற்கில்லை. அவர்கள் கட்டுப்பாடில்லாமல், துண்டு துண்டாகச் சிதறி வாழ்ந்துவருகின்றனர் இவர்களுடைய நிலைமையைத் தங்களோடு ரயில்வேத் தொழிலாளர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பராயின், உண்மையைத்தெரிந்துகொள்ள அதிகநேரமாகாது இருப்பினும் அதிகமாக ஊதியம் வேண்டுமென்பதுட்பட அடுக்கடுக்காகக் கோரிக்கைகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. இக்கோரிக்கைகளுக்கு சர்க்கார் இணங்கி வராவிட்டால் வேலை நிறுத்தம் செய்வதாக அடிக்கடி பூச்சாண்டி காட்டப்படுகிறது ஏதோ சர்க்காருக்குச் சலுகை காட்டுவதைப்போல வேலை நிறுத்தத்தை ஒத்தி வைத்துக்கொள்வதாக சிற்சில முடிவுகளும் அவ்வப்போது செய்யப்படுகின்றன. தற்சமயம் நாடுள்ள நிலைமையில், அதன் க்ஷேமத்திலும் சுபிடசத்திலும் நாட்டம் கொண்டவர்கள் செய்யக்கூடிய காரியம் ஒன்றேதான். வேலை நிறுத்தம் என்ற நினைப்புக்குச் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது தொழிலாளர்களின் சுகவாழ்வில் பண்டித ஜவாஹரை விட அக்கரை உள்ளவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது அவர்தான் வேலை நிறுத்தததால் நாட்டின் நலனுக்கும், தொழிலாளர்கள் நலத்துக்கும் ஏற்படக்கூடிய தீங்கை ஆமதாபாத்தில் தெளிவுபட எடுத்துக்காட்டியிருக்கிறார். வேலை நிறுத்தங்கள் இதுவரை உணர்த்தியிருக்கும் அனுபவமும் தெளிவு இவ்வளவுக்குப் பிறகும் அச்செயலைப்பற்றிய பேச்சும் தூண்டுதலும் நீடிக்குமாயின் அது பிரதம மந்திரி பண்டித ஜவாஹர் தக்கவாறு எடுத்துக் காட்டியதுபோல பொருளாதார அபிவிருத்திக்காகவன்றி அரசியல் நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகச் செய்யும் சதியோ என்றுதான் நினைக்கத் தோன்றும்.

யோகஜாதகம்!

சு.ரா.

லட்சுமியின் ஜாதகத்தைப் பார்த்தவர்கள் எல்லோரும் அதைப்பற்றி பிரமாதமாக சிலாகித்தார்கள். அவளுக்குக் கணவனாக வருபவனுக்கு அவளால் "அதிர்ஷ்டம்" உண்டாகும் என்றும், அவள் தகப்பனாருக்குக்கூட வாழ்க்கையில் உயர்வு ஏற்படும் என்றும் வாய் கூசாமல் சொன்னார்கள். ஆனால் கிட்டு அய்யருக்கு மட்டும், இதெல்லாம் ஜோஸ்யர்களின் சரடு என்றுதான் தோன்றியது. இல்லாவிட்டால், பதினெட்டு வயதாகிய லட்சுமிக்கு, நான்கு வருஷமாய் கல்யாணத்திற்கு முயற்சி செய்தும்ஒன்றும் பயன் படாமல் போயிற்று என்றால், அவர் வேறு எப்படித்தான் எண்ணக்கூடும்?

ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யர்-கிட்டு அய்யர் என்பது அவருக்கு ஊரார் இட்ட பெயர்-நல்லூர் கிராமத்தில் "போர்டு ஸ்கூல்" உபாத்தியாயர் வேலை. மாதச்சம்பளம் எல்லாவித "படி."களையும் சேர்த்து முழுசாக முப்பது ரூபாய்! அவருடைய குடும்பமோ எல்லா உபாத்தியாயர்களையும் போலத்தான்—நான்கு பெண்கள், ஒரு பையன், வயதான தாயார். அவருடைய முப்பது ரூபாய் வருமானத்தில் குடும்ப சவரட்சணை போக அவ்வப்போது வரும "இன்ஸ்பெக்டர்களை" கவனித்து அனுப்புவதும் இவர் தலையெழுத்து. ஏனென்றால் தலைமை உபாத்தியாயர் வெளியூரிலிருந்து வருபவர். நல்லூர் கிராமத்தில் தங்கி சாப்பிடுவதற்கான வேறு வசதிகள் கிடையாது. 'இன்ஸ்பெக்டரை' முகம் கோணாது கவனித்து அனுப்பாவிட்டால் பள்ளிக்கூடத்தின் "ரிபோர்ட்" அதோகதிதான். அவருடைய வேலைக்கும் சீட்டுகிழித்தாகி விடும்.



இவற்றாலெல்லாம் இயற்கையை மாற்ற முடியுமா? இவரது கஷ்டத்தைக் கண்டுதான் இயற்கையின் இயல்பு மாறுமா? லட்சுமிக்கு வயதுபதினெட்டாகிவிட்டது. பெயருக்கு ஏற்றாற்போல், அவளைப் பார்த்தால் லட்சுமிபோலத்தான் இருப்பாள் எப்பொழுதும் புன்சிரிப்பு தவழும் எழில் முகம், ஒரு மெல்லிய பவழமாலை,

காதில் சிவப்புத் தோடு, ஒரு மூக்கத்தி—இவைதான் அவளுடைய ஆபரணங்கள். இருந்தாலென்ன? அழகுக்கு அழகு செய்வாருண்டோ? அவளுக்கு அவளுடைய அழகே போதுமே!

அய்யரும் நான்கு வருஷமாய் வரனைத் தேடி அலைந்தார். பாவம்! கல்யாண காலம் முழுவதும் எரித்த வெயிலெல்லாம் அவர் தலையில்தான் என்று சொன்னால் மிகையாகாது. தன் பெண்ணுக்குக் கல்யாணமே ஆகாவிடாமல் போய்விடுமோ என்றுகூட எண்ணலானார். அவர் மனம் தததளித்தது. இந்நிலையில் "குதிராட்டமாய் பெண்ணை வளர்த்து வைத்துக் கொண்டிருக்கானே காலாகாலத்தில் கட்டிக் கொடுக்காமல்" என்ற ஊர் வம்பைக் கேட்டு அவர் மனம் இடிந்தது, தனது விதியை நொந்தார்: கடவுளைக் கடிந்தார்.

அன்று பள்ளிக்கூட "இன்ஸ்பெக்ஷன்." அய்யர் எல்லாவற்றையும் மிக்க ஜாக்கிரதையுடன் ஏற்பாடு செய்திருந்தார். அதுவும். இன்ஸ்பெக்டர் புதுசு: இளைஞர் என்று அறிந்ததும் ரொம்பவும் பயத்துடனிருந்தார்.

இன்ஸ்பெக்டர் சிவராமன் வயதில் சிறியவனாயினும் நல்லவன். ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து தன் முயற்சியால் முன்னுக்கு வந்த வாலிபன். நல்ல சித்தம். கோழைமனது பிறர் துக்கம் சகிக்க மாட்டான். ஆனால் உத்யோக முறையில் ரொம்ப கண்டிப்பான பேர்வழி.

பள்ளிக்கூட இன்ஸ்பெக்ஷன் முடிந்தது. ரிப்போர்ட் இன்னும் எழுதியாகவில்லை. தான் ஆபீசுக்கு போய் 'எழுதியனுப்புவதாகச் சொல்லிவிட்டான். அய்யருக்கு ஒரே திகில். சாயங்காலம் சிவராமனும் கிட்டு அய்யரும் வீட்டுத் திண்ணையில் பேசிக் கொண்டிருந்தனர். அய்யர் தனது குடும்ப நிலையையும், தன் பெண் கல்யாணம் நடக்க வேண்டியதைப் பற்றியும் ஒரு ஒரு குறைப்படலம் படித்துக் கொண்டிருந்தார். ஆனால் சிவராமன் மனதோ உள்ளே எழும்பி நிலவிய சங்கீதத்தில் லயித்திருந்தது. மத்தியானம் சாப்பிடும் பொழுதுதான் அவன் லட்சுமியைப் பார்த்தான். அதிலிருந்தே அவன் மனம் ஒரு நிலையிலில்லை. அவள் பாடுவதைக் கேட்டதும் அவன் மனம் ஏதோ முடிவு செய்துவிட்டது போலும்!

மறுநாள் ஊருக்குப் புறப்பட்டுவிட்டான். சிவராமன் போகும் பொழுது கிட்டு அய்யரிடமிருந்து லட்சுமியின் ஜாதகம் ஒன்றை வாங்கிக்கொண்டு தனக்குத் தெரிந்த நண்பன் ஒருவனுக்குப் பார்த்து தன்னால் முடிந்தவரையில் ஏற்பாடு செய்வதாகச் சொல்லிச் சென்றான். கிட்டு அய்யருக்கு சிவராமன் தன்னிடம் காட்டிய கருணையால் வெகுவாக சந்தோஷம். ஆனால் அவனுக்குத் தன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்கும் நிலையில் தானில்லையே என்று பெருமூச்சு விட்டார்.

ஒரு மாதம் கழிந்து சிவராமனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் ஜாதகம் பொருத்தமாயிருக்கிறதென்று எழுதி பிள்ளையின் ஜாதகத்தை அனுப்பியிருந்தான். "பிள்ளைக்குத் தாய்தகப்பனில்லை: ஏதோ உத்தியோகத்தில் இருக்கிறான்: மாதம் நூறு ரூபாய் சம்பாதிக்கிறான்" என்று பிள்ளையைப் பற்றிய விஷயங்களையும் எழுதியிருந்தான். அடுத்த தபாலில் கிட்டு அய்யர் தமது பரிபூரண சம்மதத்தை எழுதவிட்டார்.

பெண்ணைப்பார்க்க மாப்பிள்ளை வரப்போவதாக எழுதியிருந்த கடிதத்தைப் படித்துப் பரவசமடைந்தார் கிட்டு அய்யர். பெண்ணைப் பார்த்துவிட்டால், கலியாணம் நிச்சயம் என்பது அவர் எண்ணம். ஏனென்றால் அதுவரை அவர் பார்த்த வரன்கள் எல்லாம் பெண்ணைப்பார்க்கும் எல்லைவரை வந்ததே கிடையாது எனவே மிகவும் விரிவாக ஏற்பாடெல்லாம் செய்திருந்தார்.

குறிப்பிட்ட தேதியும் வந்தது. கிட்டு அய்யர் வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்துகொண்டிருந்தார். சாயந்திரம் ஐந்தரை மணிக்கு வாசலில் வண்டிவந்து நின்றது. அதிலிருந்து சிவராமன் மட்டும் இறங்கியதைப் பார்த்த கிட்டு அய்யரின் முகம் திடீரென்று விகாரமடைந்தது. உடல் வியர்த்தது. சற்று தன்னை திடப்படுத்திக்கொண்டு "மாப்பிள்ளை வரவில்லையோ?" என்று மென்று விழுங்கினார்.

"ஏன்? வேறு யார் வேண்டும். நான் தான் வந்திருக்கேனே உங்கள் மாப்பிள்ளை!" என்று சிவராமன் சொன்னதைக்கேட்ட அய்யரால் தம் காதுகளை நம்பவே முடியவில்லை. அப்படியே பிரமித்துப்போனார்!

* * * *

இப்பொழுதெல்லாம் அய்யருக்கு ஜோஸ்யத்தில் அபார நம்பிக்கை.ஏன்? வாத்தியார் கிட்டு அய்யர் "ஹெடமாஸ்ட்"ரானதும் சிவராமன் "ஜில்லாக் கல்வி அதிகாரி"யானதும் லட்சுமியின் கலியாணமாகி ஒரு மாதத்திற்குள் தானே நடந்தவை!



7

அன்புள்ள ஸீதாவுக்கு!

தெருவில் வந்து நின்ற காரைப் பார்த்து விட்டு, ‘அது கோபாலன் வீட டுக்கார்போலிருக்கிறதே. ஆமாம்! அதோ அவர்கள் வீட்டு டிரைவர் குமாரசாமிதான் காரிலிருந்து இறங்கி வருகிறான்’ என்றாள் அத்தை.

அதற்குள் டிரைவர் குமாரசாமி அருகில் வந்து ‘கோபாலன் இருக்கிறாரோ இங்கே?’ என்று கேட்டான்.

‘இல்லையே!’ என்றாள் அத்தை.

‘அவர் இன்று இங்கே வந்தாரோ? என்றான் டிரைவர்.

‘இன்று இங்கே வரவே இல்லையே!’ என்றாள் அத்தை

‘வந்தால் வேறெங்கும் போகாமல் உடனே வீட்டுக்கு வரச் சொல்லுங்கள்,’ என்று சொல்லிவிட்டு அவன் போய் விட்டான்.

‘எங்கே போயிருக்கும்? எங்காவது ஸினிமாவுககுப் பகல் ஆட்டத்துக்குப் போயிருககும்.’ வேறு எங்கே கண்காணாத இட த்துக்குப் போய்விட ப்போகிறது?’ என்றாள் அத்தை.

‘அது எங்கேயாவது போய்த் தொலையட டும். இந்த வஸந்தா எங்கே போய்த் தொலைந்திருக்கும்? தெரியவில்லையே! ஒரு வேளை பக்கத்தகத்து பத்மஜாவுடன் பீச்சுக்கு எங்காவது போயிருக்குமோ? சமயத்துக்கு இந்தப் பட்டண்ணா எங்கேயோ போய்த் தொலைந்தானே? அவனையாவது எங்காவது போய்ப் பார்த்துக்கொண்டு வரச் சொல்லலாம் என்றால்’ என்றாள் மாமியார்.

‘அவனுக்கென்ன, வித்தையா விசாரமா?’ என்றாள் அத்தை.

இந்தமாதிரியான வார்த்தைகளைக் கேட்கும்போதுதான் அடி வயிற்றிலிருந்து குபீர் என்று பற்றி எரிகிற மாதிரி என்னை என்னவோ செய்து விடுகிறது. தூ! இதுவும் ஒரு பிழைப்பா? எங்காவது இரண்டாம் பேருக்குத் தெரியாமல் சென்று பிராணனை மாய்த்துக் கொள்ளலாமா என்று

“......டாக்டர் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போக......”

ஒரு சமயம் இல்லாவிட்டாலும் ஒரு சமயம் நிச்சயமாய் தோன்றுகிறது

பொய்யே இல்லை. வாஸ்தவமாகத்தான் சொல்லுகிறேன். என்னதான் உத்தியோகம் இல்லாவிட்டாலும் இப்படி ஓர் அலட்சியமா?

காலையில் எழுந்தவுடனே மார்க்கெட்டுக்குப் போவதற்கு பட்டண்ணா, ஓரகத்தியின் குழந்தையை டாக்டர் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போவதற்குப் பட்டண்ணா ஒன்று மாற்றியொன்று ஏதாவது வியாதி இல்லாமல் அதுகளுக்குப் பொழுது விடியவே விடியாது ஸ்டோருக்குப் போவதற்கு பட்டண்ணா. இது தவிர அங்கே இங்கே போக எல்லாவற்றுக்கும் பட்டண்ணாதான் வித்தையா, விசாரமா? உத்தியோகமா? ஒன்றுந்தான் கிடையாதே!’

சே! சே! இந்த ஜனங்களின் போக்கே ரொம்ப அநியாயம். இவ்வளவு உழைத்தும் ஏதாவது நன்றி உண்டென்கிறாயா? இதைக் கூடச் செய்யாமல் என்ன வேலை அவனுக்கு என்றுதான் சொல்கிறார்கள். இதை விட எங்காவது கண்காணாத இட த்துககுச்சென்று பட்டினியாகச் சாகலாம்’ என்பேன் இவரிடம். ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் பற்றிக்கொண்டு போகும் எனக்கு. அப்பொழுது தான் இவரிடம்’ இந்த மாதிரி சொல்வேன்.

பட்டினி இருந்து சாவானேன்? கௌரவமாகத்தான் இருந்து கொண்டு வாழ்க்கையை நடத்தினால் யாராவது வேண்டாமென்கிறார்களா என்ன? என்பார் இவர்.

‘அந்தப் பாக்கியம் இருந்தால் ஏன் இப்படி இங்கே இவர்களிடப்

அனுவசியமான வார்த்தைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்? அதற்கு வழி இல்லாமல்தானே இப்படி சிறுமைப்பட வேண்டியிருககிறது' என்பேன்.

'ஏன், அந்தப் பாக்கியம் நமக்கில்லை என்று எதற்காகச் சொல்கிருய்? இந்தக் குடும்பத்தில் பிறந்ததற்காக, அப்பாவின் சுயார்ஜித சொத்தில் இல்லாவிட்டாலும், பிதுரார்ஜித சொத்தில் நமக்குப் பங்கு உண்டு. அதை இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. அதைப் பிரிவினை செய்துகொண்டு இப்பொழுதே தனிக்குடித்தனம் போய்விட்டால் போகிறது. அது கூட வேண்டாம். ஏதோ ஒரு லட்சியம் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதற்கென்று வந்துவிட்டால் பட்டினி இருந்தாசெத்துவிடப்போகிருேம்? விசாலமான உலகம் இருக்கிறது. அந்தப் பயம் ஒரு நாளும் எனக்குக் கிடையவே கிடையாது. இவர்கள் கீழ் நாம் குடியா என்ன? இதோ இப்பொழுதே கிளம்பிவிடுவோம். என்ன சொல்கிருய்?' என்பார் இவர்.

'போதும். போதும். அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். ஏற்கனவே எங்கள் குடும்பத்துக்கு இருக்கிற 'நல்ல பெயர்' போறும். இது வேறு ஒரு அபக்கியாதி வேண்டாம்' என்பேன்.

'அபக்கியாதி என்ன இதில்?' என்பார்.

'என் பெரிய தமக்கை கொஞ்சம் துடுக்குதான். இல்லையென்று சொல்லவில்லை. புக்ககத்துக்குப் போன இரண்டே மாதத்தில் அகமுடையானை அழைத்துக்கொண்டு தனிக் குடித்தனம போய்விட்டாள். சொல்லிவைத்த மாதிரி. இரண்டாவது தமக்கை, மூன்ருவது தமக்கைகளும் புக்ககம்போனவுடனே தனிக்குடித்தனம் போய் விட்டார்கள். இந்த விவரங்களைத் தெரிந்துகொண்டு, உங்கள் கல்யாண விஷயத்தில் என்னைப்பற்றிய பிரஸ்தாபம் வந்தபொழுது, 'ரங்கம்மாவின் பெண்ணு? போதும் போதும். பாகப் பிரிவினைக்கு ஏற்பாடு செய்து கொண்டுதானே கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கவேண்டும்? அதுகள் நாலுபேரோடு சேர்ந்து வாழுமா என்ன? அதுகள் பரம்பரையே அப்படியாயிற்றே. அதெல்லாம் நமக்கு வேண்டவே வேண்டாம் என்று உங்கள் அம்மா சொன்ஞராம். அதற்குத்தகுந்த மாதிரி நானும் தனிக் குடித்தனம் போய்விட்டால் 'நான்தான் அப்பொழுதே சொன்னேனே. எனக்கு நன்ருகத் தெரியுமே அதுகள் ஜன்மம்' என்று. தன்னுடைய ஜோஸ்யம் பலித்துவிட்டதைப்பற்றி 'டமாரம்' அடிக்க ஆரம்பித்துவிடுவார். அந்தப்பேச்சையே எடுக்காதீர்கள் என்பேன்.

'அதென்ன அவர்களுக்காகவா என்ன? இல்லை, இல்லை. நானும் கொஞ்ச நாளாகக் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன் அவர்கள் போக்கை. அதிகமில்லை. நாள் கணக்கில்தான என்று சொல்லிக்கொண்டே போய் விடுவார்.

வாஸ்தவமாகச் சொல்கிறேன் கீதா! அநத ஒரு அபககியாதிக்காகத்தான் நான் பயப்படுவதெல்லாம். இல்லாவிட்டால் என்றைக்கோ இதுகள் முகத்திலேயே விழிக்காமல் வேறு குடித்தனம் போயிருப்பேன்.

பெரிய தமக்கை வேண்டுமானுல் கொஞ்சம் துடுக்கு. சகிப்புத்தன்மை கிடையாது, அசட்டுக் கர்வம் கூடக் கொஞ்சம் உண்டு. நல்ல இடத்தில் அனுவசியமாகப் பாகம் பிரித்துக்கொண்டு தனிக் குடித்தனம் போனுள் மற்ற இரண்டு பேர்களைப்பற்றி நீ என்ன சொல்கிருய்? அதுவும் மூன்ருவது அக்காவை அந்தமாமியார்க்காரியும் நாத்தனுர்காரியும் படுத்தி வைத்தபாடு! ஒரு நாளாவது சண்டைச்சச்சரவு இல்லாமல் வேளையில்சோறு உண்டா? இப்பொழுது வேண்டுமானுல் அத்திம்பேர் அவள் தலைப்பைப் பிடித்துக் கொண்டு சுற்றிக்கொண்டிருக்கிருர் அன்று தாயாருடையவும் தமக்கையினுடையவும் பேச்சை கேட்டுக்கொண்டு விறகுக் கட்டையால் அடித்தவர்தானே! பாவம்!



"......இப்போதே கிளம்பி விடுவோம், என்ன சொல்கிருய்?......"

வயற்றுவலி, புழுவாய்த்துடிக்கிருள்! அதெல்லாம் தங்கையின் கல்யாணத்துக்கு ஒருவாரம் முன்னதாகப் பிறந்தகம் போவதற்காகச் செய்யும் மாயாவித்தனம்' என்ருளாம் அந்த மாமியார்க்காரி இப்பொழுதுகூட அம்மா அதைச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போவாள். அவர்களுடன் இருந்தவரையில் ஒரு நாளாவது அக்காவுடன் அத்திம்பேரைச் சுமுகமாக இருக்கும்படி அவர்கள் செய்தது கிடையாதாம். அப்படிப்பட்ட இடத்தில் இருந்து பார்த்தால் தெரியும், வாய்க்குச் சுளுவாகச் சொல்லிவிடுகிருர்களே அந்தப் பேர்வழிகளெல்லாம், இத்தனைக்கும் அத்திம்பேராக, அவருக்காக புத்தி வந்து அவரே தனிக்குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்தாரேயொழிய அக்கா அதுபற்றிப்பிரஸ்தாபிக்கவே இல்லையாம் பொறுமைசாலி என்ருல் அவளுக்குப்பிறகுதான் மீதிப்பேரெல்லாம். எல்லாம் இந்த அவச்சொல்லுக்குப் பயந்துதான் நடுங்கி நடுங்கி 'செத்தாள் அவள். நானும் அப்படித்தான் செத்துக்கொண்டிருக்கிறேன். ஜனங்கள் என்னவோ வாய்க்குச் சுளுவாகச் சொல்லிவிடப் போகிருர்கள்.' இந்தக் காலத்துப் பசங்கள்கூட ஒன்ருக இருக்குங்களாஎன்னவென்று. சொல்வதற்கென்ன? இந்த மாதிரியான கஷ்டங்களை அனுபவித்துப் பார்த்தாலல்லவோ தெரியும்?

ஆனல் ஒன்று மாத்திரம் நிச்சயம். நீ எத்தனையோ தரம் நம் ஊர் கோடியகத்துக் குடும்பத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவதுண்டு. அடிக்கடி அந்தக் குடும்பத்தைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கிருய். ஐந்து பிள்ளைகள். எல்லோருக்கும் கல்யாணமாகி அகமுடையாள்கள் வீட்டிற்கு வந்து பெற்ரேர்களுடன் எல்லோரும் ஒரே குடும்பமாக இருந்து வருவதைப் பற்றித்தான் சொல்கிறேன், பிதுரார்ஜிதமான சொத்து, எல்லோருக்கும் சம உரிமை. அவனவன் சம்பாதிப்பதில் குடும்பத்துக்கென்று அவனவனுடைய விகிதாசாரத்தைக் கொடுத்துவிட்டு, மிகுதியை அவனவன் பாங்கியில் போடுவதோ, வேறு விதமான செலவுகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுவதோ அவனவனுடைய இஷ்டம் என்ற ரீதியில் அந்தக்குடும்பம் எவ்வளவு அழகாய் நடந்து வருகிறது என்று அடிககடி ஏதாவது உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமென்ருல் அந்தக் குடும்பத்தைப்பற்றிச் சொல்லுவாயே! உண்மையில் நாம் எதிர்பார்த்தபடி அந்தக் குடும்பத்துக்குள் அவ்வளவு ஒற்றுமையும் சந்தோஷமும் இருந்திருக்குமா, இருந்திருக்க முடியுமா? என்பது இங்கு வந்த பிறகு சந்தேகமாகத்தான் இருக்கிறது.



"......வஸந்தாவை ஆஸ்பத்திரியில்......கிளம்பு சீக்கிரம்......"

இங்கு வந்தபிறகு என்மனதில் ஏற்பட்டிருக்கின்ற எண்ணம், அது சரியோ' தப்போ, இதுதான். அதாவது அவனவன் தனித்தனியாக இருந்தால்தான் அண்ணன் தம்பி, அப்பா, அம்மா, எல்லா உறவும் ஒன்று சேர்ந்திருந்தால் அவ்வளவும் மனஸ்தாபந்தான். வரவர ஜனங்களுடைய மனது இந்த ரீதியில்தான் மாறியிருப்பதாக எனக்குத்தோன்றுகிறது.

எதையோ சொல்லவந்து எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறேன். மனது அப்படிக்குமுறுகிறது கீதா!

"அவனுக்கென்ன, வித்தையா, விசாரமா?" என்று அத்தை சொல்லிக் கொண்டிருக்கையில், வீர்'என்று வெகுவேகமாகத்தெருவில் ஒரு டாக்ஸி வந்து நின்றது.

டாக்ஸியிலிருநது அவசரம் அவசரமாய் இவர் 'இறங்கி வந்து' 'அம்மா! வஸந்தாவை ஆஸ்பத்திரியில் அடமிட் செய்திருக்கிறது! கிளமபு சீக்கிரம்' என்ருர்.

மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள

ரமா



17

விஞ்ஞானமும் வேண்டும், மெய்ஞ்ஞானமும் வேண்டும்.

★

'நீடூழி வாழ்க, பெருமையுடன் வாழ்க, நலம் திகழ வாழ்க' என்று வாழ்த்திக்கொண்டே வந்தாள் கமலா.

'இந்த வாழ்த்து எனக்குத்தானே?' என்று இளநகை அரும்பினாள் ஸரோஜா.

'இந்த வாழ்த்தை உனக்கு உரிமையாக்க என்னால் இயலுமா? எனக்கே இதில் உரிமை இல்லையே! இருந்தால்தானே வழங்க முடியும்' என்றாள் கமலா.

'உனக்குச் சொந்தமில்லையென்றால் வேறு யாருக்குத்தான் இது சொந்தமோ?' என்று கேட்டாள் ஸரோஜா.

'மேன்மை தங்கிய ஸ்ரீமதி கவர்னருக்குச் சொந்தமானதை நான் கவர்ந்து உனக்கு வழங்குவது எப்படி?' என்றாள் கமலா.

'ஓஹோ, கவி கோகிலம் ஸரோஜினிதேவி வாழ்த்திய வாழ்த்தொலியா இது? இப்படி யாரை வாழ்த்தினாளோ?' என்று கேட்டாள் ஸரோஜா.

'கவியரசி நமது விஞ்ஞான அரசரை வாழ்த்தினாள்'

'ஓஹோ, ஸர். சந்திரசேகர வேங்கடராமனை வாழ்த்தினாளா ஸரோஜினி தேவி?'

'ஆம். ஸர். சி. வி ராமன் என்று உலகப் புகழ்பெற்றிருக்கும் விஞ்ஞான மேதாவிக்கு அறுபது வயது நிறைந்துவிட்டதல்லவா? அந்த நிறைவை முன்னிட்டுச் சென்ற மாதம் அலஹாபாத்தில் ஸரோஜினி தேவி நீடூழி வாழவேண்டுமென்றார் ஸர் சி வி ராமனை. உலகப் பிரசித்தி பெற்ற பௌதிக விஞ்ஞானிகளில் ஒருவரல்லவா?' என்றாள் கமலா.

நான் சொன்னேன்: 'உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞான ராமன் நம் தமிழகத்தைச் சார்ந்தவர் என்பது குறித்து நாம் விசேஷமாகப் பெருமை கொள்ளலாம். ஸரோஜினி தேவியின் வாழ்த்தொலி நம் தமிழகத்தின் இதயப் பேரொலிதான்.'

அதற்குக் கமலா 'தென்னிந்தியப் பயிர்தான்; ஆனால் பயிரானது வட இந்தியாவிலேயேதான்!' என்றாள் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தவள்போல.

'ஆம்; தென்னிந்தியராகிய இவர் வட இந்தியாவுக்குமட்டுமா சொந்தம்? உலகத்திற்கெல்லாம் ஒருங்கே சொந்தமாகிவிட்ட உயர்தர விஞ்ஞானியல்லவா? ஸர் சி. வி ராமனைக் குறித்துப் பேசும்போது தென்னிந்தியரென்றும் பிராம்மணரென்றும் யார் நினைத்துப் பார்க்கிறார்?' என்றாள் ஸரோஜா.

ஸ்ரீமதி ஸரோஜினி

'மற்றவர்கள் எப்படி நினைத்துக் கொண்டாலும் ஸர் சி வி. ராமன் எப்படித் தமது நாட்டையும் குலத்தையும் மறக்கமுடியும்? தாம் அணிந்துகொண்டிருக்கும் பூணூலைக் கூடச் சிறிது மகிழ்ச்சியுடன் காட்டுகிறாராமே!' என்றாள் கமலா.

'அது உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டாள் ஸரோஜா.

'பத்திரிகையில் படித்திருக்கிறேன்' என்றாள் கமலா.

'இந்த விஞ்ஞானிக்கு அவ்வளவாக மத நம்பிக்கை கிடையாதென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனே!' என்றாள் ஸரோஜா.

'மதத்தைக் குறித்து அவ்வளவாகப் பெருமை பாராட்டிக்கொள்வதில்லைதான். தென்னிந்தியர் என்றோ, பார்ப்பனர் என்றோ பெருமை பாராட்டுவதும் இல்லைதான். எனினும் "நான் இந்தியன்" என்ற தேசியப்பெருமை இந்த விஞ்ஞானிக்கும் உண்டு என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தேசியப் பெருமை இந்தியர் அனைவருக்கும் வேண்டியதுதான். இந்தப்பெருமை சுதந்திர இந்தியாவின் பெருமைக்கே ஒரு துணையாகவும் கூடும். என்றேன் நான்.

'இந்த விஞ்ஞானி உத்தியோகஸ்தராகவும் இருந்தாராமே!' என்றாள் ஸரோஜா.

'ஆம்; சுமார் பத்து ஆண்டுகள் சர்க்கார் உத்தியோகத்தில் இருந்தும் இவர் தமது விஞ்ஞான மனப்

பான்மையை விட்டுவிடவில்லை, அடிமை மனப்பான்மையைப் பற்றிக் கொள்ளவும் இல்லை கல்கத்தாவில் உத்தியோகஸ்தராக இருக்கும்போது தான் இவருடைய விஞ்ஞான ஆற்றல் கண்டு ஸர் அஷுடோஷ் முகர்ஜி என்ற வங்காளப் பெரியார் இவரைச் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகச் செய்து, ஒரு பிரபல விஞ்ஞானியாகப் பரிலை மிக்க வசதி செய்து கொடுத்தார்' என்றாள் கமலா.

'சரி; வட இந்தியாவைக் காட்டிலும் ராமனை உலகத்திற்கு அறிவித்தது ஐரோப்பா கண்டம் தானே? நோபெல் பரிசு தானே இவரைத் தாய் நாடான இந்தியாவுக்கும் உள்ளபடி அறிவித்தது? என்றாள் ஸரோஜா

உண்மைதான்; இவருக்கு நோபெல் பரிசு கிடைத்து இருபது வருஷம்கூட ஆகவில்லை. அந்தப் பரிசை நேரில் பெற்றுக்கொள்ளப் போகும்போது தமது அருமை மனைவியாகிய ஸ்ரீமதி லோகசுந்தரி அம்மாளையும் அழைத்துச் சென்றார் இந்தச் செய்தி அந்தக் காலத்தில் பிரமாதமாக ஓசைபபடடது' என்றேன் நான்

'ஆம்; நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்; அந்த அம்மாளைப் பார்த்தும் இருக்கிறேன் விஞ்ஞானராமனுக்குத் தகுந்த வாழ்க்கைத் துணைவி' என்றாள் கமலா

'இந்த அம்மாளுக்கும் ஸர் சி. வி. ராமனைப்போல் தேசியப் பெருமையுண்டு. தம்பதிகள் இருவரும் ஐரோப்பாக் கண்டத்தில் இருந்த காலத்திலும் இந்தியப் பழக்க ஒழுக்கங்களைச் சிறிதும் கைவிடவில்லை இந்திய விஞ்ஞானி இந்திய நடையுடை பாவனைகளையே ஐரோப்பாவிலும் மேற்கொண்டார். இந்திய முறையில் வணக்கம் செலுத்திப் பரிசைப் பெற்றுக்கொண்டார் கை குலுக்கி வந்தனமோ, நன்றியோ தெரிவித்துக்கொள்ளவில்லையாம் ஸ்ரீமதி லோகசுந்தரி ராமனோ ஐரோப்பாவிலும் இந்திய கலாசுந்தரியாகவே காட்சியளித்தாள்' என்றேன் நான்

'இந்த விஞ்ஞானி ஒரு நல்ல தேசபக்தருங்கூட அண்மையில் அமெரிக்கா சென்றிருந்தார் அப்போது அமெரிக்கர்களுக்கு நிகழ்த்திய ஒரு சொற்பொழிவினிடையே. "நான் இந்தியாவுக்கு வெளியே இருக்கும்போதும் என் இதயம் என் அன்பிற்குரிய தாய்நாட்டுக்கே திரும்பிப் போகிறது!" என்று சொன்னார் என்றாள் கமலா.

'சமீபத்தில் சென்னைத் துரைத்தனக் கல்லூரியில் நிகழ்த்திய சொற்பொழிவினிடையே ஸர் சி. வி. ராமன் அரசியல்வாதிகளைப் பரிகசித்தாரே!' என்றாள் ஸரோஜா.

'எனினும் ஸர் சி வி. ராமன் உண்மையான தேசபக்தர் என்பதை மறுக்கமுடியாது. இவர் அரசியல் மேடை ஏறிப் பேசியதேகிடையாது அரசியல்வாதிகளைப் பாராட்டியதுப கிடையாது 'அரசியல்வாதிகள் உலகத்தைத் திருத்த முயல்வார்கள் தங்களைத் திருத்திக்கொள்ள இயலாதவர்கள்!" என்று சமீபத்தில் இந்த விஞ்ஞானி பேசியதுண்டு' என்றேன் நான்.

'அப்படியிருந்தும் இவரைத் தேசபக்தர் என்றும் சொல்லுகிறாயே! விஞ்ஞான பக்தர் என்று சொன்னால் போதாதா? இவர் எப்படி மதபக்தர் இல்லையோ, அப்படியே தேசபக்தரும் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்' என்றாள் ஸரோஜா

நான் சொன்னேன்: 'அரசியல்வாதிகள் எல்லாம் தேசபக்தர்களா என்ன? ஸர் சி. வி ராமனைப்போல் கவி ரவீந்திரநாத தாகுரும் அரசியல்வாதிகளைப் பரிகசித்திருக்கிறார். ஓர் அரசியல்வாதி—தாகுரை முதன் முதல் பாராட்டிக் கொண்டிருந்தவர்—திடீரென்று தாகுரைத் தாக்கி எழுதத் தொடங்கினாராம். முகஸ்துதி செய்து ஏதோ ஒரு காரியம் சாதித்துக்கொள்ளலாமென்று எண்ணியிருந்தார். அந்தக் "காக்கை பிடித்தல்" பயனற்றுப் போகவே கவிஞர்மீது வசை பாடினார். அப்போது ஒரு நண்பர் கவி ரவீந்திரரை நோக்கி, "அவர் தவறு செய்துவிட்டார்" என்று வருந்தினார். அதற்கு மகாகவி ரவீந்திரர். "அவர் மட்டுமோ தவறு செய்தார்? நானுந்தான் தவறு செய்துவிடடேன்! அவர் தவறாக என்னை அரசியல் வாதி என்று நினைத்துவிட்டார்; நான் அவரைத் தவறாகக் கனவான் என்று நினைத்துவிட்டேன்?" என்றார் இப்படி ரவீந்திரர் அரசியல் வாதிகளைப் பரிகசித்திருந்தும் "இந்த உலகமகாகவி ஓர் உத்தம தேசபக்தருங்கூட" என்று நாம் சொல்லவில்லையா?'

இதுகேட்ட ஸரோஜா 'ரவீந்திரர் ரவீந்திரர் அல்லவா? அரசியல்வாதிகளைத் தாக்கியபோதிலும் இமயம் பாடுவார், குமரி பாடுவார் கங்கையைப் பாடுவார், யமுனையையும் பாடுவார்! தேசபக்தர்களுக்கும் தேசபக்தராகிவிடுவார்!' என்றாள்.

'அப்படியேதான் ஸர் சி. வி. ராமனும், அமெரிக்காவில் ஒரு சமயம் இந்திய அரசியல் குறித்துப் பேச வேண்டுமென்று இவரை வேண்டிக் கொண்டார்கள் இவரோ இமய மலை குறித்தும் விந்திய மலை குறித்தும் கங்கை முதலான நதிகளைக் குறித்தும் பேசித் தீர்த்துவிட்டாராம் இது தேச பக்தியல்லவா? மத பக்தி விஷயத்திலும்கூட இவரை 'நாஸ்திகர்" என்று எப்படிச் சொல்லமுடியும்? இவருக்கு உழைப்பிலும் பிறர் பணியிலும் உள்ள பக்தி சிரத்தையைப் பார்த்தால், இவரை ஒரு கர்ம யோகி என்று சொல்லக்கூடுமல்லவா?

அன்பர்பணி செய்யஎன்னை
ஆளாக்கி விட்டுவிட்டால்,
இன்பநிலை தானே வந்(து)
எய்தும் பராபரமே!

என்று தாயுமானவர் பாடியிருக்கிறாரல்லவா? அத்தகைய அன்பர் பணிதான் ஸர் சி. வி ராமனின் விஞ்ஞானப் பணியும்' என்றேன் நான்

'அப்படியானால் விஞ்ஞானியும் மெய்ஞ்ஞானியும் ஒரே நிலையில்தான் இருக்கிறார்களா?' என்று கேட்டாள் ஸரோஜா

'நான் அப்படிச் சொல்லவில்லையே! விஞ்ஞானியும் ஒரு வகையில் பக்தன்; அதிலும் 'மானுடமும் ஆத்மாவும் உண்டு" என்று நம்பும் ஸர். சி. வி. ராமனைப பக்தர் என்று ஒப்புக்கொள்வதில்தான் என்ன சிரமம் இருக்கமுடியும்? இது 'எப்படியிருந்தாலும். சுதந்திர இந்தியாவுக்கு விஞ்ஞானமும் வேண்டும். தாயுமானவர் போன்றவர்களின் மெய்ஞ்ஞானமும் வேண்டியதுதான்' என்று கூறி முடித்தேன்.

சொப்பன வாழ்க்கை

ஆர்வி

5

விசுவம் கொடுத்த அந்த எழுதாத கடிதத்தைப் பத்திரமாகக் கையில் மடித்து எடுத்துக்கொண்டு பானுமதி விடைபெற்று எழுந்ததும் டிரைவர் தாஸ் உள்ளே நுழைந்து வந்ததும ஒன்ருக இருந்தன. பானுமதி அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றுகொண்டாள். விசுவம் சிறிது அதிர்ச்சியடைந்து கொஞ்சம் அமட்டலாகவே, "என்ன ?" என்று கேட்டான் அவனை நோக்கி

"தந்தி......"

அவசரமோ, ஆபத்தோ எப்படியிருந்தாலும் விசுவம் ஒன்றுக்கும் கலக்கமடைந்தவனுகத் தோன்றவில்லை. தந்தியைக் கொடுத்துவிட்டு தாஸ் சென்றபின்பும் பானுமதி அங்கே நின்றுகொண்டிருந்தாள் இதுதான் அவனுக்குச் சிறிது தாம சங்கடமாய் இருந்தது ஆனுல் பானுமதியின் ஞாபகமோ நாளைக்கும் எங்கே விசுவத்தை வர வொட்டாமல் தடை செய்துவிடுமோ இந்தத்தந்தி என்பதில் சென்றது.

விசுவம் அவள் எண்ணத்தைப் புரிந்துகொள்ளாமல் அசட்டுச் சிரிப்புடன் "அதொன்றும் அவ்வளவு முக்கியமான சமாசாரமாய் இராது" என்ருன்.

"அதற்குத் தந்தி கொடுப்பானேன் ? பிரித்துப் பாருங்களேன்" என்ருள் பானுமதி படபடப்புடன்.

வேறு வழியில்லை; விசுவம் தந்தியைப் பிரித்தான்: "சுசீலா சௌக்கியமாய் வந்து சேர்ந்தாள்...கிருஷ்ணன்."

விசுவத்துக்கு மேலும தர்ம சங்கடமாய்ப்போயிற்று. சுசீலா சம்பந்தப்பட்ட எந்த விஷயத்தையும் அவன் யாரிடமும் கலக்கவிரும்பவில்லை. குறிப்பாக பானுமதிக்கும அவனுக்குமிடையே கறுப்புத் திரையிடவிரும்பினுன் அவன் என்ன செய்வதென்று புரியாமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டு. "விசேஷம் ஒன்றுமில்லையே ?" என்று கவலையடைந்து விசாரித்தாள் அவள்.

"இல்லை......"

"அப்போ நான் போய் வரட்டுமா ?"

"சரி."

பானுமதி திரும்பி வந்து, "நாளைக் காலையில் நான் எதிர்பார்க்கலாமா ?" என்று கேட்டாள்.

"நிச்சயம்; கட்டாயம்" என்ருன் விசுவம்.

டிபனுக்குச் சென்ற குமாஸ்தாக்கள், சிப்பந்திகள் உள்ளே அவரவர்கள் இடத்துக்கு வருகின்ற சந்தடி கேட்டது பானுமதி யாரையும் திரும்பிப் பார்க்காமல் மிகுந்த அடக்கத்துடன் வெளிவந்தாள். சென்ற ஒரு மாத காலத்தில் இதே இடத்துக்கு மூன்ரும் முறையாக விஜயம் செய்த தன்னைப்பற்றி காரியாலயத்தில் உள்ளவர்களின் அபிப்பிராயம் எப்படியிருக்குமோ என்ற எண்ணமே அவளுக்கு அந்த அடககத்தைக் கொடுத்தது அந்த அடககத்திலே பெண்மையின் பரிபூரண எழில் நிரமபி வழிந்தது. எல்லோருடைய

பார்வையும் தன்னையே இலக்காகக் கொண்டிருப்பது போல உணர்ந்தாள் அவள். அதைச் சிறிதும் பொருட்படுத்தாதவள்போல வாசலுக்கு அருகில் வந்ததும் ஒரு முறை கம்பீரமாகத் திருப்பிப் பார்த்தாள். அவள் சிறந்த கல்வி யறிவு படைத்த படித்த பெண்ணாக இருக்கலாம் ஆனால் ரோஜாப் புஷ்பம் போன்ற மேன்மையாக இருந்த முகத்தில் அந்த அறிவு பிரகாசிக்கவில்லை; அழகுதான் ஒளிவீசி விளையாடிக்கொண்டிருந்தது. பார்த்தவர்கள் கண்களுக்கு அதுதானே பட்டிருக்கும்! சட்டென்று குனிந்து முந்கித் துணி எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டாள். வெளியில் வந்ததும் தான் அவள் நல்ல மூச்சு விட்டாள்.

முன் பகுதியில் தபால் பிரித்துக்கொடுத்து அனுப்பும் நாகோஜி ராவ் கண்ணாடியின் மேல் புறமாக அவள் போவதைப் பார்த்துவிட்டு பியூன் திம்மய்யாவிடம் ரகசியமாக "யார் அப்பா இந்தப் பொண், இரண்டு மூணு தடவை வந்துட்டுப் போறாளே—கையிலே ஏதோ..." என்றார்.

"கையிலே கொண்டுவந்திருப்பாங்க. எடுத்துக்கிட்டுப் போறாங்க. நம்ம ஆபீஸ் காயிதம்னா அது இப்படித் தானே போயாகணும்" என்றான் திம்மய்யா.

"ஊஹூம் அதுக்கில்லே. யாரு, உனக்குத் தெரிமோன்னு கேக்கிறேன்."

நாகோஜிராவ் கொஞ்சம் வாலிபராக இருந்திருந்தால் திம்மய்யா சந்தேகப்பட்டிருப்பான். ஆனால் அவருக்கு நாற்பது. நாற்பத்தைந்து வயசுக்கு மேல் இருக்கும்; பிள்ளைக்குட்டிக்காரர்.

திம்மய்யா நல்ல அநுபவசாலி, "நீங்க ஒரு சுத்த..." என்று அவரை அடக்க ஆரம்பித்தான்

நாகோஜி "ஸ்" என்றார் அவர் சுத்த வெகுளி. எதையெல்லாம் நினைக்கக்கூடாதோ அவற்றை வெகுளித்தனமாக நினைப்பார்; எதையெல்லாம் வெளியில் சொல்லக் கூடாதோ அவற்றை அதே வெகுளித்தனத்துடன் சொல்லியும் விடுவார்.

"ஊஹூம் அதுக்கில்லே. சிறுவயசா இருக்காளேன்னு கேட்கறேன்" என்றார் மேலும்.

"இன்னும் அஞ்சாறு வருசம போனா வயசாகுது. நல்ல இவுரு ஐயா நீங்க! தபாலே எடுத்துப்போங்க, ஓட்டலாம்."

நாகோஜியின் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை.

ஆனால் வாழ்க்கைக்கும் வெகுளித்தனத்துக்கும் ஒத்து வராது என்று கட்டுப்பாடாக எண்ணுகிற உலகத்தில் பானுமதியின் விஜயம்பற்றிப் பல ஹேஷ்யங்கள் கிளம்பாமல் போகவில்லை. அவைகள் கடைசியில் விடுபடாத புதிர்களாகத்தான்போயின. ஏனெனில் எப்பொழுதும் நடக்கிற வேலை சுறுசுறுப்பாக நடப்பதைப்போல பானுமதிவெளிப்பட்ட மறுகணமேபியூனை அழைக்கும் மணியின் ஓசை விசுவத்தின் அறையிலிருந்து கேட்டது. அழகி ஒருத்தியிடம் அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருந்த சோடே பியூன் வந்து அனுப்பிய சிப்பந்திகளுக்குப் புலப்படவில்லை. இதழ் உதிராத மலரோ அல்லது மறதியின் ஏதாவது ஒரு சின்னமோ அங்கே மருந்துக்குக்கூட இல்லை.

விசுவம் மிடுக்காகவே, மாறுதல் அற்றவனாகவே இருந்தான் வழக்கத்தைவிடக் குறைவாகவோ. உத்ஸாகத்துடனோ இல்லாமல் வெகு சாதாரணமாகக் காணப்பட்டான். விசுவத்தின் தரத்தில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு இதைப்போன்று நேர்வது அபூர்வமல்ல. குமாஸ்தாக்களுக்கு இவை புரியாததுடன் சகஜமுமில்லை. ஆனால் முடிவு என்னவோ அவர்களுடைய மதிப்பில் அன்று மாலை விசுவம் ஒரு படி உயர்ந்தவனாகவே தோன்றினான்.

காலேஜ் பிரசங்கத்துக்கு என்றும், இல்லை வேலைக்கு என்றும், அதெல்லாம் இல்லை விஷயமே வேறே என்றும். சேசே அப்படி இராது என்றும் கிளம்பிய அபிப்பிராய பேதங் கொண்ட ஹேஷ்யங்கள் யாவும் சுக்கு நூருகச் சிதறிப் பொடியாயின.

விசுவம் இப்படிப்பட்ட ஹேஷ்யங்களையெல்லாம் எதிர்பார்ப்பவன் தான். ஆயினும் இந்த விஷயங்களில் வெற்றிகரமாக நடந்துகொள்ளவும் அநாயாசமாகச் சமாளிககவும் அவனுக்குப் புதுப் புது யோசனைகள் உதயமாகிக்கொண்டே வந்தன; இவ்வித யோசனைகள் தனக்கு உதயமாகும்போதெல்லாம் தனக்குள்ளே இரண்டு வித மனிதர்கள் இருப்பதுபோல அவனுக்குத் தோன்றும். சுசீலாவின் அன்பிலே திளைத்து அவளுடைய தேன் சுரக்கும் காதலைப் பெற்ற அவன் மனம் பானுமதியின் ரூப செளந்தரியத்தில் எந்த விசேஷ அம்சத்தைக்கண்டு லயித்தது? லயித்துப்போயிற்று என்றுதான் எப்படிச் சொல்ல முடியும்? அது எவ்வளவு தூரம் உண்மை! பானுமதியின் சகவாசம் குழந்தையின் புதுத் தோழன் போல கவர்ச்சிகரமாய் இருந்தது என்னவோ உண்மை! அந்த அன்பில் அவன் ஒரே அடியாக இரண்டறக்கலக்க அந்தக் கவர்ச்சியில் எத்தகைய பிடிப்பு இருந்தது!

சாயங்காலம் வீடடுக்கு வரும்போது விசுவத்தின் மனசிலே இந்தக் கேள்வி மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது சுசீலா தன்னேடு பிரிக்கமுடியாதவாறு ஐக்கியமாகிவிடடவள் போலவும் பானுமதியிடம் பாராட்டும் பாசமெல்லாம் மனிதன் தன்னைத்தானே சில சமயங்களில் ஏமாற்றிக்கொண்டு திருப்திப்படுகிருனே அத்தகையது என்றும் அவனுக்குத் தோன்றியது மற்ருெரு சமயத்திலே சுசீலாவிடம் கற்பதற்குத் தவறிப்போன இன்னிசைக் கீதங்களை பானுமதியோடு சேர்ந்து இசைப்பதுபோலவும் தோன்றியது. பானுமதியின் மதர்த்த கண்களிலே, மயக்குகிற அவற்றின் ஒளிவீச்சிலே சுசிலா மறுமலர்ச்சியுடன் தென்படுவதையே அவன் கண்டுவந்தான். ‘இது ஒரு குற்றமா? இது நான் சுசீலாவுக்குச் செய்கிற துரோகமா?’ என்று அவன் உள்ளம் கூவியது.

“பொய்—சுசீலா பவித்திரமானவள்! சொல்லப்போனல் பூஜிக்கவும் தகுந்தவள்: ஆனல் பானுமதி—சீச்சீ, இதெல்லாம் விளையாட்டு! மனிதன் பூஜிக்கும் சமயம் வேறு; விளையாடும் சமயமும் வேறு! ஒருவரிடமே இந்த இரண்டையும் வைத்துக் கொள்ள முடியுமா? விளையாட்டுக் குழந்தைக்குப் பவித்திரமானவர்களின் தன்மை தெரிய முடியாது ஆனல்......” விசுவத்தின் சிந்தனை இழை சட்டென்று நின்றது

என்ன அழகான கற்பனை இது? ஏன் இந்த மாதிரிக் கற்பனை அன்று அவனுக்குச்சொல்ல வரவில்லை. சூக்ஷ்ம மனசில் உதயமான இந்த எண்ணம அழகிய கற்பனையா அல்லது குற்றஞ் செய்த மனசுக்குச் சொல்லிக்கொள்ளும் இங்கிதமான சமாதானமா?

சமாதானமாகவே இருக்கட்டும்; இதனல் ஒன்றும் இதுவரை விபரீதம் எதுவும் விளைந்துவிடவில்லையே! இதை யாரும் நம்பமாட்டார்கள் என்பதை அவன் அறிவான். அதற்காக அவளைப் பார்க்காமலும் பேசாமலும் இருந்துவிடுவதா? விசுவம் எப்போதுமே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் விரும்புபவன் அவளோடு, தான் பழகுவது அந்த எல்லைகளுக்கு உட்பட்டதே என்பதையே அவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காட்ட விரும்பினன். அதை உத்தேசித்தே பானுமதி வெளியில் கிளம்பியபோது கையில் ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்

தனுப்பினுன். வீண் வதந்தி பரவுவதும் தப்பபிப்பிராயம் ஏற்படுவதும் ஒரு மனிதனுடைய அந்தஸ்தையே நாளடைவில் பாதித்துவிடும் என்ற அளவுக்கு அவன் எப்போதுமே முன்யோசனைக்காரன் ஆனல் அவனுக்கு முரட்டுச் சுபாவம உண்டு இது அவனாக ஏற்படுத்திக் கொள்வதா, இயற்கையாகவே உண்டாவதா என்ற விஷயம்தான் அவனுக்கே தெரியவில்லை. சுசிலா வீட்டைவிட்டுக் கிளம்பும் நிலை வரும்வரையில் அவன் முரட்டுத்தனமாய் நடந்துகொண்டுவிட்டான். இன்று இப்போது யோசித்துப் பார்த்தால் அவனுடைய கேள்விகளுக்கு அமைதியாக பதில் சொல்லிப் பார்த்திருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது

"யார் அவள்?" என்று அவள் கேட்டாள்.

"ஏன் கேட்கிருய்?" என்றுதான் விசுவத்துக்குப் பதில் சொல்லவந்தது. 'இது எவ்வளவு முட்டாள் தனம்.'

"அவ்வளவுக்கும் தஞ்சாவூர்தான். அவளுடைய அண்ணன் என் கூடப் படித்தவன். பாவம், அவன் இறந்துவிட்டான். இங்கே ஏர்கிராப்டில் வேலை செய்துவந்தான். பானுமதி இந்த வருஷம் இண்டர் படித்து முடித்துவிட்டாள் வீட்டில் அம்மாவும் பெண்ணும்தான்—ஏதாவது வேலை அல்லது—'

இதையே நிதானமாக அவளிடம் சொல்லியிருக்கலாமே

ஆனல் சுசீலா அவர்களைப்பார்த்த நிலை வேறு இவ்வித பதில்கள் எல்லாம் வெறும் வார்த்தைகளாகக்கூட ஒலிக்காது. அத்தகைய காட்சியை நேரில் கண்ட எவரும் எவ்வித சமாதானத்தையும் நம்பமுடியாதுதான். அப்படியிருக்கும்போது சொல்லி என்ன பிரயோசனம்?

"சரி. அவ்வளவுதான் விடு! விருந்துக்குப் போக வேண்டாம் என்று சுசீலாவே சொன்னுள், ஆனல் போனேம. அங்கே வந்திருந்த பானுமதியைத் தனி அறையில் சந்திப்பது பிசகு என்று எனக்கே பட்டது. துரதிருஷ்டம் யாரை விட்டது? போனேன். சகஜமாகப் பேசினேம். ஆனல் இந்தச் சகஜத்துக்கு ரகசியமென்ன?" என்று எண்ணிக் கொண்டே அவன் வீட்டுவாசலில் வண்டியைவிட்டு இறங்கினுன்.

6

அன்று நடந்த சம்பவத்தை நினைக்கும்போதெல்லாம் மனம் கசந்தது; எட்டமுடியாத உயரத்துக்குச் சுசீலா போய்விட்டதுபோல கலக்கமாயும் இருந்தது

'உங்கள் உள்ளத்திலே நேர்மை இருந்தால் அவளை வெளியிலே அழைத்துவந்து எனக்கு அறிமுகப்படுத்தியிருக்கலாமே. கையைப் பிடித்தே அழைத்து வந்திருந்தாலும் நான் அதை வித்தியாசமாய் எண்ணிக்கொள்ளமாட்டேன். ஆனல் உங்களைப்பற்றி உயர்வாகப் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் என்னைத் தனியே இங்கே விட்டுவிட்டு...'

சுசீலாவின் இந்த வார்த்தைகள் நினைக்கும்தோறும் அவனை ஈட்டிகொண்டு குத்தின. அவனால் தலை நிமிர்ந்து இந்த வார்த்தைகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"நீ நினைக்கிற அளவுக்கு நான் உனக்கு எந்த விதத் துரோகமும் செய்துவிடவில்லை" என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலும் நிலைமை இவ்வளவு தூரத்துக்குப் போயிராது என்று எண்ணிக்கொண்டே வீட்டினுள் நுழைந்தான். வீட்டிலே பயங்கரமான அமைதி குடிகொண்டிருந்தது. அவன் வந்து நுழைந்ததையே யாரும் கவனிக்கவில்லை. புருஷன் மனைவிக்குள்ளே இம்மாதிரி பிணக்குகளும், சிறு சச்சரவுகளும் நேர்வது சகஜந்தான். ஆனல் இப்படிப்பட்ட ஒரு தண்டனையை எவ்வளவு நாளைக்குப் பொறுப்பது?

"டேய் சுவாமி!" என்று அவன் அறையை நோக்கி கூப்பிட்டான்.

அதற்கும் பதிலைக் காணுமல் அவன்மனம் ஆத்திரமடைந்தது. என்ன நினைத்தானே என்னமோ அவனை அறியாமலே அவன் கால்கள் வெளியே புறப்பட்டன. வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு விர்ரென்று வெளியிலே ஓட்டிக்கொண்டு போனுன்.

குளிர்ந்த காற்று வீசிக்கொண்டே இருந்தது. ஆறுமணிக்குள்ளாகவே இருள் கவிழ்ந்துவிட்டது. விளக்கு வெளிச்சத்தைப் புகைப்படலம் போலப் பனி சூழ்ந்துகொள்ள வாரம்பித்தது நிம்மதியே சிறிதும் இல்லாதவனுய் எங்கெங்கெல்லாமோ ஒரு மணிநேரம்போலச் சுத்தினுன். திடீரென்று ஏதோ ஒரு இடத்தில் நிறுத்தினுன், ஸினிமாக் கொட்டகை. ஆங்கிலப்படங்கள் என்ருல் அவனுக்கு ஒரு மோகம். ஆனல் இன்றைக்குப் படத்துக்குப் போவது என்று அவன் கனவிலும் தீர்மானிக்கவில்லை. வெறுப்பாகவும் இருந்தது. படம் ஆரம்பமாயிருக்கும் என்று தனக்குள்ளேயே சமாதானம் செய்துகொண்டு புறப்பட்டான் நினைத்துப் பார்த்தபோது தன்னிடம் எவ்வளவு பலவீனம் இருக்கிறது என்பது அவனுக்கு ஒருவாறு புரிந்தது. இந்தப் பலவீனத்தைச் சோதிப்பதே போல எதிரே தன் காரியாலயத்தைச்சேர்ந்த ஒரு குமாஸ்தா வருவதைக் கண்டான் அவன் கண்ணில் படுவது இவ்வளவு அவமானம் தரத்தக்க காரியம் என்று அவன் எண்ணியதே இல்லை. பேசாமல் தலையைத் திருப்பிக் கொண்டான்

உலகத்திலே கௌரவமாய் வாழ்வதற்குச் சில வேஷங்களை மனிதன் கலைக்காமலே இருக்க வேண்டும் அந்த வேஷத்தில் சிறு மாறுதல் ஏற்பட்டாலும் உலகத்தில் தன் முகத்தைக்காட்ட அவன் வெட்கப்பட்டே தீரவேண்டும்! இதென்ன விசித்திரம் என்று அவன் மனம் எண்ணியது. கடைசியாக ஏழு மணி அடிக்கும்போது ஒரு வீட்டின் முன் தன் கார் நிற்பதை அவன் உணர்ந்தான். இதெப்படி நேர்ந்தது? அது அவன் வசிக்கும் பங்களா அல்ல; பானுமதியின் வீடு! நல்ல வேளையாக நகரத்தின் ஒரு கோடியில், அக்கம்பக்கத்தில் அதிக ஜன சஞ்சாரமில்லாத ஓர் இடத்தில் அவள் வீடு இருந்தது இந்த ஒரு விஷயம்தான் அவன் மனசுக்குச் சமாதானமாய் இருந்தது

'இந்த வேளையற்ற வேளையில் இங்கே எப்படி வந்தோம்! எதற்காக வந்ததாகச் சொல்வது! ஏதோ ஒரு சமாதானத்தைச் சொன்னுலும் அதை எவ்வளவு தூரம் பிறர் நம்புவார்கள்?' என்ற நினைவு எழுந்ததும் அவன் பேசாமல் திரும்பி விடலாமா என்று யோசித்தான். இதற்குள் வீட்டிலிருந்து யாரோ கவனிப்பதுபோல் தோன்றியது முன்னும் போக முடியாமல் பின்னும் போக முடியாமல் நடு வாசலிலேயே சிறிது தயங்கினுன். என்ன செய்தும்

திரும்பி விடுவது என்ற முடிவு அவனுக்குப் பிடிக்கவில்லை ஆதலால் தன் போக்கில் வீட்டின் படியேற நின்றன அவன் எதிர்பார்த்ததற்கு நேர் மாருக பானுமதியின் வரவேற்பு இருந்தது வீட்டின் படியேறி வந்தவனை யாராவது, 'எங்கே வந்தீர்கள்? எதற்கு வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்பார்களா? அதுவும் விசுவத்தைப் போய் பானுமதி கேட்கத் துணிவாளா?

அவளுக்கு அவன் வந்ததில் எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. முகமெல்லாம் காலை வேளையில் மலரும் தாமரைப் புஷ்பம்போல மலர்ச்சி யடைந்தது.

"வாருங்கள்" என்று வாய்விட்டு அழைக்கவே அவள் மறந்து விட்டாள். ஆயிரம் பாஷைகள் பயிலுகின்ற கண்களால் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் வெறுமே விசுவம் எதையோ அவளுக்குச் சொல்ல முயற்சி செயதுகொண்டிருந்தான். அது வெறும புன்னகையோடு நின்றது அவன் கண்கள் நாலாபுறமும் சுழன்று பார்த்தன அதிக ஆடம்பரமில்லாத சாதாரண அறை; நடுவில் இரண்டு மூன்று நாற்காலிகள்—ஒரு மேஜை அதன் மேலே நடுப் பாகத்தில் அழகாகப் பொருந்திய கண்ணாடி. விளக்கு வெளிச்சத்திலே மோகினி ஒருத்தியின் முகத்தைப்போல பானுமதியின் பிம்பம் அதிலே புலப்பட்டது. தன் வீட்டைப் போலவே இங்கும் ஒருவித அமைதி நிலவுவதை அவன் கண்டான் ஆனால் அந்த அமைதிக்கும் இங்குள்ள அமைதிக்கும் சூன்யத்துக்கும். சொர்க்கத்துக்கும் உள்ள வித்தியாசமா இருக்க வேண்டும்!

"எங்கே வீட்டில்......" என்று பூர்த்தி செய்யாமல் அவளைக் கேட்டான்.

பானுமதி பார்ப்பதை நிறுத்திவிட்டு "அதைச் சொல்ல நினைத்தேன், இன்று மத்தியான்னமே மறந்து விட்டேன். அம்மா நேற்று ராத்திரி வண்டிக்குத்தான் ஊருக்குப் போயிருக்கிறாள். வர இரண்டு நாள் போல ஆகும்" என்றாள்.

விசுவத்தின் முகத்தில் ஏற்படும் மாறுதலைக் கூர்ந்து பார்ப்பவள்போல, "நிற்கிறீர்களே" என்றாள் மீண்டும்.

"இல்லை. வெறுமே வீட்டில் பொழுதுபோகவில்லை...இப்படி புறப்பட்டேன். ஆனால் நீ மட்டும்தான் இருப்பாய் என்று தெரியாது......"

"சரி, உட்காருங்கள்"

"பரவாயில்லை."

இப்பொழுதே போகவேண்டுமா?"

விசுவம் இதற்குப் பதில்சொல்ல முடியாமல் திணறினான். இரண்டுவிதப் பதில்களில் எதைச் சொன்னாலும் விரோதமாகப்படும்.

"பொழுது போகவில்லை என்று சொன்னேனே. சும்மா இந்தப் பக்கமாய் வந்தேன். வந்தவன் உன்னைப்பார்க்காமல்போகலாமா?" என்றான் ஒருவிதமாக.

"ஆபீசிலிருந்து நேரே இங்கே வருகிறீர்கள் போலிருக்கிறதே! வீட்டுக்கே போகவில்லையா?

விசுவத்திற்கு அப்போதுதான் புரிந்தது அவன் ஆபீஸ் உடையை மாற்றிக்கொள்ள மறந்துபோய் வந்துவிட்டான். வீட்டுக்குப் போய்விட்டு வந்ததாகச் சொல்வதை விட நேராக வந்ததாகச் சொல்வதே நல்லது என்று உடனே அவனுக்குத் தோன்றியது. தெளிவாக எதுவும் சொல்லாமல் சிரித்து மழுப்பிக்கொண்டே, "ஒரு சமயம் காலையில் வரமுடியுமோ, முடியாதோ! இப்போது பார்த்துவிட்டுப் போவோமே என்றுதான் வந்துவிட்டேன். உனக்கு அசௌகரியம்ஒன்றும் இல்லையே?" என்றான்.

'எனக்கும் பொழுது போவது கஷ்டமாகத்தான் இருந்தது. வெளியில் எங்கும் போவதற்குத் துணையும் இல்லை நல்ல வேளை" என்றாள் பானுமதி

காரைவிட்டு இறங்கியதும் பெரிதாகத் தோன்றிய பிரச்னைகள் யாவும் இப்போது அடிபட்டுப் போய் விட்டன. அவன் நிர்விசாரத்துடன் பெருமூச்சுவிட்டான். ஆயினும் அடுத்த கணமே, "உன் அம்மா என்றைக்கு ஊருக்குப் போயிருக்கிறாள் என்று சொன்னாய்?" என்று கேட்டான்.

"நேற்று ராத்திரி"

"எந்த வண்டியில்?"

"மெயிலில்......"

விசுவத்துக்குத் திக்கென்றது. அதே வண்டியில்தான் சுசீலா சென்னைக்குச் சென்றதும். ஆனால் ஒருவரையொருவர் அறியமாட்டார்கள் என்பது நினைவுக்கு வந்தபின்பே அவன் கவலை நீங்கிற்று.

"கொஞ்சம் இருங்கள். இதோ உங்களுக்குக் காபி கொண்டு வருகிறேன்" என்று பானுமதி உள்ளே போனாள். பாலை கும்மட்டி அடுப்பில் சுடவைத்த போது அவள் உடல் எல்லாம ஒருமுறை வேர்த்து விட்டிருந்தது. அவளது நெஞ்சில் நிறைந்திருந்த உணர்ச்சிகள் வெளிப்படாமலிருக்குமாறு பாதுகாத்துக்கொள்ளவே அவள் மறைவாக வந்து தன் முகத்தைத் துடைத்துக்கொண்டாள்.

விசுவம் இதற்குள் வெகுவாகத்தான் பேசவேண்டியவைகளுக்கு ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு விட்டான் தவறு செய்வதற்கு அஞ்சிப் பின் வாங்கிய அவன் நல்ல மனசுக்குத் தோல்வியே ஏற்பட்டது. வெளியிலே குளிர்நிறைந்த அந்த காரத்தின் கரங்கள் அவன் அறிவையும் வந்து சூழ்ந்துகொண்டதுவிட்டன. போலியான பெருமை ஒன்று அவன் மனசில் குடிகொண்டது. தனக்குப் பானுமதியிடத்தில் அந்தரங்கமான காதல் என்பது இதுவரை ஏற்படாத போதிலும் அவளுடைய காதலின் தூய்மை தனக்குத் தெரிவதுபோல அவன் கற்பனை செய்துகொண்டான். பானுமதி தன்மீது கொண்டுள்ள அன்புக்காக எதையும் பணயம் வைக்கத் தயாராயிருக்கிறாள் என்றும் அவனுக்குத் தோன்றியது. ஆனால் அவனுக்கு?

காபி எடுத்துக்கொண்டு பானுமதி வெளியில் வந்து "நான் இனிமேல் அங்கே வரவேமாட்டேன், சே" என்றாள்.

'என்ன நடந்தது, பானு!

"அது நன்றாகவா இருக்கிறது! காரியம் இல்லாமல் நான் அடிக்கடி வருவதும் உங்கள் காரியம வீணாவதும."

விசுவம் அவளுக்கு ஏதோ மிகவும் ஆதரவாகப் பேச விரும்பினான். ஆனால் அதை எப்படி உருவாக்கி வெளியிடுவது என்று தெரியவில்லை. அந்த வார்த்தைகளை அவள் முகம் பார்த்து எப்படிப் பேசுவது! 'வெளியில் போகத் துணையில்லை என்றாயே. வாசலில் வண்டி இருக்கிறது. போய்விட்டு வரலாமா?" என்றுகேட்டான் விசுவம்.

தனக்கும் அவளுக்கும் உள்ள பழக்கத்தில் இந்தக் கேள்வியினால் பழக்கமில்லாத உயரத்துக்குப் போய்விட்டோமோ என்று சிறிது அச்சம் தோன்றியது. ஆனால் பானுமதி, "ரைட், நல்ல யோசனை!" என்றாள்.

(தொடரும்)

விமலா

எல். வி. எஸ். மணியன்

"நீங்கள் வர நாழியாகுமா?" விமலாவின் குரலில் ஒரு ஏக்கம் இருந்தது. "சீக்கிரமே திரும்பிவிந்து விடுங்கள்" என்று வெளிப்படையாகக் கெஞ்சாத கெஞ்சலுமிருந்தது அக் கேள்வியில்.

"இல்லே, நாழியாகாது, சீக்கிரமே வந்துவிடுவேன்" என்ருன் விமலாவின் குறிப்பறிந்து கொண்ட சந்திரநாதன். சந்தோஷமற்ற முகத்துடன் விமலா கேட்டது அவனைக்குத்தியது. வதைத்தது. வருத்தத்தோடும், விரக்தியோடுமிருந்தாலும் விமலாவின் குரலில் மென்மையிருந்தது.

"எப்படியிருந்தாலும், பத்துமணிக்கு முன்பில்லே அவன்வரவு." மாலே வேளைகளில் அவளின்றி, அவன் வெளியில் உலாவச் செல்லாத நாட்களை விமலா ஞாபகப் படுத்தியிருக்கமுடியும். அவள் ஞாபகப்படுத்தியிருக்கலாம். ஆனுல் அவள் அப்படி செய்யமாட்டாள், அதுஅவள் விரதத்திற்கு விரோதமானது. அவள் நாதன் அன்பை, காதலே எவ்விதத்திலும் வற்புறுத்தி அடைய விரும்பவில்லே. மூன்று ஆண்டுகட்குள் இப்படி நேரிடுமென்று கனவிலும் கருதினவளல்ல விமலா.

"மணி பன்னிரண்டு" என்று பெரு மூச்சுவிட்டாள் விமலா. அப்போதுதான் சுவர் கடிகாரம் பன்னிரண்டு அடித்து முடித்தது. நடு நிசியில் "டாண்" "டாண்" என்று அது மணி அடித்தது "இன்னும் நீ தூங்கவில்லேயா?" என்று உலுக்கி எழுப்பிக் கேட்பதுபோலிருந்தது. அந்த ஜடப் பொருளுக்கு அவள் மன வருத்தம் என்ன தெரியப்போகிறது? மக்களின் இன்ப,துன்பம்தெரியாமல், எப்போதுமே ஆடிப் பாடி, ஓடும் விசித்திரப் பிறவிதானே அம் 'மணி காட்டி!'

தன்னுடைய முணு முணுப்பு, முகச் சுளிப்பு, சந்திரநாதனுக்குக் கோபத்தை உண்டாக்கும், தன் மேலிருக்கும் அன்பைக் குறைக்கும் என்பதை விமலா அறியாதவளல்ல. ஆனுல் அவள் அப்படி நடந்துகொள்ளாமல் இருக்க முடியவில்லே. மனிதப் பிறவிதானே அவள் அதிலும் பெண், அவ்வினத்தின் பிறவிக் குணம் அது. கண்ணீர்விடாமலிருக்க இயலவில்லே.

அவள் உள்ளன்புடன் சந்திரனைக் காதலித்தாள் என்பதில் சந்தேகமேயில்லே. அவள் காதலுக்கு எல்லேயேயில்லே. 'அவள்' தன் சந்திரனின் மனதைக் கவர்ந்த 'சிறுக்கி'யிடம் அடக்க முடியாத பொருமை. விமலாவையின்றி வேறு எந்த பெண்ணுயிருந்தால் மட்டும், அத்தகைய பாதகியின் தோளில் கையைபபோட்டு, கட்டிக் குலாவுவாளாக்கும்! இவ்வெண்ணம் அவள் கட்டுப்பாடுகளேயும் மீறி வந்தது. அவளுக்கு நன்மையாயிருந்திருக்கும், ஏன் நாதனுக்குமதான், அவள் மனதைக் கட்டுப்படுத்தாது, தன் துக்கத்தை வெளிக்காட்டியிருந்தால். ஆனுல், விமலா சிறு வயதிலேயே நன்ருக வளர்க்கப்பட்டவள், பழக்கப்பட்டவள், தன் மனதைக் கட்டுப்படுத்தவல்ல திறமையுண்டு அவளுக்கு. அறிவிலிகள், படிக்காத, பட்டிக்காட்டுப் பெண்கள்தான் சச்சரவிடுவார்கள், ஊரைக் கூட்டுவார்கள், நாலுபேர் நகைக்கும்படி நடந்துகொள்வார்கள் என்று அவளுக்குத்தெரியும் அவள் தன் மனக்கட்டுப்பாட்டையும் மீறி நாதன் காதில் விழும்படி "மணி பன்னிரண்டு" என்று மட்டுந்தான் அவளால் சொல்ல முடிந்தது. இச்சொல் அவனே அணுவும் அசைக்காது, ஆனுல் அவன் கோபத்தை மூட்டும், என்பதை நன்ருக அவள் அறிவாள். இருந்தாலும் அவளால் மனதையும், நாக்கையும் முழுமையும் அடக்க முடியவில்லே.

"என்னுல் முடிந்திருந்தால் பத்து மணிக்கே வந்திருப்பேன். சத்தியம் செய்ய என்னுல் முடியாது. நான் சொன்ன நேரத்தில் வருவேனென்று எதிர்பார்க்காதே. எனக்காக நீ சாப்பிடாமல் காத்து இருக்கவேண்டாம்" என்ருன் நாதன். அதோ விமலா அவனைக் கோபமூட்டிவிட்டாள். அவன் குரலில் கோபம் தொனித்தது. அந்த "சட்டைக்காரி"யின் அழகில் சொக்கிப்போய் அவளுடன் குழைந்து, குழைந்து, உரையாடிக் கொண்டிருந்தபோது மணி பன்னிரண்டிருக்குமென எப்படித் தெரியப்போகிறது என்று எண்ணிஞள் விமலா.

சந்திரநாதன், பீரோவில் பதித்திருந்த நிலேக்கண்ணுடியின் எதிரில் நின்றுகொண்டு 'கிராப்' வாரிக்கொண்டிருந்தான். கண்ணுடியில் சோபாவின் கையின் மேல், உட்கார்ந்துகொண்டிருந்த, விமலாவின் முகம் தன்னேயே பார்ப்பதைக் கண்டான். அவன் முகத்திற்கு, மிக அருகிலேயே, பக்கத்திலேயே, நெருங்கித் தென்பட்டது அவள் முகம். வெளிறியிருந்தது அது. சோபையே இல்லே அதில்; சிரிப்பையே காணும், சோகமே குடிகொண்டிருந்தது. கண்களேச் சுற்றி கன்னங்கரேலென்றிருந்தது. கருப்பு வளேயம் ரத்தமும், இல்லே, சதைப்பற்றுமில்லே. அம்முகத்தில், கோரமாகவும், களேத்துப்போயும், வியாதியோடும் காணப்பட்டது. இன்னும் ஆறுமாதத்தில் அவள் தாயாவாள் விமலா குதூகலித்தாள் அல்லது குதூகலிக்க விரும்பிஞள். அவள் எண்ணிஞள் குழந்தை சந்திரனே

தன்னிடம் இன்னும் அதிகமாக பந்தப்படுத்தும், வற்றிய அன்பை சுரக்கச்செய்யும் அவன் பாசத்தை அதிகரிக்கும் என்று. ஆனால் அவனோ அவளிடமிருந்து விலக ஆரம்பித்தான்; அந்த அமெரிக்காக்காரியை சந்தித்ததிலிருந்து. அவள் நாதனிடம் நெருங்கிப் பழகி சகஜமாக, சங்கோஜமின்றி கலகலவென பேச ஆரம்பித்ததிலிருந்தே விமலாவை வெறுத்தான்! ஆனால் ஆறுமாதத்தில் தாயாகப் போகும், அவள் எப்படி தன் நாதனுடன் விரோதித்துக்கொள்ள முடியும்?

"என்னை நீங்கள் விரும்புகிறீர்களா? காதலிக்கிறீர்களா?" என்று திடு திடுப்பென்று விமலா கேட்டாள்.

ஒரு நிமிஷம் நாதன் திரும்பிப் பார்த்தான். வருத்தம் தோய்ந்த, தன்னைக் கூர்ந்து பார்க்கும் அவள் முகத்தை; பின்னர், அவளின் ஊடுருவிப் பாய்ந்து நிற்கும் கண்களை.

நாதன் புன் சிரிப்பு சிரித்தான். ஆனால் விமலா பதிலுக்கு சிரிக்கவில்லை. அவள் முகம் அப்படியே உணர்ச்சியற்று, சலனமற்று, அவனையே ஏக்கத்தோடு, வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தது. திடீரென்று கண்ணீர் தாரை தாரையாய் வழிந்தோட ஆரம்பித்தது விமலாவின் கண்களிலிருந்து.

"இன்று மாலை என்னை உலாவக் கூட்டிக்கொண்டுபோக மாட்டீர்களா?" என்று தாழ்மையாக, வினயமாகக் கேட்டாள் விமலா. அவள் தன்னைக் காதலிக்கும்படி நாதனை வற்புறுத்தக் கூடாது என்ற தன்னுடைய கட்டுப்பாட்டையும் மீறி, அவன் இஷ்டப்படியே போக விடவேண்டும், அவனுக்குக் குறுக்காக நிற்கக்கூடாது என்ற தன் கொள்கையையும் புறக்கணித்துவிட்டு, பிச்சைக் கேட்டாள் என்றால்தான் பொருத்தமாயிருக்கும்.

"விம"லின் (அவன் அன்பாக அழைக்கும் விதம் அது.) கெஞ்சும் குரலைக் கேட்டதும் அவள் அழுவதைக் கண்டதும், முத்து முத்தாக வடியும் கண்ணீரைப் பார்த்ததும், நாதனுக்கு வருத்தம், துக்கம், வெட்கம், வெறுப்பு, கோபம் எல்லாம் ஒரே கணத்தில் உள்ளத்தில் தோன்றியன.

அவள் இன்னும் அழுது கொண்டுதானிருந்தாள். ஒரு வேளை அழுகையை நிறுத்துவதாக உத்தேசமில்லையோ அவளுக்கு? விமலாவின் மூடிய கண்களினின்று, தாரை தாரையாக, அருவியைப்போல, கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. "ப்ளாடிங்" பேப்பரால் மசியை ஒற்றுவது போல, புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துவிட்டு, அழுதுகொண்டிருந்தாள் அவள். கண்ணீர்விட்டு, விட்டு, அழுது, அழுது, அழகு குன்றியிருந்தது விமலாவின் முகம். எல்லாம் அவனால்தான் அவனே, நாதனே, அவனை வெறுத்துக்கொண்டான். ஆனால் "அவளுடைய சாகஸக் கண்ணீருக்கா பயப்படவேண்டும்? ஏமாற வேண்டும்?" என்று தன்னுள் கேட்டுக்கொண்டு, அந்த ஆகாத்தியக்காரி விமலாவையும் வெறுத்தான். ஒரு சொட்டு கண்ணீர் விமலாவின் மூக்கில் வழிந்தோடிக் கீழே விழுந்தது. மூக்கை சேலைத் தலைப்பினால் துடைத்துக்கொண்டாள் அவள். "இவளுக்கு என்ன இவ்வளவு சாகஸம்? ஏன் அழாமல் இருக்கக்கூடாது? படித்த பெண்ணும் படித்த பெண்! சினிமாவில் வரும் நடிகை போல், அழுது, கிழுது ஏன் மனிதனை உபத்திரப்படுத்தவேண்டும்? பட்டிக்காட்டு, படிக்காத பெண் கூட இவளைப்போல, இவ்வளவு மோசமாக, இப்படி நடந்துகொள்ள மாட்டாளே! எதற்காகத்தான் இவளைப்போன்றவர்களை, விதம் விதமாக 'டிரஸ்'கள் தைத்துக்கொடுத்து, டப்பி, டப்பியாக 'பேஸ் பௌடர்' 'ஸ்நோ' வாங்கிக்கொடுத்து அழகான 'பௌண்டன் பேனா'வும் வாங்கிக்கொடுத்து ஸ்கூலுக்கு அனுப்பி, போறாததற்கு 'ட்யூஷன்' வேறு வைத்து, படிக்க வைத்தார்களோ? 'தினசரி'களும் **'வாரப்பதிப்பு'**களும் **"மாத சஞ்சிகை"**களும் விற்பனையாக வேண்டும் என்றோ, படித்துப் படித்து பொழுதைப் போக்குவதற்காகவோவா படிக்க வைத்தார்கள்? என்ன இருந்தாலும் இவள் இப்படி அழுவது கூடாது. எதற்காக அழவேண்டும்? காரணர்?" என்று நாதன் கேட்டான் தன் மனத்தை.

"உன்னைக் காதலிக்கிறாள். தன் உயிரினும் மேலாக உன்னைப் போற்றுகிறாள். தெய்வமாகக் கும்பிடுகிறாள்" என்றது அவன் மனம்.

"அளவுக்கு மீறி ஏன் தன்மேல் அன்பை வைக்க வேண்டும்? அதுவும் இப்போது வைக்கவேகூடாது. இது சாகஸம், பெண்கள் உடம்போடு பிறந்த சாகஸம்" என்று நாதன் தன்னுள் சொல்லிக்கொண்டான்.

விமலா சேலைத் தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக்கொள்ள ஆரம்பித்தாள். அழுது பயனில்லை என்றோ, என்னவோ? அவளுக்கே வெட்கமாகப் போய்விட்டது. அற்ப விஷயத்திற்கு அழுது "ஆர்ப்பாட்டம்" செய்துவிட்டோமே என்று எண்ணினாள்.

அவனோ, தன்னைப்பார்த்து தானே நாணமடைந்தான். கணப்போதுதான் அந்த நாணமெல்லாம். விமலாதான் அவன் வெட்கத்திற்குக் காரணம், என்று மறுபடியும் அவனுடைய மனம் சொல்லிற்று "அவள் அழுவதற்கு அவள்தான் காரணம். அவள் தன் "டீச்சர்" வேலையை விட்டே யிருக்கக்கூடாது. விடாமலிருந்தாளானால், அவளுக்கும், பொழுது போக்காக, அந்த வேலை இருந்திருக்கும், அவள் கவனமும், சிரத்தையும் வேறு பக்கம் கொஞ்சம் திரும்பியிருக்கும். சதா "என்னை" "என்னை" நினைத்து, அழுது, ஆகாத்தியம் செய்யாமலிருக்கலாம்.

"ஆனால், நான்தானே. அவள் டீச்சர் வேலையை விட்டுவிடுகிறேன் என்றதும் "ரொம்ப சரி, நானே, உன்னை விட்டுவிடும்படி சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தேன்" என்றது,

"ஆனால் அவளுக்குப் புத்தி எங்கே போயிற்று? நானாகவே 'டீச்சர்' வேலையை விட்டுவிடு என்று சொன்னாலும் "மாட்டேன்" என்று அவளல்லவோ மறுத்திருக்க வேண்டும். அதிகமாக, நெருங்கிப் பழகப் பழக, அன்பு தேயும் என்பதை அவள் உணர்ந்திருக்க வேண்டும். கூடுமானவரை பிரிந்து இருந்தால் தான், அன்பு நீடித்திருக்கும், எப்பொழுது பார்ப்போம்? சந்திப்போம்? பேசுவோம்? என்ற 'ஆகலாதம்' 'ஆவல்' எப்பொழுதுமிருக்கும் என்பதை தெரிந்துகொள்ளக்கூடிய அளவு இவள் படிக்கவில்லை!"

அவன் அங்கீகரித்ததைத் தானே அவள் செய்தாள்! தானாக அவனைக் கலந்துகொள்ளாமல் ஒன்றும் செய்துவிடவில்லையே அவள். எல்லாவற்றையும் அவள் தியாகம் செய்தாள் அவனுக்காக. பொருள் அன்பு, வேலை எல்லாவற்றையும், அவனது அந்தரங்க அன்பு ஒன்றை மட்டும் நாடி அதைப் பெற்றுவிட்டோம் என்ற நிச்சயத்தில், ஆனந்தத்தில்தானே தனக்கு இன்பமான அந்த உபாத்திமைத் தொழிலை விட்டுவிட்டாள் விமலா.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட விமலா சிரித்தாள். **'வால் லாம்ப்'** சிம்மினியை பாதிக் கரி போயும் போகாமலும், துடைத்துவிட்டு, விளக்கு ஏற்றினால் அது எவ்வளவு பிரகாசமாக இருக்குமோ, அப்படி இருந்தது நாதனுக்கு அவள் சிரிப்பு. சிறு குழந்தையைப்போல சின்ன விஷயத்திற்குப்போய் அழுதது விமலாவுக்கு வெட்கமாக இருந்தது. ஆகவே உடனே அவள் சிரிப்பை வரவழைத்துக்கொண்டாள்.

இன்னொரு சாகஸம்! என்னை ஏமாற்றப் பார்க்கிறாள். இப்படி சிரித்துவிட்டதால் ஏதோ தான் விட்டுக்கொடுத்துவிட்டதாக எண்ணம் இவளுக்கு! மானம், அச்சம் ஏதாவது இருந்தால் இப்படி இவள் நடந்துகொள்வாளா? என்னதான் இருப்பினும் கர்ப்பிணி, வருத்தத்தை, துக்கத்தை, கொடுக்கும்படி நடந்துகொள்ளக் கூடாது" என்று அவன் மனம் சொன்னதும், நாதன், விமலா அருகில் சென்று அவளை அணைத்துக்கொண்டான். ஆனால் அவன் அணைப்பில் அன்பு இல்லை. 'மேலுக்கு வாழ்க்கைப்படுகிறேன், கழுத்தே சுகமாயிரு!" என்பதுபோல இருந்தது விமலாவிற்கு சந்திரநாதனின் அணைப்பு

அவள் முகத்தில் விழுந்திருந்த மயிரைத்தள்ளிவிட்டுக்கொண்டே "விமலா" என்று சிறு குழந்தையை சமாதானம் செய்வது போல, தன் மார்பின்மேல் அவளை சாய்த்துக்கொண்டு "நான் கட்டாயம் இன்று போகவேண்டும்......"

"என்றைக்குத்தான் உங்களுக்குப் போகவேண்டிய அவசியமில்லை? நாளைக்குப் போங்களேன். இன்றை ஒரு நாள் வெளியில் போகாமல் போனால் என்னவாம்?"

"நான் சொல்வதை சரியாகக் கேட்டுக்கொள்ளாமல் பேசுகிறாயே விமல் அமெரிக்காவிலிருந்து **ஹென்றி** என்று ஒரு பெரிய வைத்திய நிபுணர் வந்திருக்கிறார். அவருக்கு நம் நாட்டு **'ஆயுர்வேத வைத்திய"**த்தைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவா. அதற்காக நம் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். நம் மாகாணத்திற்கு அவர் வந்திருக்கிறார். ஆயுர்வேத வைத்தியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் சேர்ந்து அவருக்கு ஒரு **'விருந்து'** கொடுக்கிறோம். அதற்கு நான் போய்த்தீரவேண்டும்" என்று இன்னும் இறுக அணைத்துக் கொண்டான் அவளை.

அவள் கண்ணீர் அவன் கைகளை நனைத்தது.

"அழாதே விமலா" என்றான் சந்திரநாதன். தன் குற்றத்தை அவன் உணர்ந்துவிட்டதுபோலிருந்தது அவளுக்கு அவன் குரல்!

"இல்லை, அழவில்லை" என்றாள். ஆனால் அவனை நனைத்துக்கொண்டிருந்தது அவள் கண்ணீர்.

"விமலா! நீ போகவேண்டாமென்றால் போகவில்லை. "எனக்கு உடம்பு சுகமில்லை" என்று ஒரு சீட்டு எழுதி அனுப்பி விடுகிறேன்.

"வேண்டாம்! நீங்கள் போங்கள்"

"இல்லை. நீ மனசோடு சொல்லவில்லை. நான் போகமாட்டேன்."

"இல்லைன்னா! நிஜமாகத்தான் சொல்கிறேன். நீங்கள் போங்கள்" என்று அவனை நிமிர்ந்து பார்த்து சிரிக்க முயற்சித்தாள். "எனக்கு சுயநலம் நிரம்பவும் அதிகம். உங்களைப் பிரிய மனமில்லாமல் அழுது ஆர்ப்பாட்டம் செய்துவிட்டேன். நீங்கள் அந்த அமெரிக்கரை, சந்திக்காமலிருப்பது தப்பு, போய்விட்டு வாருங்கள்."

"இன்றைக்கு சந்திக்கவில்லையென்றால், நாளைக்கு இன்னொரு இடத்தில். 'தேநீர்' விருந்து, நடக்கிறது. அதற்கும் எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. அங்கே சந்தித்துக்கொள்ளுகிறேன் அவரை என்றான் நாதன்

முதலில் அவளுக்கு எதிராகப் பேசினான். போகமாட்டேன் என்றான். இப்பொழுது அவளே போகவேண்டுமென்பதால், கட்டாயம் மாட்டேன் என்று துணிந்து சொல்லலாம்! ஏனென்றால் விமலா அவன் போகவேண்டிய அவசியத்தைத் தெரிந்து கொண்டுவிட்டாள்! இப்பொழுது அவன் விட்டுக்கொடுப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும்! பிகு பண்ணிக்கொள்ள வேண்டும். அவளுக்காக, அந்த அமெரிக்கரை சந்திக்காமல் இருப்பதாகக் காட்டிக் கொள்ளலாம்! அவளுக்காக அரிய சந்திப்பை, தியாகம் செய்வதாகக் காட்டிக் கொள்ளலாம்! எல்லாம் ரொம்ப கஷ்டமில்லாமல்! மிகவும் சுலபமாக! வெறும் ஏமாற்றல் செப்பிடு வித்தை! தகிடு தத்தம்! ஜாலவித்தை!

“நன்றாயிருக்கு! எனக்காக, ஆபூர்வமாக அத்திபூத்ததுபோல வருபவர்களை, நீங்கள் சந்திக்காமல் இருப்பதா? இன்றைக்கும் சந்தித்து, நாளைக்கும் இன்னொரு முறை சந்தித்து, நெருங்கிப் பழகி சிநேகம் செய்துகொண்டால் ‘ஒக்காளித்து, விடுமா?’’ என்று அவன் நினைத்தபடி அவள் நிரம்பவும் வற்புறுத்தியதும், சந்திரநாதன் போவதாக ஒப்புக்கொண்டான். ஏதோ அவள் விருப்பத்தைப் பூர்த்திசெய்யவே போவதாகக்காட்டிவிட்டான்! அவ்வளவுதானே அவனுக்கு வேண்டியது! ‘விமல்’ கோட்டைப் போட்டுவிட்டாள். பூட்ஸையும் போட்டாள். கலைந்து போயிருந்த “கிராப்”பை அவளே வாரிவிட்டாள். கழுத்து “டை”யைச் சரிபண்ணி விட்டாள். இரவு திரும்பி வரும்போது பனிவிழ ஆரம்பித்துவிடும் என்று “மப்ளரை”யும் “ஸ்கார்ப்”பையும் கொண்டுவந்து கொடுத்தாள், இப்படி நடந்துகொள்வது நல்லது, அவன் வழியே போக விடுவதே நன்று, தடுத்து குறுக்கே நின்று, வழி மறித்து அவன் கோபத்திற்கு ஆளாகி, அவன் அன்பை பறிகொடுப்பதில் பயனில்லை. அவன் இஷ்டப்படி போகாவிட்டால், தன்னை நேசிக்க, நிரம்பவும் நேசிக்க ஏது உண்டல்லவா?

நாதன் போனபின் கதவை மூடிக்கொண்டு நிலவொளியில் வந்தான். முன் நிலா. இருட்டினதுமே நன்றாக நிலவு வெளிச்சம் தெரிந்தது. கன்னம் வைத்த வீட்டிலிருந்து வெளிவரும் திருடனைப்போல அப்பொழுது அவன் காணப்பட்டான். அந்த திருடனைப்போலவே, தெருவிற்கு வந்ததும் ‘அப்பாடி’ என்று நன்றாக மூச்சுவிட்டான். நாதன் நிம்மதியாக சுவாஸம் வாங்கினான். இப்பொழுது அவனுக்கு விடுதலை, இன்னும் நாலைந்து மணிநேரம் பந்தமில்லாது, கவலையற்று, இருக்கலாம். “நீங்கள் கட்டாயம் இன்றைய ‘விருந்துக்’ குப் போயே தீரவேண்டும் உங்கள் அன்பை வெள்ளமா அடித்துக் கொண்டு போய்விடும்? இன்றைக்கில்லையானால் நாளை சாயந்திரம் உலாவப்போனால் போகிறது’’ என்று பெருந்தன்மையாய் அவன் வராண்டாவிற்கு வந்ததும் அவள் சொன்னது, அவனை என்னவோ வேதனை செய்தது, ‘ஏகத்தாளம்’ செய்வதுபோலிருந்தது. என்னைப் போல உங்களுக்குப் பரந்த மனமில்லையே’’ என்று சுட்டிக்காட்டி, இடித்துக்காட்டி, கேலிசெய்வது போலத்தோன்றியது.

“நான் போகவேமாட்டேன். நாளைக்குப் போய்க் கொள்ளுகிறேன்’’ என்று நடித்தது என்ன பொய்! என்ன பித்தலாட்டம்! செய்த சூழ்ச்சி! அதை உணர்ந்ததும் அவனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அவமானம் தாங்க முடியவில்லை. விமலாவோ நல்ல வேலையில், டீச்சர் வேலையில் தானிருந்தாள். ஆனால் அவ்வேலையைவிட்டது சந்திரனால் தான். பணத்திற்காகவே அவள் அந்த உத்தியோகம் செய்யவில்லை. கௌரவ ஆசிரியையாகத்தான் இருந்தாள். தன் துக்கத்தை மறக்க ஒரு சிறு உலகத்தையே, அந்த வேலையில், அவள் சிருஷ்டித்துக்கொண்டிருந்தாள். சின்னஞ்சிறு குழந்தைகள். அவர்களுக்குப் பாட்டு சொல்லிக்கொடுத்தாள் அவர்கள் சண்டை போட்டுக் கொள்ளுவதும்’ அதை இவள் விலக்குவதும், போன்று மிகவும் சந்தோஷமாக. பொழுதை துக்கமே தெரியாது கழித்து வந்தாள். சந்திரனின் திறமையால் கண் பார்வை பெற்றதும், நாட்டியமும், பாடங்களும்கூட குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுத்தாள். அவர்கள் விளையாட்டில், தளர் நடையில், தன் மனதைப் பறிகொடுத்து ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்தாள். ‘டீச்சர்’ ‘டீச்சர்’ என்று மழலை மாறாமல் சிறு குழந்தைகள் கூப்பிட்டுக்கொண்டு ஓடி வந்து, சின்னஞ்சிறு கைகளை கழுத்தில் கோத்து கட்டிக்கொண்டு, ‘பாலர் வகுப்பு’ குழந்தைகள் கொஞ்சினதை இன்றும் அவளால் மறக்கவே முடியவில்லை. அந்த இன்பங்களையெல்லாம் நாதனின் அன்பிற்காகவே, கைவிட்டாள், அர்ப்பணம் செய்தாள்.

கண்ணீர் மடை திறந்ததுபோல ஓடி வழிந்தது நாதன் எத்தனை அன்பாக ‘ஆசையாக, ஆதரவாக அவளிடம் இருந்திருக்கிறான். ஆனால் இப்போது...? அவன் புதிய மனிதனாக, வேறு மனிதனாக மாறிவிட்டான்! ஒரு கொடிய மிருகமாக ஆய்விட்டான்! மிருகத்தின் கொடுமையும், இச்சையும் அவனிடம் காணப்பட்டன.

“அவன் எப்படி இவ்வளவு துர்குணமுள்ளவனாக முடியும்? அவனா இப்படி மாறிவிட்டான்? அவன் எவ்வளவு சாதுவாகவும், சாந்தமாகவும், விட்டுக்கொடுக்கக்கூடியவனாகவும், சுயநலமற்றவனாகவும், நல்லவனாகவும் இருந்தவன்! அவனுடைய குணமும், சாந்தமும், அல்லவோ அவளை மயக்கின! இருவரும் சேர்ந்து குடும்பம் நடத்த ஆரம்பித்த புதிதில், அவன் எவ்வளவு சந்தோஷமாகயிருந்தான். அவனைக் கண்ணைக் கொடுத்த கடவுளாகப் போற்றினாள், போற்றுகிறாள், என்றும் போற்றுவாள். ஏனெனில், கற்பரசிகள், கண்ணகி, நளாயினி, தோன்றிய நாட்டில், பாரத புண்ணிய பூமியில் பிறந்தவளல்லவா அவள்?

இந்தக் ‘காதல் கல்யாணமே’ இப்படித்தான் முடிகிறது. காதலித்துகல்யாணம்செய்துகொண்ட எந்தப் பெண்தான் சந்தோஷமாக வாழ்ந்திருக்கிறாள்? **‘ரோமியோ–ஜூலியட்’** ஆகட்டும், **‘ஷிரின்-பர்ஹாத்’’** ஆகட்டும், **“அமராவதி-அம்பிகாபதி’’** யாகட்டும், ஏன்? **“நள-தமயந்தி’’ “சாவித்திரி-சத்தியவான்’’** யார்தான் துன்பவாழ்க்கை நடத்தாமலிருந்திருக்கிறார்கள். **‘காதல்’‘காதல்’**. அது எல்லாம் கதையில், நாவலில் படிப்பதற்குத் தான் இனிப்பாயிருக்கிறதேஅன்றி,

வாழ்க்கையிலே, இவ்வுலக வாழ்க்கையிலே, கசப்பாகத்தானிருக்கிறது. 'ஏட்டுச் சுரைக்காய்' போல் காதல்' வாழ்க்கை பிரயோஜனப்படுவதில்லைதான். ஒரு விதத்தில் இல்லாவிட்டால், இன்னொரு விதத்தில் ஏன் இந்தக் 'காதல் மணம்' செய்து கொண்டோம் என்று வருந்தாத காதல் தம்பதிகள் எத்தனைபேர் இந்த உலகில் இருக்கிறார்கள்! அவர்களோடு விமலாவும் சேர்ந்துவிட்டாள்!

நாதன் கோபமாகப் பேசாமல் உட்கார்ந்திருந்தான் "ஏன்? என்னுடன் பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்" என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை. ஜன்னலின் வெளியே பார்த்துக்கொண்டு, சிகரெட் பிடித்துக்கொண்டு புகை விட்டுக்கொண்டிருந்தான்.

"ஊமையாய் விட்டீர்களா?" என்று அவன் இடுப்பில் தன் கையைக் கொடுத்து அணைத்துக்கொண்டு "ஏன்? இப்படி 'உம்' முன்னு உட்கார்ந்திருக்கேள்? மௌன விரதமா? காந்திஜீயிடமிருந்து கற்றுக்கொண்டு விட்டீர்களோ? காந்திஜீக்கும், உங்களுக்கும் ஏணி வைத்தால்கூட எட்டாது என்பது ஞாபகமிருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு, "வெடுக்"கென்று 'கிள்ளி' விட்டாள். இது எதிர்பாராததால் வலி பொறுக்காமல் நாதன் கூச்சலிட்டான். "இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!" என்று சிரித்தாள்.



திடீரென்று சந்தடியற்ற ரோட்டில், பூட்ஸின் 'டக்' 'டக்' என்ற சப்தம் கேட்டது. நிச்சயமாக விமலாவிற்குத் தெரியும் அது நாதனுடைய பூட்ஸுகளின் சப்தம் என்று. சப்தம் அருகில் வந்தது. மிகவும் அருகில் வந்துவிட்டது. அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. அதோ! இன்னும் அருகாமையில் வந்துவிட்டது சப்தம். நாதன் வரவை ஆவலோடு எதிர்பார்த்து, பார்த்து வாயிலுக்கும், உள்ளுக்கும் இருப்புக்கொள்ளாமல், முன்பு நாழிக்கு நூறுதரம் நடந்ததுபோக, அவன் பூட்ஸ் சப்தமே இப்போது அவளுக்கு வீண் பயத்தைக் கொடுத்தது.

சந்திரநாதன் வந்ததும், "என்ன செய்யவேண்டும்? என்ன செய்வேன்? எப்படி நடந்துகொள்ள வேண்டும்? நடந்துகொள்வேன் என்பதை சிந்தித்தாள். கண்ணீர் விடுவாள் அவளை அறியாமலே அவளுக்கு அழுகைவரும் அடக்க முடியாத துக்கத்தில், தன்னையும் மீறி அவள் என்ன சொல்வாளோ என்று யோசித்தாள். அவள் செய்கையையும், சொல்லையும் கேட்டு நாதன் என்ன சொல்வான்? செய்வான்? நினைப்பான்? அதை கற்பனை செய்துகொண்டு பார்க்க அவளுக்குச் சக்தியில்லை? இல்லை மனமில்லை! பயப்பட்டாள்; காலடி சப்தம் திரும்பிச் சென்றது. எழுந்து படுக்கையில் உட்கார்ந்திருந்தவள் படுத்துக்கொண்டாள். தூக்கம் வந்தால் நல்லது கவலையால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. கண்கள் வலித்தன. பெரிய பாரத்தை தூக்கிவைத்திருப்பதுபோல கனமாக இருந்தது அவள் இரு கைகளும் மார்பின்மேல் பின்னிக் கிடந்தன. உடம்பு கொதித்தது. சலனமற்று படுத்துப்பார்த்தாள். தூக்கம் வரமாட்டேன் என்று 'அடம்' செய்தது. திரும்பித் திரும்பிப் புரண்டாள் மணி மூன்று அடித்தது. விடியற்காலை நாதனுக்கு, எனக்கு, உடம்பு சரியாயில்லையென்று தெரியும். "இதை அவர் சட்டை செய்யவில்லையே?" இதை உரக்கச் சொல்லிக்கொண்டாள் விமலா.

(தொடரும்.)

சென்னை பால்காரர் பிரார்த்தனை!

நீலம்



1

குடியிருக்க வீடு தேடி தம்பல் மிக்கப் போடுறார்
குடிக்கத் தண்ணி கேணி நாடி குதித்தெழுந்து ஓடுறார்!

2

ஏற்றச் சாலைப் பிடித்து இழுத்து எட்டி யெட்டிப் பார்க்குறார்
ஊற்றைத் தோண்டி சேற்றைவாரி உயரமேடாப் போடுறார்!

3

மாடு, கன்னு வச்ச நம்ப பாடு என்ன ஆவது?
வீடு வீடாய் பால்கொடுக்க கூடுமோ நீரோடுமோ?

4

அடுக்கு,தவலை,அண்டாவெல்லாம் ஆகாசத்தைப் பாக்குது!
முடுக்கித் திருப்பி முண்டினாலும் ஒழுகுது குழா அழுகுது!

5

நாழிப்பாலை வெள்ளமாக்கும் நம்பவேலை போச்சுதே
ஊழிக் காலக் கொடுமையெல்லாம் ஒன்றுசேர லாச்சுதே!

6

அளவிலாமல் தண்ணி ஊற்றி அளந்தமென்பதுண்மையே
களவு கற்ற துளபமாலைக் கண்ணா எம்மைக் காவுமே!

7

பிழை பொறுத்து விழைந்து இந்த மழைபொழியச் செய்யுமே
குழைந்து குமுறும் எம் வயிற்றைக் குளிரச்செய் இந்நேரமே!

8

ஜலத்தில் பாலைக் கலக்க மாட்டோம் நிச்சயம் இது சத்தியம்!
நலத்தை நாடி நானிலத்தில் நாங்கள் சேவை செய்குவோம்!

9

வெண்ணெய் தின்னும் வேணு பாலா என்ன இந்தச் சோதனை?
கண்திறந்து எம்மைச் சற்று **சென்னைப்** பக்கம் பாருமே!

10

கருணை வெள்ளம் பெருகு கண்ணா வருணன் வரவே ஏவுமே!
தருண மிதுவே சரணம் சரணம் அருள் சுரக்க வேணுமே!



சினிமாவும் முதலாளியும்

[சாண்டில்யன்]

'என் கணவர்' என்ற உரிமையால் அவரை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறாள்போலிருக்கிறது. அஜித் பிக்சர்ஸின் இந்தப் படம் ஸாகரிலும், ஸெலக்டிலும் வெளிவரும்.

சினிமா முதலாளியாயிருப்பவருக்கு முக்கியமாக நாணயம் வேண்டும். நாணயம் எல்லாருக்குந்தானே வேண்டும். அது இல்லாதவன் ஒரு முதலாளியா என்று கேட்காதீர்கள். இங்கு நாணயம் என்பதற்குப் பணம் என்று பொருள் இல்லை. யோக்கியதையைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறேன். சினிமா முதலாளியென்பவர் நல்ல யோக்கியதையுள்ளவராயிருக்க வேண்டும். ஏனென்றால் சினிமா முதலாளிக்கும் மற்ற முதலாளிகளுககும் அடிப்படையான ஒரு வித்தியாசம் உண்டு.

சினிமா முதலாளிக்கு முதலாளி என்ற பெயர் வந்ததற்கு முக்கிய காரணம் ஒன்றிருக்க வேண்டும். பிறத்தியாருடைய முதலை ஆள்வதால்தான் அவருககு சினிமாவில் முதலாளி என்று பெயர். மற்ற முதலாளிகள் சொந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஜாக்கிரதையாயிருக்கிறார்களென்றால் இவர் பிறத்தியார் பணத்தை வைத்துக்கொண்டு விளையாடுகிறார்.

விளையாடுகிறார் என்ற வார்த்தையை நான் பொறுப்பில்லாமல் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். நீங்கள் யாராவது தென்னிந்திய பிலிம் சேம்பருக்குப்போய் பின்வரும் கேள்விகளைக் கேளுங்கள்: சினிமா முதலாளிகளில் எவ்வளவு பேர் படம் பிடித்து அதன் மூலம் மூலதனம் சேர்த்து அந்த தனத்தைவைத்துக்கொண்டு படம பிடிக்கிறார்கள்? ஒரு படம் வெற்றிகரமாக ஓடினால் 8 லட்சம், 10 லட்சம் என்று கிடைக்கிறதே இதை பிற்பாடு என்ன செய்கிறார்கள்? கடனில்லாத சினிமாக் கம்பெனிகள் எவ்வளவு இருக்கின்றன? இலங்கைத் துரைகளிடமும், பம்பாய் மார்வாரிகளிடமும், ஹைதராபாத் லேதாதேவிக்காரர்களிடமும் அடகு வைக்காத படங்கள் எத்தனை?

இந்தக் கேள்விகளைக் கேட்டால் முதலில் பதில் கிடைப்பது கஷ்டம். ஏனென்றால் பிலிம் சேம்பர் பிலிம்முதலாளிகளின் ஸ்தாபனம். அப்படி பதில் கிடைத்தாலோ பாதி கம்பெனிகள் பிறருடைய மூலதனத்திலேயே ஜீவிக்கின்றன

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

கிணத்தடியில் குடத்தைப் பிடித்துக்கொண்டான் அவள் மனத்தையும் பிடித்தானே? ஜூபிடர் 'வேலைக்காரி' ராஜம்மா. நம்பியாரை வேண்டினாளோ அவர் கிடைத்தார்.

சினிமாவும் முதலாளியும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

என்பதைத் தெரிந்துகொள்வீர்கள் இவ்வளவு பேர் சினிமாவை நம்பி மூலதனம் போட்டிருந்தும் நமது சினிமாத் தொழில் ஏன் அபிவிருத்தியடையவில்லை என்று ஆச்சரியமும் படுவீர்கள்.

இதில் ஆச்சரியப்படவேண்டிய விஷயம் அதிகமில்லை. முதன் முதலாக முதலைப்பற்றிச் சொன்னேனே அந்த விஷயத்தில் நாணயம் ரொம்ப குறைவாயிருப்பதால் தான் சினிமாத்தொழில் மிகவும் சீர்கேடு அடைந்திருக்கிறது சினிமா முதலாளிகள் 100-க்கு 85-பேர் எதற்காகப் பணம் கிடைக்கிறதோ அந்தக் காரியத்துக்காகப் பணத்தைச் செலவழிப்பதில்லை பணத்தைக் கொடுத்த மனிதன் முதலில் சினிமாக் கம்பெனிக்கு வரும்போது மிகவும் டாம்பீகமாய் டாக்ஸியில் வந்து இறங்குகிறார். சினிமாக் கம்பெனியின் குஷன் சேரிலும் சுவரில் சுற்றிலும் மாட்டியிருக்கும் பழய படங்களின் மாதிரி போட்டோக்களையும் பார்த்து மயங்கி சில லட்சங்களை இளக்குகிறார். டாக்ஸியில் வந்த இதே மனிதன் சில நாட்களுக்கெல்லாம் பட்டணத்தில் நடை பழகுகிறார். தவிர தன்னிடம் பணம் வாங்கிய சினிமா முதலாளி தெருக்கொள்ளாத பெரிய காரில் பலபேர்களுடன் வேகமாகப்போய் கொண்டிருப்பதையும் கவனிக்கிறார். படத்திற்காகத்தான் வேலை இவ்வளவு மும்முரமாக நடக்கிறதென்று நினைக்கிறீர்களா? அதுதானே இல்லை.

"என்னுங்க! படம் எப்போ வருங்க?" என்று பணம்கொடுத்த மனிதன் வினவுகிறார்

"அவசரப்படாதீங்க. சினிமாவிலே வந்து அவசரப்பட்டா நடக்குங்களா? அதுவும் நம்ப டைரக்டர் 'மத்ததெல்லாம்' ஒழுங்கானாலொழிய செட்டுக்கே போகமாட்டாரே" என்று பதில் கிடைக்கிறது

"மத்ததெல்லாம்" என்பது எதைக்குறிக்கும் என்று யோசிக்க பணம் கொடுத்தவருக்குத் தோன்றுவதில்லை. யோசித்தான் றினால் பதில் சொல்லவும் ஆள் கிடைப்பதில்லை. ஏனென்றால் இவரிடம் பேசும் அதேசமயத்தில் சினிமா முதலாளியென்பவர் இன்னும் எட்டு பேரோடு ஏககாலத்தில் பேசி அஷ்டாவதானம் செய்துகொண்டிருப்பார். பணம் கொடுத்தவரைக் கவனிக்கவோ ஒழுங்காக அவருக்குப் பதில் சொல்லவோ மாட்டார். இந்த நிலையில் ஒரு முறை பணம் கொடுத்த மனிதன் இரண்டாந் தடவை திரும்பி இந்தத்தொழில் பக்கம் திரும்பி வருவதில்லை. விட்டால் போதுமென்று வந்ததைப் பற்றிக்கொண்டு சவாரிவிடுகிறான். இல்லையானால் தானே தனிக் கம்பெனி ஆரம்பித்து இந்த தந்திரத்தை மற்றவர்களிடம் உபயோகித்து ஆரம்பித்து சினிமா முதலாளி என்ற டைட்டிலை வாங்கிக்கொள்கிறான்.

இந்தக்காரணத்தினால் தான் தென்னிந்தியாவில் அதுவும் முக்கியமாகத் தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் துவங்கும் முககால்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

ஸ்டூடியோக்களில் என்ன நடக்கிறது?

சதா சர்வகாலமும் வேலை நடந்துகொண்டிருக்கும் ஒரு ஸ்டூடியோ உண்டென்றால் அது கீழ்ப்பாக்கத்திலிருக்கும் நியூடோன் ஸ்டூடியோ தான் நாலா பக்கங்களிலும் சாமான்கள் குவிந்து ஏதோ பெரிய யந்திரசாலை போலிருக்கும் இந்த ஸ்டூடியோவில் தந்திர வேலைகள் அசாத்தியம. ஏழைப்படப்பிடிப்பாளருக்கு இருப்பிடமாகவும, பணக்காரர்களுக்குப் புகலிடமாகவும் உள்ள இந்த ஸ்டூடியோவின் சரித்திரம் விசித்திரமானது.

ஜூபிடர் 'வேலைக்காரி' யில் லலிதா பத்மினி நாட்டியம்.

இங்கு வரும் பட முதலாளிகள் தினம் ஒரு தடவை "இனிமேல் இந்த ஸ்டூடியோவில் படம் பிடிப்பதில்லை" என்று பிரதிக்ஞை செய்துகொள்வார்கள். ஆனால் மறுபடியும அந்த ஸ்டூடியோவில் தான் படம் பிடிப்பார்கள். இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்க்கையைப் போலத்தான் நியூடோன் ஸ்டூடியோ வசதியும் கஷ்டமும் சுகமும் நிறைநதது.

நியூடோனிடம் பட முதலாளிகள் அபிமானம் கொண்டிருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. படம் பிடிப்பவர்களின் கஷ்டங்களை நியூடோன் சொந்தக்காரர்கள் நன்ருக அறிந்தவர்கள். அதற்குத் தக்கபடி ஸ்டூடியோ திட்டங்களை சரிப்படுத்தியும் பண விஷயங்களில் முன்பின்னுக 'அட்ஜஸ்ட்' செய்துகொண்டும் 'கால் ஷீட்' கொடுத்து பட முதலாளிகளுக்கு உதவுகிருர்கள். இன்றைய தேதியில் நியூடோனில் முழுசாகப் பிடிககப்பட்ட படங்களைத்தவிர அரை வாசி, அரைக்கால் வாசி பிடிக்கப்பட்ட படங்களின் எண்ணிக்கைமட்டும் சுமார் 150-ககு மேல் இருககும். நியூடோனில் இருக்கும் படப் பிடிப்புக்கூடங்கள் இரண்டுதானென்பதையும் பட முதலாளிகள் எண்ணிக்கையற்றவர்களென்பதையும் தெரிந்துகொண்டால் "இத்தனை

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

சினிமாவும் முதலாளியும்

[முன்பக்கத் தொடர்ச்சி]

வாசிப் படங்கள் பூர்த்தியாவதில்லை. சினிமாக் கம்பெனிகள் தமிழ்நாட்டில் அபிவிருத்தியடைய வேண்டுமென்ருல் சினிமா முதலாளிகள் தங்கள் மனோபாவத்தைப்பெரிதும் மாற்றிக்கொள்ள வேண்டும். கிடைக்கிற லாபத்தை வைத்துக்கொண்டு கம்பெனியை திடப்படுத்துவதில் முனையவேண்டும். கம்பெனி சூழ் நிலையை கூடிய வரையில் உயர்ந்த தன்மையிலும் நாலு பெரிய மனிதர்கள் உள்ளே நுழைய சம்மதிக்கும்படியாகவும வைத்துக்கொள்ள வேண்டும். இந்த மாதிரி சில தமிழ் கம்பெனிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் பெருவாரியான கம்பெனிகளில் நாணயம் குறைவாகத்தான் இருக்கிறது.

சினிமாக் கம்பெனிகளில் பல இப்பொழுது பணம் இல்லாமல் தடுமாறுவதற்குப் பல காரணங்களைச் சொல்கிருர்கள். அந்தக் காரணங்களில் பெரும்பாலான காரணங்களை ஒப்புக்கொள்ள முடியாது ஏனென்ருல் யுத்த காலத்தில் பிடிக்கப்பட்ட எந்தப் படமும் தமிழ்நாட்டில் நன்ருக ஓடியிருக்கிறது. படம் ஆரம்பிக்கு முன்பே விநியோகஸ்தர்கள் நான், நீ என்று போட்டிக்கொண்டு மேலே விழுந்து வாங்கினுர்கள். மூன்று லக்ஷ ரூபாயில் பிடிக்கப்பட்ட படங்கள் 8 லக்ஷத்துக்கும் பத்து லக்ஷத்துக்கும் விற்பனையாயின இவ்வளவு அபரிமிதமாகக் கிடைத்த லாபத்தை சினிமா முதலாளிகள் என்ன செய்தார்கள்? படப்பிடிப்பில் முனைந்து விநியோகஸ்தர்களிடம் படத்தை சீக்கிரமாகப் பிடித்துக் கொடுத்தார்களா? இடையவே கிடையாது. விநியோகஸ்தர்கள் ஒப்பநதத்தில் கையெழுத்து போட்டு அட்வான்ஸ் கொடுத்த பிறகு சாதக பக்ஷிமாதிரி படம் வருமா வருமாவென்று காத்துக்கொண்டிருந்தார்கள் ரொம்ப எதிர்பார்த்துத் தலையில் கை வைத்துக்கொண்ட பேர்வழிகள் அனந்தம்.

இத்தனை அனுபவத்துக்குப் பிறகும் வெளி ஆசாமி முதல் போட வருவான் என்று சினிமா முதலாளி நம்புகிருரா? ஆம், நம்புகிருர். அதுதான் ஆச்சரியம் "ஏன் ஐயா படம் பிடிககவில்லை?" என்று கேட்டால் "மணிமார்க்கெட்டைட் ஆயிடுத்துஙார்" என்கிருர். யுத்தத்துக்குப்பின் ஏற்படும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுதான் இருக்கிறது. ஆனல் இவருக்கு நெருக்கடி ஏற்பட்டதற்கு அதுகாரணமே இல்லை. பணம் போடுகிற மனிதன் இவரைக்கண்டு பயப்படுகிருன் என்பதுதான் உண்மை. ஆகையால் நாணயத்தைப்பெற இவரும் சிறிது நாணயத்தைக் காட்ட வேண்டியது அவசியம் ஜனங்களை கவரக்கூடிய பெரிய கலை நமது கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டியதும் முக்கியம்.

ஸ்டுடியோக்களில் என்ன நடக்கிறது?

[முன் பக்கத் தொடர்ச்சி]

பேரையும் நியூடோன் சொந்தக்காரர்கள் எப்படி திருப்தி செய்கிருர்கள்?" என்று ஆச்சரியப்படுவீர்கள்.

இவ்விதம் முதலாளிகளைத் திருப்தி செய்யும் பணியில் ஈடுபட்டவர்கள் நியூடோன் பங்காளிகளில் முக்கியமாக மூவர். எப்பொழுதாவது ஒழிந்த வேளையில் சாயந்திரமாக நியூடோனுக்குள் நுழைந்தீர்களானல் 'ஹோ' வென்று இறைந்துகொண்டும் சிரித்துக்கொண்டும்சிவப்பாய் ஒல்லியாய் உயரமான ஒரு வடக்கத்திக்காரர் கிரிக்கெட் ஆடிக்கொண்டிருப்பதைப் பார்ப்பீர்கள். இவரிடம் பேச ஆரம்பித்து விட்டால் அப்புறம் அந்த ஸ்டிடுயோவை விட்டு நகர முடியாது. இவர்தான் ஒலிப்பதிவு என்ஜினீயர் டின்ஷா டெஹரனி. நியூடோன் பங்குதார்களில் இவர் ஒருவர். இவரைப்பற்றி நல்ல வார்த்தை சொல்லாத படமுதலாளியே கிடையாது.

இந்த இடத்தைவிட்டு ஸ்டுடியோவை ஒரு சுற்று வந்தால் ஏதாவது ஒரு பெஞ்சில் நல்ல வாட்டசாட்டமாக ஒரு வங்காளிக்காரர் சதா எதைப்பற்றியோ யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம். இவர்தான் ஒளிப்பதிவு நிபுணர் ஜிதன் பானர்ஜி. யாரிடமும கடுமையான வார்த்தை பேசி அறியாதவர். தமது தொழிலில் நல்ல திறமைசாலி நியுடோனில் இவர் ஒரு பங்குதாரர். முதலாளிகளுக்கு 'கால்ஷீட்' (படம்பிடிக்கும் நேரத்திட்டம்)கொடுக்கும் பொறுப்பில் இவருக்கும் பங்கு உண்டாகையால் பாகி முதலாளிகளுக்கு இவரிடம சிறிது மனக்கசப்பு உண்டு.ஆனல் நேருககு நேர் வந்துவிட்டாலோ அவர்கள் கோபமெல்லாம் பனியைக் கண்ட சூரியனைப்போல் மறைந்து "என்ன மிஸ்டர் ஜிதன்!" நமது விஷயத்தைக்கொஞ்சம் கவனிக்கக்கூடாதுங்களா? என்று குழைய ஆரம்பித்து விடுவார்கள்.

நியூடோனில் முக்கியமாக நாம் குறிப்பிடும் மூன்ருவது பங்குதாரர் ஆர்ட் டைரக்டர் நாகூர். சினிமாக் கலை டைரக்ஷனை மட்டுமின்றி பட டைரெக்ஷனையும் நன்ருக அறிந்தவர். இவர் கூட்டு டைரக்ஷனில்தான் ஸிட்டாடல் ஞான சௌநதரி' தயாரிக்கப்பட்டது.

நியூடோனில் இந்த மூன்று பேரின் ஒத்துழைப்பில்லாமல் படம் பிடிப்பது அசாத்தியம் மூவரும் சினிமாக் கலையின் மூனறு துறைகளில் திறம்படைத்தவர்களாதலால் இவர்களை ஏமாற்றுவதும் முடியாத காரியம். நியூடோனுக்கு இன்னும் இரண்டு செட்டியார்கள் பங்குதார்கள் இருக்கிருர்கள். ஆனல் அவர்கள் ஸ்டுடியோ நிர்வாகத்தில அதிகமாகத் தலையிடுவது கிடையாது.

நியூடோனில் இப்பொழுது துரிதமாகத்தயாரிக்கப்படும் படங்களில் முக்கியமானது முருகன் டாக்கீஸ் 'ரத்னகுமார்' இதில் பி. யு சின்னப்பா பிரதம பாகத்தை நடிக்கிருர்.

அடுத்தபடியாக நாகூர் தயாரிக்கும் 'லைலா மஜனு' இதில் டி. ஆர். மகாலிங்கமும் எம் வி. ராஜம் மாவும் நடிக்கிருர்கள்.

தியாகராஜ பாகவதரின் 'அமர கவி' யையும் சென்றவாரம் பப்ளிக் பிராசிகியூடர் வி எல். எதிராஜ் ஆரம்பித்து வைத்திருக்கிருர்.



பிரபல ஹாலிவுட் சினிமா நடிகரான டைரோன்பவருக்கும் லிண்டா கிரிஸ்டியனுக்கும் ரோமில் விவாகம் நடந்தது ரோமிலுள்ள யுனைடெட் ஸ்டேடேஸ் தூதர் இல்லத்தில் அவர்கள் விவாக விருந்து நடைபெற்றது.



தாயில்லாக் குழந்தை

(ஹரி சரண்)

‘கல்யாணத்தைப் பண்ணிப்பார்’ ‘வீட்டைக் கட்டிப்பார்’ என்று சொல்வதுண்டு. இத்துடன் ‘தாயில்லாக் குழந்தையை வளர்த்துப்பார்’ என்பதையும் சேர்த்துக்கொண்டால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்?

உலகத்திலே தன்னை விடப் பொறுமைசாலிகள் யாருமே கிடையாது என்று எவனாவது பெருமை சொல்லிக்கொண்டால் அவனிடம் ஒரு தாயில்லாக் குழந்தையை வளர்ப்பதற்கு விட்டுவிடுங்கள். நாலே தினங்களில் அவனுடைய பொறுமையின் சாயம்’ வெளுத்து போகும்.

அவள் இறந்துவிட்டாள். மகராஜி இருந்தவரையில் யாருக்கும் எவ்விதக் கஷ்டமும் வைத்தது கிடையாது. பிறர் கஷ்டத்தையும் வலிய ஏற்றுக்கொண்டு அதற்குப் பரிகாரம் காண தன்னால் முடிந்த வரை முயற்சிப்பாள். என்ன உபயோகம்! அதற்கெல்லாம் திருஷ்டி பரிகாரம்மாதிரி போகிற போக்கில் இரண்டு வயதில் ஒரு பெண் குழந்தையைப் ‘போட்டு விட்டுப் போய்விட்டாள்.

துரு துருவென்று சுவர்ண விக்கிரகம் மாதிரி குழந்தை. பார்த்துப் பார்த்து அழுதாள் குழந்தையின் சித்தி (சிறிய தாயார்). தன் தமக்கை இறந்துவிட்டது கூட அவளுக்கு அவ்வளவு துக்கத்தைக் கொடுக்கவில்லை பாவம்! குழந்தை பரதேசியாகப் போய்விட்டதே, யார் யார் கையில் என்னென்ன கஷ்டத்தை அனுபவிக்கப்போகிறதோ என்ற கஷ்டந்தான். அம்மா! நீ பரதேசியாகப் போய் விட்டாயடீ! உனக்கு இரு தரத்துப் பாட்டிகளுமில்லை. இனி யாரடி அம்மா உனக்கு வேளா வேளையில் உன் பசி அறிந்து வயிற்றுக்குப் போடப்போகிறார்கள்? இனி நீ தாயில்லாக்குழந்தையடியம்மா!’ என்று ஓவெனக் கதறினாள்.

குழந்தையின் தகப்பனார் ஒரு மூலையில் கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தார். ‘என்னமோ அவளுடைய ஆயுசு அவ்வளவுதான். போய்விட்டாள் இனி என்ன செய்வது! மேலே நடக்கவேண்டியதைக் கவனி’ என்று அவருடைய நண்பர்கள் தேற்றினார்கள். ‘என்ன செய்யலாம். உனக்கு ஒன்றும் அதிக வயசாகிவிடவில்லை. வேறு கல்யாணம் இருக்கவே இருக்கிறது’ என்றுதான் அர்த்தம்’ மேலே நடக்கவேண்டியதைக் கவனி என்பதற்கு.

வயது ஒன்றும் அதிகம் ஆகிவிட இல்லை. வேறு கல்யாணம் செய்து கொள்ளலாம். செய்து கொண்டால் என்ன? அவருடைய பிரச்னை தீர்ந்தது. குழந்தையின் பிரச்னை? தான் வேறு கல்யாணம் செய்துகொள்வதென்றால் குழந்தையை உத்தேசித்துத்தான் என்று தயக்கமில்லாமல் அவர் சொல்வார். இளையாளிடம் குழந்தையை விட்டுவைக்க சித்தியின் மனம் ஒப்புமா? கிரியைகள் முடிந்தவுடனே குழந்தையை தன்னுடன் அழைத்துக்கொண்டு போய்விட்டாள் சித்தி.

அந்த மனுஷ்யனுக்கு என்ன தோன்றியதோ என்னவோ தெரியவில்லை எத்தனையோ பேர் வலிய வலிய வந்து வேண்டினார்கள் பெண்ணைக் கொடுப்பதாக. பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறார். நல்ல உத்தியோகம. இந்த ஒரு குழந்தை தவிர வேறு ‘பிச்சல்

பிடுங்கல்' கிடையாது. ஆகையால் வலிய வந்து வேண்டினர்கள். ஆனல் மனுஷ்யன் கொஞ்சமும் அசைந்துகொடுக்கவில்லை. வேறு கல்யாணம் செய்துகொள்வதில்லை என்று தீர்மானமாக முடிவு செய்துவிட்டார்.

குழந்தையின் சித்திக்கு மாத்திரம் முதலில் கொஞ்சம பயம் தான். வேறென்றுமில்லை. ரொம்பவும் செல்லமாக வளர்ந்த குழந்தை. கேட்ட து கேட்டபடி கிடைத்துக்கொண்டிருந்தது. சண்டித்தனம்கூட. அப்படிப்பட்ட குழந்தை இங்கே நாலு குழந்தைகளுடன் அதே சலுகைகளுடன் எப்படி இருக்கமுடியும் என்ற பயம்தான்.

'அதெல்லாம் கடவுள் ஒருவர் இருக்கிறரடியம்மா. சமயத்துக்குத்தகுந்த மாதிரி அதுகளுக்குப் புத்தியைக்கொடுத்துவிடுவார்' என்று நாலு பேர் சொல்லுகிறபடி முதலில் அதுவும் நடந்துகொள்ளும்மாதிரியைப் பார்த்துவிட்டுக் குழந்தையின் சித்திக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தாயார் இருந்தபோது எவ்வளவு எழுப்பினலும் எட்டு மணி வரைக்கும் தூக்கத்திலிருந்து எழுந்திருக்காத குழந்தை ஆறுமணிக்கே 'சித்தி!' என்று கூப்பிட்டுக்கொண்டே படுக்கையைவிட்டு எழுந்துவிடும். இரண்டு டம்ளர் காப்பிக்குக் குறைந்து கொடுத்தால் தூரத் தள்ளிவிட்டு, ஒரு மூலையில் போய் நின்று அழுதுகொண்டிருந்த குழந்தை ஒரு டம்ளரே போதும் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டது. வீட்டில் எது செய்தாலும் தனக்குத்தான் அதிகப் பங்கு என்று பிடிவாதம் செய்துகொண்டிருந்தது வருந்தி வருந்தி கொடுத்தால்கூட எதுவும் வேண்டாம் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டது. அப்படி ஏதாவது வாங்கிக்கொண்டாலும் 'ஏதோ கொடுக்கிறர்கள், வாங்கிக்கொள்ள வேண்டும்' என்ற தோரணையில்தான் வாங்கிக்கொள்ளும்.

நினைத்த பொழுதெல்லாம் 'நச்சுச் சோறு' (வேளா வேளை இல்லாமல்) சாப்பிட்டுக்கொண்டிருந்தது. குறிப்பிட்டவேளை தவிர மீதி வேளைகளில் போட்டால்கூடச் சாப்பிட மாட்டேன் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டது. எப்பொழுது பார்த்தாலும் எதற்கெடுத்தாலும பிடிவாதம் பிடித்து அழுதுகொண்டிருந்த குழந்தை அழுகையையே மறந்துவிட்டது.

சித்திக்குச் சந்தோஷம் பிடிகொள்ளவில்லை. 'பாருங்களடா! நீங்களும் இருக்கிறீர்களே. குழந்தை சுனே (சுலோசனு) எவ்வளவு சமத்தாய் இருக்கிறது. அதைப்பார்த்தாவது தெரிந்துகொள்ளுங்கள்' என்று தன் குழந்தைகளைப்பார்த்துச் சொல்லிவிட்டு சுனேவை வாரி எடுத்துக்கொண்டு ஒரு முத்தம் கொடுப்பாள்.

'பரவாயில்லை. எங்கே இல்லாத பிடிவாதமெல்லாம் பிடித்து நாலு பேர் வாயில் 'அடிபடும்படி' விட்டுவிடுகிறதோ என்று பயந்துகொண்டிருந்தேன். அந்தமட்டும் சாதகம்தான் ரொம்ப சமத்தாய்ப் போய்விட்டது என்று குழந்தையின் சிறிய தகப்பனரும் மனதைத் தேற்றிக்கொண்டார்

அதிகமில்லை. இப்படியாக மூன்று மாத காலம்தான் ஓடியிருக்கும் ஆரம்பித்துவிட்டது குழந்தை கொஞ்சம் கொஞ்சமாக சண்டித்தனத்துக்கு.

எல்லாரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில் திடீரென்று பாதி ராத்திரியில் எழுந்து உட்கார்ந்து கொள்ளும். வயிறு உப்பிப்போகிற மாதிரி விக்கி விக்கி அழும். 'என்னம்மா சுனோ! வயிற்றை வலிக்கிறதா? (பிரேஸில் அரிசி காலமாயிற்றே)...... காதை வலிக்கிறதா?.........பசிக்கிறதா? என்ன வேண்டும்? ஏன் அழுகிறாய் ?.........சொல்லும்மா. சமத்தாயிற்றே. அப்புறம் சித்தியா (சிறிய தகப்பனார்) எழுந்து விடுவார். கோபித்துக்கொள்ளுவார். உம். சீக்கிரம் சொல்லிவிடு' என்று நயத்தாலும் பயத்தாலும் கேட்பாள் வாயைத் திறந்து ஒரு பதில் சொல்லாது. அதே விக்கல். அந்த கேவல்தான.

தன்னுடைய குழந்தை இந்த மாதிரி சண்டித்தனம் செய்ததானால் நாலு அறை அறைந்து வெளியே கொண்டு தள்ளிக் கதவை மூடிக்கொண்டு வந்து விடுவாள். 'குழந்தைகள் அழும். அவைகளின் சுபாவம் அது. அழட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. அழுகையின் காரணத்தைச் சொல்லி விட்டு அழ வேண்டும் என்பது, அவள் கட்சி. இன்றைக்குக்கூட அவளுடைய குழந்தைகள் அழுதால் 'பிஸ்கட் வேண்டும். சாக்லெட் வேண்டும். எனக்கு சாதம் போடமாட்டேனென்கிறாளே. எனக்குப் பசிக்கிறதே' என்று காரணத்தைச் சொல்லிக்கொண்டே அழும். அதேமாதிரி இந்தக் குழநதையை நாலு அறை அறைந்து வெளியே கொண்டு தள்ளிவிட்டு வரமுடியுமா? வந்தால் அண்டை அயலில் இருப்பவர்கள் என்ன சொல்லுவார்கள்! அவர்கள் சொல்லுவது இருக்கட்டும். நமக்குத்தான் மனது வருமா?

தெருவில் விளையாடிக்கொண்டே இருக்கும் பக்கத்து வீட்டுக் குழந்தையை வெடுக்கென்று ரத்தம் வரும்படியாகக் கிள்ளிவிட்டு குடு குடு வென்று அடுப்பங்கரைக்கு ஓடிவந்து விடும். நல்ல நாளிலேயே பக்கத்தகத்து மாமிக்கும் சுனோவின் சித்திக்கும் நல்ல பொருத்தம்! ஒரு பொறிதான தேவை, குபீரென்று பற்றிக் கொள்ள அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு காரணத்தையும் கற்பித்துவிட்டு வந்துவிட்டதென்றால் ? ரத்தம் பெருகக் குழந்தை அழுதுகொண்டே அதன் தாயாரிடம்போய்ச் சொல்லும் அவ்வளவுதான். அடுத்த நிமிஷமே சமுத்திரம்மாதிரி இறைந்து கொண்டு வந்துவிடுவாள் பக்கத்து வீட்டு மாமி.



'யாருடன் விளையாடினாலும் விளையாடு சுனோ, பங்கஜா பட்டுடன் (பக்கத்து வீட்டுக் குழந்தை) மாத்திரம் விளையாடாதே' என்று சுனோவுடன் எத்தனையோதரம் சொல்லியிருக்கிறாள் சித்தி. கேட்டால்தானே! சித்தியின் சொந்தக் குழந்தைகள் அந்தப்பக்கம் திரும்பிக்கூடப்பார்க்காதுகள். பார்த்தால் அடுத்த நிமிஷம் கன்னம் 'மின்னி' விடும் என்பது அதுகளுக்குத்தெரியும். அந்த மாதிரி சூடு இதற்கு உறைத்திருந்தால் தானே தெரியும்!

ஒன்றுமில்லை. சின்ன விஷயம் தான். குழந்தையின் சிறிய தகப்பனார் ஆபீஸ் பைல்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். தெருவில் யாரோ அவருடைய நண்பர் ஒருவர் வந்து கூப்பிடவே, அப்படியே அவைகளை வைத்துவிட்டுப் போய் விட்டார். பக்கத்தில் இங்கி பெட்டி பேனாவும் இருந்தது. சித்தி அடுப்பங்கரையில் சமையல் செய்துகொண்டிருந்தாள்.

'அம்மா! சுனோ அப்பாவின் பைல்களைத்தொடுகிறது' என்றது சித்தியின் நான்கு வயதுக் குழந்தை.

'தொடாதேடி கண்ணா. சித்தியா வந்து அடிப்பார்' என்றாள் அடுப்பங்கரையிலிருந்த சித்தி.

'இல்லை சித்தி' பொய் சொல்லுகிறான் ராமு (சித்தியின் குழந்தை) என்றாள் சுனோ.

'அம்மா! பேனாவை எடுத்து என்னமோ எழுதுகிறாள்' என்றான் ராமு.

'இல்லை சித்தி' என்றாள் சுனோ.

'அம்மா! அம்மா! பைலில் இங்கியைக் கொட்டி விட்டாள்; என்றான் ராமு.

இதைக் கேட்டுவிட்டு அடுப்பங்கரையிலிருந்து ஓடி வந்தாள் சித்தி.

பைலில் சுனோ இங்கியைக் கொட்டிவிட்டுத் திருதிருவென்று விழித்துக்கொண்டிருக்கிறது.

மனுஷ்ய ஜன்மம்தானே! ஒரு வேலையில்லாவிட்டால் ஒரு வேளை கோபம் வரத்தான் செய்யும். அதென்ன பிடிவாதம் அது, வேண்டாம் என்கிற காரியத்தைச் செய்வதென்பது? உன்னைப்போல் அதோ ராமு இல்லை? அவன் தொடுகிறானா பார்!' என்று சொல்லிக்கொண்டே அளவுக்குமீறி வந்த கோபத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு ஒரு தட்டு தட்டினாள் சுனோவின் தாடையில். லேசாகத்தட்ட வேண்டுமென்று தான் தட்டினாள். கொஞ்சம் பலமாக விழுந்துவிட்டது. சிகப்பு நிறத்துக்கும் மெல்லிய தோலுக்கும் ஐந்து விரல்களும் தாடையில்

பாட்டுப் போட்டிவைப்பது சகஜம். ஆனால் சாப்பாட்டுக்கும் போட்டி உண்டென்றால் ஆச்சரியம்தானே: அந்த ஆச்சர்யம் ரோமபுரியிலுள்ள ஒரு ஹோட்டலில் நடத்தப்பட்டது. கை படாமல், வாயினால் கவ்வியே தட்டு தட்டாக ஸேவைபோல உள்ள உணவைப் புசிக்க வேண்டுமென்பது போட்டி. கைகளைப் பின்னால் கட்டியிருந்தும் சுலபமாக இரண்டு நிமிஷம் 4 விநாடியில் தட்டிலுள்ளதைக் காலி செய்து ஜெயித்துவிட்டார் பிளேவியோ (வலது) என்ற ஆசாமி.

'சித்திரம் வரைந்தமாதிரி' தெரிந்தன.

அவ்வளவுதான். வீறிட்டுக்கொண்டு ஒரு அழுகை அழுதது பார்க்கவேண்டும். இத்தனை நாளாக அவ்வளவு பெரிய குரலை அது எங்குதான் அடக்கிவைத்துக்கொண்டிருந்ததோ? பக்கத்து வீடு, எதிர் வீட்டிலிருந்தவர்களெல்லாம் என்னமோ ஏதோவென்று அலறியடித்துக்கொண்டு ஓடி வந்துவிட்டார்கள். அதே சமயம்தான் சொல்லிவைத்த மாதிரி வெகுநாட்களாக அந்தப் பக்கமே எட்டிப்பார்க்காத சுனேவின் தகப்பனாரும் அங்கே வந்து சேர்ந்தார்.

உலகத்தில் ஒன்றும் செய்யக்கூடாத காரியத்தைச் செய்துவிடவில்லை. அது படுத்தி வைக்கிற பாட்டுக்கும், பண்ணுகிற போக்கிரித்தனத்துக்கும் இன்னும் எவ்வளவோ செய்யலாம். ஆனால் தான் தகாத ஏதோ ஒரு குற்றத்தைச் செய்துவிட்ட மாதிரிதான் சுனேவின் சித்தி அசந்து நின்றுவிட்டாள் அதற்குத் தகுந்த மாதிரிதான் அண்டை அயல் வீட்டுக்காரர்களும், 'தாயில்லாக்குழந்தை! அது என்னத்தைக் கண்டது பாவம்! இருந்தாலும் இப்படி அடிக்க யாருக்கும் மனது வராதம்மா. விரல் விரலாகவல்லவோ வீங்கிவிட்டது சே! சே! ரொம்ப அக்கிரமம். இப்படியாவது இஷ்டமில்லாமல் யார் வைத்துக்கொள்ளச் சொல்கிறார்கள்?' என்றுதான் 'விமர்சனம்' செய்துகொண்டு சென்றார்கள்.

தகப்பனாரைக் குழந்தை பார்த்ததுதான் தாமதம் 'அப்பா!' என்று கதறிக்கொண்டே அவர் கால்களைப் போய்க் கட்டிக்கொண்டது குழந்தை அவர் ஒரு வார்த்தை சொல்லவில்லை, கண்களில் நீர் ததும்பி அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டார்.

'பைத்தியமே! தாயில்லாக் குழந்தைகளை நமக்கு வளர்க்கதான் அதிகாரம் அடித்துமிரட்ட அதிகாரமே கிடையாது' என்று பக்கத்து வீட்டுப் பாட்டி அடிக்கடி சொல்லுவதில் எவ்வளவு அர்த்த புஷ்டி இருக்கிறதென்பது இப்பொழுதல்லவோ தெரிந்தது சுனேவின் சித்திக்கு.

சிறு விளம்பரங்கள்

சக்தி ஆரூடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri .. S. சுப்பய்யா B. A., 23–5–48ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 1-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8 1 வருட பலன் ரூ 5 ஜாதகம கணிக்க ரூ 2 சக்தி கவசம ரூ 7–8–0 வி பி பி. தனி ஜாதகம அல்லதுகடிதம எழுதும நேரம் தேவை. N. B:—வெளி நாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

ஈறுகளில் ரத்தம்
BLEEDING GUMS

வருவது அபாயகரமான பயோரியா வின் அறிகுறி சீழ் துளிகள் கொட்டுதல். உமிழ்நீர் வருதல், துர்நாற்றம், பின்னர் பல் ஆடுவது நேரிடும. சீழிலுள்ள கிருமி கள் தேக உருப்புகளுள்சென்று தலைவலி, வயிற்றுத் தகராறுகள், கீல் வாதம், தேக இளைப்புக்கும் மற்ற நோய்களுக் கும் காரணமாகும். **சைகால் ஈறு திரவம்** கிருமிகளை நாசம் செய்யும் சக்தி வாய்ந்த சாஸ்திரீக நிவாரணி. எல்லா பல், ஈறு தகராறுகளுக்கும் நிரு பிக்கப்பட்ட நிவாரணி. பல பிரபல ஆஸ்பத்திரிகளாலும், வைத்தியர்களா லும் போற்றப்படுவது.

விலை ரூ. **2-0-0**

★

ஸ்டாக்கிஸ்டுகள் :

அப்பா & கம்பெனி,
எஸ்பிளனேட் — மதராஸ்.

பாபுஜி பார்மகியூடிகல்ஸ்

378, எஸ்பிளனேட் — மதராஸ்.

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர் களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி. பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு பித்தம, காசம். க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக் கூடிய சிறந்த ஔஷதம். பெண் களும் அருந்தக்கூடியது பத்திய மில்லை

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவர மான காடலாக் இனாம்

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு
Post Box No. 27. — மதுரை.

உயர்ந்த ஜவுளிகள் கிடைக்குமிடம்

V. N. சுப்ரமணிய அய்யர்
ஜவுளிக்கடை

ராஜ வீதி : கோயமுத்தூர்

●

H. O. பெரிய தெரு,
கும்பகோணம்.

மேயர் & கம்பெனி

மொத்த, சில்லரை கெமிஸ்டுகள் & டிரக்கிஸ்டுகள்.

ரயில்வேக்கள், சர்க்கார், லோகல் பண்டு & முனிசிபல் ஆஸ்பத்திரிகள் & டிஸ் பென்ஸரிகள் முதலியவற்றிற்கு நயமான விலைகளில் உயர் ரக தயாரிப்புகள் சப்ளை செயவோர்.

மருந்துகள், பேடண்டு மருந்துகள், சஸ்திரக்கருவிகள் முதலியன வேறு இடங்களில் ஆர்டர் செய்யுமுன் எம்மிடம் விசாரிப்பது நலம்.

16, ஐயா பிள்ளை தெரு, மதராஸ்3.
போன் : 3757. தபால் பெட்டி: 504.
தந்தி : "MAY :RDRUG"

மூக்குக் கண்ணாடிகளில் நவீன மோஸ்தருக்கு

விசாரியுங்கள்.

●

ரவால் ஆப்டிகல் மானுபாக்சரிங் கம்பெனி லிட்.,

—மொத்த & சில்லரை வியாபாரிகள்—

288, எஸ்பிளனேட், மதராஸ்.
போன் : 3283.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் எழுத ரூபா 5. ஆரூடம் மூன்று கேள்வி களுக்கு ரூபா 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்

ம. ஸ்ரீநிவாஸாச்சாரியார்,
தபோ நிதி, தியாகராய நகர்,
மதராஸ் 17.

சிறு விளம்பரங்கள்

விடாத இருமல், ஜலதோஷம், இன்புளூயன்ஸாவுக்கு பெப்ஸ் தேவையாகவிருக்கும்

நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லைகள் சீக்கிரமாகப் பலனளிக்கும் விதத்தில் வேலை செய்கின்றன. சுவாசத்துடன் மருந்து சத்துக்கள் உடசென்று தகராறுக்கு காரணமானதை ஒழிக்கும் பெப்ஸை மென்றவுடன் அதன் கிருமிநாச குணமளிக்கும் ஆவிகள் இருமலை நிறுத்தி புண்ணாகிய உறுப்புகளைச் சமனமூட்டி, கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கி உமது மார்புக்கும் தொண்டைக்கும் சுகமுண்டாக்கும்.



பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி பி. டி. மதராஸ்.

PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பலனளிக்கவல்ல நிவாரணி.

"டைகர் பிராண்ட்"

படுக்கை அறை விளக்குகள்

•

பிரபலமானவை
ரகத்துக்கு ஒப்பற்றவை

•

மொத்த வியாபார விலைக்கு இன்றே எழுதுக.

•

பீர் முகம்மது & கம்பெனி
287, சைனாபஜார், மதராஸ்.

குகன்

சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும்
சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

இப்பக்கத்தில்
விளம்பரம்
செய்யுங்கள்

★

2" X 2" அளவுக்கு
கட்டணம், ரூபாய்
பத்தே தான்.



மெய்விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூங்சோலையில்

பி. ஸ்ரீ.

40

கீர்த்தனை-நந்தனார்

(ஒரு தமிழிசைப் பொக்கிஷம்)

★

பெரியபுராண நந்தனாரைக் காட்டிலும் கீர்த்தனை நந்தனார் தமிழ்நாட்டிலே பிரசித்தமானவர். சமீப காலத்திலும்கூடத் தமிழ்நாட்டில் எங்கே போனாலும் நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளில் ஏதாவது ஒன்றை யாராவது பாடக் கேட்பது சர்வ சகஜமாயிருந்தது.

நந்தன் சரித்ரமானந்தம்—

ஆனாலுமத்தி

யந்தம் பக்திரஸ கந்தனுஞ்—

சொல்லச்சொல்ல

என்ற பல்லவியைச் சங்கராபரணத்தில் பாகவதர்கள் மட்டுமல்ல, விசேஷ ராகஞானமில்லாதவர்களும் பாடிக்கொண்டிருப்பதைக் கேட்கலாம்.

ஏது இவனைப்போலே சாது—

பூமியில் இருக்காது

என்று பிராசங்கள் போட்டு ராக ஞானமே இல்லாதவர்களும் தமக்குத்தாமே பாடிக்கொண்டிருப்பார்கள் ஏன் கல்விமணம் வீசப்பெறாத பாமர மக்களையும் இந்தக் கீர்த்தனைகள் பெரிதும் வசீகரித்துவிட்டன இந்தப் பாமரமக்களில் பாகவதர்களும், பொறாமைப்படத்தக்க குரலினிமை வாய்ந்தவர்களையும் கண்டு. 'என்ன? கீர்த்தனையின் இனிமைக்கு எவ்வளவு இசைவாக இழையும் குரல்!' என்று பிரமித்தும் இருக்கிறோம்.

இப்படியெல்லாம் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைத் தமிழகத்தின் பொதுவுடைமையாக்கியவர்கள்கதா காலட்சேபங்கள் செய்துவந்த பாகவதர்கள் மட்டுமல்ல, நாடக மேடைகளில் கீர்த்தனை நந்தனாரைக் கண்டு காட்டிய நாடகக் கவிராயர்களும் தான் நாடகமேடையிலோ, தெருக்கூத்திலோ, காலட்சேபமேடையிலோ

பகர்ந்(து) உலகு சீர்போற்றும்

பழையவளம் பதியாகும்

என்ற பெரிய புராணச் செய்யுளை முதல் முதல் பாடக் கேட்கலாம். திடீரென்று அந்தப் பாட்டு முடிந்ததும் வசனம் வந்துவிடும், 'கொள்ளிடத்துக்குச் சமீபமாகிய உலகமெல்லாம் புகழும்படி இருக்கின்ற அமராபதி அளகாபுரிப் பட்டணங்களைத் தோற்கச் செய்யும்...ஆதனூர் என்னும் கிராமத்துக்கு வெளியில்...' என்றவிதமாக, இந்த வசனமும் பாட்டைப்போல் ஒருவகை ராகத்திலே வரும். பிறகு பளிச்சென்று, ஆதனூர்ப் புலைச்சேரியை ஸாக்ஷாத் உபமன்னியு பகவானே வருணிக்கிறார் என்று சொல்லிவிட்டு நாடக மேடைப் பாவலரோ, பாகவதரோ,

பழன மருங்கணையும்-புலைப்

பாடியது கூரை வீடுதனில்

சுரையோ படர்ந்திருக்கும்

என்று புன்னாகவராளி ராகத்தில் நொண்டிச்சிந்து பாடத் தொடங்கிவிடுவார். கேட்பவர்களுக்கு எங்கேயோ சிறகு கட்டிப் போய் அந்தக் கீர்த்தனைப் புலைப்பாடியை அப்படியே அனுபவிப்பதுபோலத் தோன்றும்.

திருப்புன்கூருக்குப் போய் அந்தத் தலத்தை வலம் வரும்போதே நந்தனாருக்கும் அவருடைய சீடர்களுக்கும் நிலத்தில் கால் பாவவில்லை. நம்பிக்கையின் விசித்திர சக்தியால் பேருவகை எய்தி ஆனந்தக் கண்ணீர் சொரிகிறார்கள், பறந்து திரிகிறார்கள் பக்தியென்ற விண்ணுலகத்திலே பிறகு திருப்புன்கூர்ச் சிவலோகநாதனின் சன்னிதிக்கு எதிரே வெகு தூரத்தில் வந்து நிற்கிறார்கள்:

தலம்வந்து வீதி

வலம்வந்து கண்கள்

ஜலம்வந்து சோரும்

பலன்வந்த தெங்கள்

மலம்வெந்து போச்சு

குலம்சுத்த மாச்சு

நலம்கண்டோம் என்று,

நிலம்கொண்டு நின்றார்!

இந்த அனுபவம் கீதத்தின் விசித்திர சக்தியால் கேட்பவர்களுக்கும் கிடைத்துவிடுகிறது.

அத்தலத்திலுள்ள நந்தி மிகவும் பெரிதாக இருந்ததால் நந்தனார் வாசலுக்கு எதிர் நின்று சுவாமி தரிசனம் செய்வதற்கு அது இடையூறாயிற்று அப்போது நந்தனாரின் மனநிலையை என்னென்பது? வலம் வந்தபோது பெருகிய இன்பத்தை

யும் மகிழ்ச்சியையும் இழந்து திடுக்கிட்டிருக்குமல்லவா நந்தனாரின் இதயம்?

சீரேறும் இசைபாடித்
திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும்
என நினைந்தார்க்கு

என்று சேக்கிழார்சுவாமி குறிப்பிடும் அந்தப் பக்தியுள்ளம் 'மலைபோல் நந்தி மறைப்பதோ? என்று என்ன பாடுபட்டிருக்கும்! இந்த மனநிலையை உய்த்துணர வைப்பது பெரியபுராணம்; கலைச் சுவையுடன் விளங்க வைப்பது சரித்திரக் கீர்த்தனை.

'சிவலோக நாதன்
திருச்சந்நிதானம்
மலையாகி நந்தி
மறைத்திடும் இங்கே
பலகாலம் செய்த
பாழ்வினை குவிந்து
மலையாகி இப்படி
மறைத்ததோ?' என்றார்.

'மலைபோலே ஒரு மாடு படுத்திருக்குதே!......உற்றுப் பார்க்கச் சற்றே விலகாதோ மாடு?' என்று நந்தனார் வருந்துவது நியாயம்தானே? இந்த நிலையில் சிவபெருமான்

போரேற்றை விலங்க, அருள்
புரிந்தருளிப் புலப்படுத்தார்

[போரேற்றை—போருக்குப் புறப்படுவது போலத் தோன்றும் நந்தியை. விலங்க—விலக; புலப்படுத்தார்—தரிசனம் கொடுத்தார்] என்பர் பெரிய புராண ஆசிரியர் இந்தச் சேக்கிழார் குறிப்பு எவ்வளவு கலைச் சுவையோடு ஹம்ஸத்வனியிலோ பூர்வ கல்யாணியிலோ வெளிப்படுகிறது சரித்திரக் கீர்த்தனையில்!

சற்றே விலகியிரும் பிள்ளாய்!
சந்நிதானம் மறைக்குதாம் நீ
(சற்றே)

என்று நந்தியை நோக்கிக் கூறும் சிவபெருமான்

ஒதுங்காமல் இருந்தது
உன் பேரில் குற்றம்
என்றும் சொல்லுகிறார்.

இது மட்டுமா? 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள் ஒக்கும்' என்கிறார்களல்லவா? தெய்வப் புலமைத் திருவள்ளுவரும்,

அல்லற்பட்(டு) ஆற்று(து)
அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'

என்று 'மெய் வைத்த வேத விளக்கு' என்று சொல்லத்தகுந்த திருக்குறளில் கூறியுள்ளாரல்லவா? அப்படியே கீர்த்தனை ஆசிரியரான கோபால கிருஷ்ண பாரதியாரும்,

சித்தம் குறையில் நமது செல்வம்
முற்றும் குறையும்

என்று சிவபெருமான் நந்தியை நோக்கி எச்சரிக்கை செய்ததாகப் பாடியிருக்கிறார் பக்தர்களுக்கு ஒரு மகா சாஸனமல்லவா இது? இது கேட்ட நந்தி,

அவன் நல்ல பக்தன் என்றார்
அடங்காத வெட்கங் கொண்டார்!

திருப்பூன்கூர்ச் சிவலோகநாதனைத் தரிசனம் செய்தபின் நந்தனார் அவ்வூரில் ஓர் இடம் பள்ளத்தோடு அமைந்திருக்கக் கண்டு அந்தக் குட்டையைக் குளமாக வெட்டினார் என்பர் சேக்கிழார். இந்தச் சுருக்க வரலாற்றை ஒரு விநோதக் கதையாக்கி விடுகிறார் கீர்த்தனை—ஆசிரியர். நீ 'யாரப்பா?' என்று நந்தனார் பரிவோடு கேட்பதும், 'நான் உன் ஆளப்பா!' என்று வந்த மனிதன் விகடமாய்ப் பேசுவதும், அந்த விநோத முகமும் விகப் பெருவயிறும் கண்டு நந்தனார் 'குட்டையைக் குளமாய் வெட்டுவேன் என்பதும், அற்பமாய்ப் பதக்கு நெல்லைக் கொடுப்பதும், அப்பனே! போதும் போதும், என்று வந்தவன் கூறுவதும், நந்தனார் கண்மூடித் திறப்பதற்குள்ள 'மட்டையூறும் குட்டை' சோலை சூழ்ந்த தடாகமாய்த் திகழ்வதும், வந்த பிள்ளை காணாமல் போவதும் ஆகிய ஒரு விநோதக் கதை சொல்லுகிறார் கீர்த்தனை-ஆசிரியர். சேக்கிழார் அருளிய ஒரு சிறு குறிப்பை வைத்துக்கொண்டு இந்தக் கதையில் வந்த பிள்ளை யார் என்றால் 'பிள்ளையார்' என்கிறார் பாரதியார்.

இத்தகைய விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும் பலவேறு புதிய விஷயங்களும் சரித்திரக் கீர்த்தனையை அழகு செய்து ஒரு புதிய கலாசிருஷ்டியாகக் காட்டுகின்றன. வெள்ளைத் தமிழ்ச் சொற்களால் கோபாலகிருஷ்ண பாரதியாரின் கள்ளங்கபடற்ற உள்ளம் இக்கீர்த்தனை நூலை இயற்றி நமது மறுமலர்ச்சிக் கவிஞராகிய சுப்ரமணியபாரதியாருக்கும் ஒரு வழிகாட்டியாக உதவியிருக்கிறது

'உனக்கும் மார்கழித் திருநாளா?' என்ற பிரசித்திபெற்ற கீர்த்தனைப் பாட்டின் வர்ணமெட்டைத் தழுவியதுதானே கலெக்டர் துரை கப்பலோட்டிய தமிழரை நோக்கி,

தொண்டுசெய்யும் அடிமை—
உனக்கும்
சுதந்திர நினைவோடா?

என்று பாடுவதெல்லாம்?

ஓய் நந்தனாரே! நம்ம சாதிக்கடுக்குமோ? என்ற வர்ணமெட்டைத் தழுவியதுதானே ஸர். பிரோஸ்ஷா மேத்தா என்ற மிதவாதப் பிரமுகர் திலகருக்குச் சொல்வதாகப் பாரதியார் பாடியிருப்பதும்? இப்படியே நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்' முதலான சில பாரதி பாடல்களும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'க்குக் கடன் பட்டவைதான்.

சுருங்கச் சொன்னால், 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்ற இசைப் பொக்கிஷம். இவ் ஆசிரியருக்கு, 'பாரதியாருக்கும் முந்திய பாரதியார்' என்ற பெருமையையும் அளிக்கக்கூடியதுதான்.

—○—

தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

14

யோகம் யாருக்கு இல்லை?

★

உலகில் பிறந்துவிட்டால் இறக்கும் வரை தொழிற்பட்டேயாக வேண்டும். கருமம் செய்வது சுபாவமாய் அமைந்திருப்பதால் உலகில் ஏழை, பணக்காரன், ஞானி, அஞ்ஞானி ஆகிய யாவரும் சிறிதளவாவது செயல் இன்றி இருப்பதில்லை. சிலர் லாபத்தைக் கருதி ஒரு கர்மத்தை மேற்கொள்ளுகிறார்கள். நான் என்னும் அகங்கார மிகுதியால் 'ஒன்றில் வெற்றி பெறுவோம்' என்னும் புகழ் ஆசையால் சிலர் கருமத்தை மேற்கொள்ளுகிறார்கள். இவவிரு சாராரும் லாபமோ வெற்றியோ கிட்டினால் சந்தோஷிக்கிறார்கள். நஷ்டமோ தோல்வியோ ஏற்பட்டால் துக்கப்படுகிறார்கள். தேகாரோக்கியக் குறைவாலோ பணவசதிக் குறைவாலோ எடுத்த கருமத்தைத் தொடர்ந்து செய்ய முடியாமல் போனால் பலனையும் பெறாமல் துக்கப்படுகிறார்கள்.

அவ்வாறின்றி ஞானிகள் ஆரம்பத்திலேயே தமது விவேகத்தைக் கொண்டு தமக்குரிய கடமை இன்னதென்று நிச்சயித்துக்கொள்ளுகிறார்கள். செயல் அற்று இருக்க முடியாத தனு (உடல்) கரணங்களை, (அவயவங்களை) கடமைக்குரிய கருமங்களைச் செய்வதிலேயே தொழிற்படுத்துகிறார்கள். கடமையாக ஒரு கருமத்தைச் செய்யும்போது பிரதிப்பலனை எதிர்பார்ப்பதற்கில்லை. பலனை எதிர்பாராதவர்களுக்கு கருமத்தைச் செய்யும்போது லாபம், நஷ்டம் என்ற என்ற இரு வேறு நிலைகள் தோன்றுதற்கே இடமில்லை. எதிர்பார்த்த பலன் கிட்டுவதும் கிட்டாததுமே வெற்றி, தோல்வியாதலால் பலனை எதிர்பாராத ஞானிக்கு கருமத்தில் வெற்றி தோல்வியும் தோன்றுவதில்லை. அதனால் அவன் கருமத்தால் இன்ப துன்பமும் எய்துவதில்லை. ஞானியின் மனோபாவம் இல்லாதவர்களுக்கே ஞானிசெய்யும் காரியங்களில் லாப நஷ்டம், வெற்றி தோல்வி அதனால் ஞானிக்கு இன்ப துன்பம் ஏற்படுவன போலத் தோன்றும். செய்யும் கருமத்தைக் கடமையாக உணர்ந்து, அதனால் லாபம் நஷ்டம், இன்பம் துன்பம், வெற்றி தோல்வி என்று கரும நிகழ்ச்சிகளைப் போலியாக வேறுபடுத்திக் காட்டும் மனத்தை வென்று எல்லாவற்றையும் உள்ளவாறே சமமாகக் காண முயல்பவன் யோக சாதனம் பயில்வோனாகிறான். சமத்வ புத்தி வரப்பெற்றவன் யோகியாகிறான். பயிலும் சாதனம் உயர் நிலையில் சேர்ப்பதால் யோகம் ஆகிறது. அதுவே தத்துவ (உண்மை) ஆராய்ச்சியோடு முரண்படாமல் ஏற்ற சாதனமாயும் இருப்பதால் ஸாங்க்ய யோகம் எனப்பட்டது. அந்த யோகத்தின் ஒரு பகுதியாகிய ஸம பாவனையை அடைந்து போரை மேற்கொண்டால் கொலை முதலிய ஹிம்ஸையால் வரும் பாவம் 'உன்னையடையாது' என்று தெரிவித்து அடுத்தபடியாக அத்தகைய கருமத்தின் சிறப்பைக் கூறுகிறார்.

செய்த அறம் குன்றாது
சோராது அவம் சிறிதும்
எய்தருமம் காக்கும்
மிகுபயத்தில்-பொய்தவிரும்
புத்திதீர்வு ஒன்றாகும்
புன்மைப் பலநினைவாம்
அத்திரம் தீர் வில்லாத வர்க்கு.

(இ-ள்) செய்த அறம்—(ஆரம்ப மாத்திரமானாலும்) செய்தவரை இந்தத் தருமம், குன்றாது—அழியாது, அவம் சிறிதும் சேராது—(இடையே விட்டாலும்) கொஞ்சம் கூடத் தோஷம் உண்டாகாது. எய்தருமம்—கருமத்தின் கொஞ்ச பாகமும் மிகு பயத்தில்—(பிறப்பு இறப்பாகிற) பெரும் பயத்தினின்றும் காக்கும்—காப்பாற்றும். பொய் தவிரும் புத்திதீர்வு—(இந்த நிஷ்காம கரும யோகத்தில்) நிச்சய ரூபமான புத்தியின் தன்மை, ஒன்றாகும்—ஒரே விதமாயிருக்கும், அத்திரம் தீர்வு இல்லாதவர்க்கு—நிச்சய புத்தி இல்லாதவர்க்கு புன்மைப பல நினைவாம்—அற்பமான பல அபிப்பிராயங்கள் (உண்டு)

4
நேஹா பிக்ரமநா சோஸ்தி

3
ப்ரத்ய வாயோ ந வித்யதே

4
ஸ்வல்பம் அபி அஸ்ய தர்மஸ்ய

4
த்ராயதே மஹதோ பயாத்

3 3 4
வ்யவஸாயாத்மிகா புத்தி:

3
ஏகேஹ குரு நந்தந

3 2
பஹுசாகா ஹ்யநந்தாச்ச

3 3 4
புத்தயோ வ்யவ ஸாயிநாம்.

(இ-ள்) இஹ—இந்த யோகத்தில். அபிக்ரம நாச:—ஆரம்ப மாத்திரத்திற்கும் அழிவு நாஸ்தி—இல்லை. (நடுவே விட்டாலும்) ப்ரத்யவாய:—தோஷமும் நவித்யதே—இல்லை. அஸ்ய தர்மஸ்ய—இத் தருமத்தினுடைய, ஸ்வல்பம் அபி—சிறிது பாகம்கூட, மஹதோ பயாத்—பெரும் பயத்தினின்றும், த்ராயதே—காப்பாற்றும்.

குருநந்தன—அர்ஜுனா!. இஹ—இந்தயோகத்தில் வ்யவஸாயாத்மிகா—நிச்சய ரூபமான புத்தி:—புத்தியானது ஏகா ஏவ—ஒரே விதம், அவ்யவஸாயிநாம்—(ஸ்வரூப) நிச்சயமில்லாதவருடைய புத்தய:—புத்திகளோ, பஹுசாகா:—அநேக வகைகள், அநந்தாச்ச—முடிவற்றவை

பலனில் ஆசை கொண்டு செய்யப்படும் பிறகருமங்கள் முற்றுப் பெற

றுப் பலன் கிட்டாவிட்டால் செய்த முயற்சி வீணுகும். முற்றுப் பெருது இடையே முறிந்தாலும் செய்த முயற்சி வீணுகும். சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கருமங்கள் பலத்தில் ஆசையால் செய்யப்பட்டு முடிவு பெருது தடைப்பட்டால் செய்தவனைப் பாவத்திற்கும் ஆளாக்கும் பலனில் ஆசையின்றிச் செய்யப்படும் நிஷ்காம்ய கருமமோ செய்த அளவில் வீணுகாது இடையே விடுவதால் பாவத்தையும் தராது செய்யப்பட்ட அதன் சிறிய பாகமும் பிறப்பு இறப்பாகிற பந்தயத்திலிருந்து ஒருவனைக் காப்பாற்றும். "செய்தமட்டில் மிகப் பெரிய பலனுகிற மோட்சத்தைப் பெறுவதற்குச் சாதனமாகும்" என்பது சங்கரர் கூறும் கருத்து இக்கிதாச் சுலோகத்திற்கு இவ்வாறே பொருள் கருதுவதுபோல "வீழ்நாள் படா அமை நன்று ஆற்றின் அது ஒருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல்" (வீழ் நாள் படா அமை—வீணுக நாள் செல்லாமல்) என்று திருக்குறளும் அமைந்து இருக்கிறது.

உண்மை இவ்வாறு இருக்கப் பலர் வேதத்தில் சொல்லப்பட்ட இம்மைப் பலன்களையும் சுவர்க்காதி பலன்களையும் கண்டு ஏமாறுகின்றனர் கடல் காற்றின் சுகத்தை மாத்திரம் அனுபவித்துத் திரும்புகின்றவர்கள் கடலின் ஆழத்திலிருக்கும் முத்துக்களையும், ரத்தினங்களையும் தேடி எடுத்து அனுபவிக்கின்றவனுக்குச் சமானமாவார்களா? அவர்கள் தன்மையை அர்ஜுனு! நீ நன்கு கேள்

"புன்பயனுல் பூத்த உரை போதப்
புகல்வர் அறிவு
ன்பதனை இல்லார் எழில்
மறையில்—நன் பகரும்
சொல்பயனே பற்றி அதில் தொல்
பொருள் மற்றுஇல் என்பார்
கற்பதனைக் காணுதார் கண்"

(இ-ள்.) அறிவு என்பதனை இல்லார்—உண்மை ஞானம இல்லாதவர்களாய், புன் பயனுல்—அற்பமான பலனில் ஆசையால் பூத்த உரை—(பூத்துக் காயாத மரத்தின்) புஷ்ப மாத்திர பலம் போன்ற வார்த்தைகளை, போதப் புகல்வர்—நிரம்பச் சொல்வார்கள், எழில் மறையில்—சிறந்த வேதத்தில் நன்பகரும்—வெளிப்படையாகத் தெரிகின்ற சொல்பயனேபற்றி—வார்த்தைகளின் அர்த்தத்தைக் கிரகித்து, அதில்-அவ்வேதத்தில் தொல் பொருள் மற்று இல்லென்பார்—சிறந்த அர்த்தம் (பலன்) வேற இல்லை என்பார்கள், கற்பதனைக் காணுதார்—அறிய வேண்டியதை அறியமாட்டார்கள்.

யாமிமாம் புஷ்பிதாம் வாசம்

3
ப்ரவதந்தி அவிபச்சித:

3 3 2
வேதவாதரதா: பார்த

3 3
நாந்யதஸ்தீதி வாதிந:

(இ ள்) பார்த்த—பார்த்தனே!, வேதவாதரதா:—வேதச்சொல் பொருளிலே (வாச்யார்த்தம்) பற்றுடையவர்களாய் அந்யத் நாஸ்தி—(சுவர்க்காதிபலனைத் தவிர) வேறு இல்லை இதி வாதிந:—என்று வாது செய்துகொண்டு. யாமிமாம் புஷ்பிதாம் வாசம்—யாதொரு இந்தப் புஷ்ப மாத்திர பலமுடைய வார்த்தையை, ப்ரவதந்தி—சொல்லுகிருர்களோ (அவர்கள்), அவிபச்சித:—அற்ப புத்தியுடையவர்கள்

வேதம் 'ஒன்றைச் செய்' என்று விதிக்கும் 'செய்தால் இன்னபலன் என்றும் சொல்லும் விதியையும் பலனையும் சிறப்பாகவும் பேசும் அவ்விதியில் விச்வாசம் ஏற்பட்டுச் சிரத்தையோடு செய்வதற்காக அவ்வாறு பேசுகிறது, அவ்வார்த்தைகளால் கிடைக்கும் பொருளையே கிரகித்து ஆழ்ந்து ஆலோசித்து உள் பொருளைக் காணுமல் வாதிப்பது அர்த்த வாதம்' என்று சொல்லப்படுகிறது வேதத்தால் ஆத்மஸ்வரூபத்தை அறிந்துகொண்டவன் மோட்சமே பெறத்தக்க பலன் என்று உணர்வான் உணர்ந்தபோது தேகாரோக்கியம். அதிகாரம் செல்வம். பதவி முதலிய அற்ப பலன்களை அடைவதற்காகவே தம் தர்மங்களை விதிக்கவில்லை அவ்வாறு கொள்வது சொற்பொருளேயன்றி ஸாரார்த்தம் அல்ல என்று கண்டுகொள்வான் கண்டுகொண்டவன் கருமங்களைப் பகவதர்ப்பணம் செய்து நிஷ்காம்யமாகவே செய்வான். அவன் புத்தி ஒரேவிதமாய்த் தீர்மானமுடையதாயிருக்கும்.

பதவி. பணம், சுவர்க்கம் முதலிய அற்ப பலனை விரும்புவோர் வேதஸாரத்தைக் கிரகியாதவர்களாகையால் வீண் வாதம் செய்வார்கள் சுவர்க்காதி பலன்களில் தாம் மயங்கியிருப்பதுபோலவே பிறரையும் மயக்குவார்கள். பலன்களில் வைத்திருக்கும் ஆசை காரணமாக மேலும் மேலும் பிறந்திறந்து உழல்வார்கள். ஆசைக்கிடமான பலன்களோ பலவாயிருப்பதால் பலனில் இச்சையுள்ளவர்களுக்கு எண்ணங்கள் பலவாய் எதிலும் தீர்மானம் இல்லாதிருக்கும். அர்ஜுனு! அவர்களுக்கு இந்த யோகம் எவ்வாறு சித்திக்கும்?

போகமிகு செல்வத்துப் பூண்டதன்
னெஞ்சழிந்தார்க்கு
ஏக வகையுற்ற எழிற்
புந்தி—யோகம்
அமைவுருது உள்ளத்தில்
ஆதலால் வேதச்
சமைவுதான் கேளாய் தரித்து!

(இ-ள்) போகம் மிகு செல்வத்துப் பூண்டு—இன்பம் மிகுந்த சுவர்க்காதி செல்வத்தை விரும்பி அதன் நெஞ்சழிந்தார்க்கு—அதனுல் மனம் கலங்கியவர்களுக்கு. உள்ளம்—மனதில், ஏகவகை உற்ற எழில் புந்தி—ஒரேவித நிச்சய ரூபமான சிறந்த புத்தியாகிற, யோகம்—, அமைவுருது—உண்டாகாது ஆதலால் தரித்து வேதச்சமைவுதான் கேளாய்—நிதானமாய் வேத இயல்பைக் கேள்.

3 3 4
வ்யவஸாயாத்மிகா புத்தி:

4 4
ஸமாதௌ நவிதீயதே

[ஸமாதௌ— (அவர்களுடைய) மனதில், வ்யவஸாயாத்மிகா புத்தி:—நிச்சய ரூபமான புத்தி. நவிதீயதே—உண்டாகிறதில்லை]

இன்ப துன்பத்தில் ஏற்படும் சமபாவனையே யோகம் பலனில் ஆசை வைத்துக் கருமத்தைச் செய்வோருக்கு, பிறவிப் பிணிக்கு மருந்தாகிய அந்த யோகம் கிட்டுவதே இல்லை. அதை அறிய வேதத்தின் இயல்பையும் தெரிந்துகொள்ள வேண்டும் அடுத்த வார இதழில் அதைக் காண்போம்.

பெண்கள் முன்னேற்றம்

'மணி'

"வீறுகொண்டு எழுங்கள். பெண்களோடு ஆண்களும் சமமென்று கோஷம் போடுங்கள், சமத்துவம் வேண்டும்," என்ற கோஷம் வானைப் பிளந்தது ஆடவர்கள் கூட்டம் கூடி தங்கள் சமத்துவத்தைப்பற்றி வானளாவிப் பேசிக்கொண்டிருந்தனர்.

திடீரென தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டேன் ஓஹோ, எல்லாம் கனவுதானா? ஆனால் அப்படிப்பட்ட கோஷங்கள் நம் சந்ததியர்கள் நாட்களில் கிளம்பினாலும் கிளம்பலாம் மாதர்கள் அவ்வளவு வேகமாக முன்னேற்றமடைகின்றனர். முதன் முதலில் ஆண்கள் தங்களைக் கொடூரமாக நடத்துதலை கண்டித்து அதிலிருந்து விடுபடவேண்டும் என்று பெண்கள் கோஷித்தார்கள். அடுத்த சந்ததியர்கள் அனாதை விதவை ஸ்திரீகளுக்கு தங்கள் சுய சம்பாத்தியத்தை அடையவேண்டி மாமூல் வேலைகளில் பெண்களுக்கும் இடம் தரவேண்டி கோஷித்தனர் அதற்கு அடுத்த சந்ததியர்களான நாம் இதுவும் போதாதென்று எல்லா ஸ்திரீகளுக்கும் எல்லா தொழில்களிலும் இடம் தரவேண்டுமென கோஷித்தோம். உண்மையில் நாம் அவ்விதம் கோஷம் போட்டோமா என்பதுகூட சந்தேகம்தான் என் காதிற்கு எட்டின வரையில் என் சிநேகிதிகளோ. அவர்களைச் சேர்ந்தவர்களோ அவ்விதம் கோஷம் போட்டதாகத் தெரியவில்லை ஆனால் சர்க்கார் நம் கோஷத்திற்குக் காத்திராமல் எல்லா வேலைகளிலும் நமக்கு இடம் தந்து விட்டார்கள் நமக்கு அடுத்த சந்ததியர்கள் நம்மைவிட ஒருபடி முன்னேறியேதான் இருப்பார்கள். அவர்கள் நாட்களில் நான் கனவில் கண்டபடி ஆண்களின் கூப்பாடு கிளம்பினால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இவ்வளவு தூரம் நாம் முன்னேற்றம் அடைந்த பிறகும். ஸ்திரீகள் ரேடியோவிலும். சபைகள் கூட்டியும் நாம் அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டும், நாம் முன்னேற்றம் அடையவேண்டும்' என்று கூப்பாடு போடுவதேன் என்றுதான் எனக்குப் புரியவில்லை இந்த நாட்களில் எல்லாத் துறைகளிலும் ஸ்திரீகள் முன்னேற்றம் அடைந்தே இருக்கின்றனர் சாதாரணமாக உலாவப் போகும்போது ஸ்திரீகள்தான் முன்னேறிப்போகின்றனர். கடைகளில் சாமான்கள் வாங்கும் போது ஸ்திரீகள் தான் முன் சென்று விலை கேட்கிறார்கள் ஸ்திரீகள் கண்டக்டர்களாக இருக்கும் பஸ் தான் முன்னேறி போகின்றது ஏனெனில் எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் தான் இதுவரை ஸ்திரீகள் கண்டக்டர்கள்!

எல்லா தொழில்களிலும் ஸ்திரீகளுக்கும் பங்கு உண்டு என்பது அனுபவ சாத்தியமா என்பது சந்தேகம்தான் எல்லா தொழில்களும் ஸ்திரீகளுக்கு ஏற்றதா என்பது முதல் பிரச்னை உதாரணமாக போலீஸ் வேலையை எடுத்துக்கொள்வோம். சாதாரணமாக இது ஒரு கடுமையான உத்யோகம். பூப்போன்ற சரீரம் படைத்த பெண்களுக்கு இது ஏற்ற தொழிலா ?

நான் என் சிநேகிதிகளிடம் இதைப்பற்றி ஆக்ஷேபித்தபொழுது இது தற்காப்பு சாதனம் என்றார்கள் அவர்கள். தற்காப்பிற்கு போலீஸ் வேலை பயின்றால்தான் சாத்யமா ? போலீஸ் பயிற்சி இல்லாமலே பழைய நாட்டுப் பெண்கள் எவ்வளவோ பேர்கள் தற்காப்பை சாதித்திருக்கிறார்கள் இதைப்பற்றின கதை ஒன்று உண்டு. ஆண்திக்கில்லாத ஒரு ஸ்திரீயின் வீட்டில் ஒருவன் ஒரு மூட்டையோடு வந்து "அம்மா, நான் ஒரு அவசர காரியமாக அடுத்தக் கிராமம்வரை போய் வரவேண்டியிருக்கிறது இது கருணைக்கிழங்கு மூட்டை. இதை உங்கள் வீட்டில் போட்டு வைக்கிறேன் காலையில் வந்து எடுத்துக்கொள்கிறேன்" சொல்லிவிட்டுப் போனானாம் அந்த அம்மணியும் அவன் வார்த்தையில் நம்பிக்கை வைத்து மூட்டையை உள்ளே போடச் சொல்லிவிட்டு கதவை தாள் போட்டுக்கொண்டு வந்து படுத்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு 'கொர் கொர்' என்ற சத்தம் கேட்டு விழிப்படைந்து பார்த்ததில் அந்த மூட்டை மெள்ள அசைவது தெரிந்தது அதன் இரண்டு இடுக்குகள் வழியாக இரண்டு கண்கள் தெரிந்தன. உடனே அவள் தன்னுடன் படுத்திருந்த தன் நாத்தனாரை எழுப்பினாள் சந்தடி செய்யாமல் இருவருமாக இரண்டு உலக்கைகள் கொண்டுவந்து மாற்று உலக்கைப் போட்டு ஒளிந்திருந்தவனைக் கொன்றார்கள் மற்றபடி சந்தடி செய்யவில்லை. பாதி இரவில் மெள்ள கதவு தட்டும் சப்தம் கேட்டு, கதவைத் திறந்தபொழுது மூட்டையைப் போட்டுவிட்டுச் சென்றவன் மெள்ள எட்டிப் பார்த்தானாம். அவனையும் போலீஸில் பிடித்துக் கொடுத்தார்கள் அப்பெண்கள். இது உண்மையான கதை என்றே சொல்லப்படுகிறது இந்த ஸ்திரீகள் ஒரு போலீஸ் பயிற்சியும் பெறவில்லை என்பது நிச்சயம். தற்காப்பிற்கு சமயோசித புத்தியும் தந்திரமும் மிக மிக அவசியம். இவை இருந்தால் நமக்குத் தெரிந்த எந்த வழியிலும் தற்காப்பு செய்துகொள்ளலாம். போலீஸ் பயிற்சி பெற்றவர்கள் துப்பாக்கியும்

கையுமாக டிரில் செய்துகொண்டு வருவதற்குள் தற்காப்பு பறந்தே போய்விடும். போலீஸில் கொடுக்கப் படும் பயிற்சிகளை நாம் தினசரி வாழ்க்கையிலேயே பயின்றுகொள்ளலாம். துப்பாக்கி தூக்கப் பழக வேண்டுமானால் வீட்டிலேயே உலக்கைகளை தூக்கிப்போட பழகிக்கொள்ளலாம். உலக்கையை தூக்க சக்தியற்ற நவயுகப் பெண்களுக்கு துப்பாக்கி தூக்க பலம் வருவது சந்தேகம்தான் டிரில் செய்து பழக வேண்டுமானால் குடத்தை தூக்கிக்கொண்டு காலை வீசிப் போட்டு ஆற்றங்கரைக்குச் சென்று நன்றாக துணிகளை துவைத்து குளித்துவிட்டு குடத்தில் ஜலத்தை நிரப்பி எடுத்து வாருங்கள் ஆறு. குளம் இல்லாத நகரப் பெண்கள், கிணற்றிலிருந்து ஜலம் இழுத்து, செடிகளுக்குத் தண்ணீர் விடுங்கள். இம்மாதிரி ஒவ்வொரு பயிற்சிக்கும் ஒவ்வொரு விதமாகப் பயிலலாம்.

என்னுடைய மற்றொரு சிநேகிதி ராணுவ அல்லது போலீஸ் பயிற்சி பெற்றால் தேசத்திற்கு சேவை செய்தவர்களாவோம் என்றாள் இப்பயிற்சியில் ஈடுபட்டால்தான் தேசத்திற்கு சேவை செய்தவர்களாவோமா? அதற்குப் பதில் ராணுவத்தில் சேவை செய்யும் ஆடவர்களுக்கு உதவியான சாமான்களை தயார் செய்வதில் பயிற்சி பெற்றால் எல்லாவற்றிலும் மேலான தேச சேவை செய்தவர்களாவோம் ராணுவத்தில் பயிற்சி பெறுபவர்கள் தங்கள் சாமான்களை தாங்களே தயாரித்துக்கொள்வது கஷ்டம் ஆண்களோடு பெண்களுமாக எல்லோரும் ராணுவத்தில் சேர்ந்தால் அவர்களது தேவையை யார்தான் பூர்த்தி செய்வது? எல்லோருமே பல்லக்கில் ஏறினால் தூக்குபவர்கள் வேண்டாமா? அல்லது பெண்கள் ராணுவத்தில் சேர்ந்தால் ஆண்கள் அவர்கள் தேவையைப் பூர்த்திசெய்யவேண்டும் இதற்கு ஒப்பமுடியுமா? எவ்வளவுதான் போட்டி போட்டாலும் ஆண்களுக்குச் சரிசமானமான பலத்தை அடைவது கஷ்டம். ஆட்டுக்கல்லில் கால்படி தோசைமாவை அறைத்துவிட்டு விசிறி (Fan) க்கு அடியில் 'அப்பாடா' என்று படுத்துக்கொள்ளும் நம்மைப்போன்ற பெண்களுக்கு இது ஏற்ற தொழிலா? ஏற்றதொழிலாக இருந்தாலும் இதை கடைப்பிடிப்பது மிகவும் கஷ்டமான பிரச்னை

'ஜான்ஸி ராணி போர் முனையில் ஈடுபட்டு தன் தேசத்திற்காக உயிரைத் தியாகம் செய்யவில்லையா? அதுபோல் நாமும் ஏன் இருக்கக்கூடாது' என்றாள் முதல் சிநேகிதி ஜான்ஸி ராணியைப்பற்றி படித்த அவர் மற்றொரு வாக்யத்தைப் படிக்க மறந்துவிட்டாள் ஜெயிப்பதற்கு இனி இடமில்லை என்று தெரிந்ததும் லக்ஷ்மிபாய் தன் சுவீகாரப் பிள்ளையை முதுகில் கட்டிக்கொண்டு யுத்தம் செய்து. விரோதிகளின் நடுவில் பாய்ந்து 100மைல் தூரம் பசி தாகத்தோடு சென்று 'கால்பி' அடைந்தாள். சாதாரண சமயங்களிலேயே தன் குழந்தைகளை தூக்க சக்தியற்றவர்களாய், கணவனையோ ஆயாவையோ எடுத்து வரச்சொல்லும் பெண்கள் போர் முனையில் குழந்தைகளை முதுகில் கட்டிக் கொண்டு சண்டை போட முடியுமா? எதற்காக இதைப்பற்றிச் சொல்ல நேருகிறதென்றால் முன்காலத்தில் பெண்களுக்கு இருந்த சக்தி இப்பொழுது கிடையாது என்பதற்காகத்தான்!

மேலும் போலீஸ் பயிற்சியில் சேர்ந்தால் வெளி இடங்களுக்குப் போகநேரிடும் அச்சமயங்களில் நம் வீட்டை கவனிப்பவர் யார்? பெண்களுக்கே பொக்கிஷ குணமான அஹிம்ஸா முறையை விட்டுவிட்டு ஹிம்ஸை வழியை பழக்கிக் கொள்வானேன்? காந்திமகான் வழியே கடைப் பிடிப்போம்: இதை விட்டுவிட்டு தொண்டர்கள் பயிற்சி பெறலாம்.

அடுத்தபடி பஸ் கண்டக்டர்கள் வேலையை எடுப்போம் சாதாரண நாட்களில் பஸ்ஸில் ஏறும் பொழுது, ஆடவர்கள் எழுந்து நின்று தம் ஸ்தானத்தை நமக்கு விடுகிறார்கள். நாம் அந்த இடத்தில் தயக்கமின்றி உட்காருகிறோம். ஏன்? நம்மால் இந்தப்பஸ் ஆட்டத்தில் நிற்க முடியாது. அப்படிப்பட்ட நாம் பஸ் ஓடும்பொழுதே டிக்கட்கொடுக்க இயலுமா? நம தேசத்தில் ஆண்களுக்குப் பஞ்சமில்லை. அவர்களை வேலையில்லா திண்டாட்டத்தில் மூழ்க விட்டுவிட்டு நாம் ஏன் இதுபோன்ற துறைகளிலெல்லாம் போட்டியிடவேண்டும்.

இது மாதிரியான கஷ்டமான வேலைகளை விட்டுவிட்டு பெண்கள் தங்களுக்குகந்த வேலைகளில் ஈடுபடலாம். ஏழை, அனாதை விதவை ஸ்திரீகள் முதலில் வேலையில் ஈடுபடட்டும். அவர்களுக்குத்தான் தொழில் செய்ய வேண்டியது அவசியம். எல்லாப் பெண்மணிகளும் ஏன் தொழில் செய்ய முன்வரவேண்டும் என்பதுதான் புரியவில்லை எல்லாப் பெண்களும் விவாகம் செய்துகொண்டு குடும்பத்தோடு இன்பமாக வாழ்வதே தேசத்திற்கு சிறந்த சேவை வீட்டையும் கவனித்து தொழிலையும் செய்வது என்பது சிரம சாத்தியமான காரியம் காலையில் எழுந்ததும் சமையல் செய்து புருஷனுக்கு அன்போடு பரிமாறி. குழந்தைகளை சுத்தமாக வைத்துக்கொண்டு, அவர்களுக்குப் பாடம் போதிப்பது.பாட்டு நாட்டியம்சொல்லித் தருவது இவைகளைச் செய்தால் எவ்வளவோ விஷயங்களில் மேம்பாடு உண்டு மிச்ச நேரங்களில் நூல் நூற்பது. தையல் தைப்பது வீட்டு சாமான்களை கவனித்து பார்ப்பது இவைகளைச் செய்தால் விரல் மடக்கவும் பொழுதிராது மாலையில் கணவன் ஆபீஸில் வேலை செய்து அலுத்துத் திரும்பும்பொழுது அழகாக ஆடை உடுத்தி, ஒரு புன்முறுவலோடு அவனை வரவேற்றால் அந்த இன்பத்திற்கு ஈடு ஸ்வர்க்கலோகத்திலும் கிடையாது அப்படிப்பட்ட ஒரு மனைவியை எந்த ஆடவனும் அடிமையாக வைத்திருக்கவும் மாட்டான் இதனால் பெண்கள் எப்பொழுதும் வீட்டிலேயே அடைந்து கிடக்க வேண்டுமென்பது அர்த்தமில்லை. லேடீஸ்கிளப், அநேகம் கூட்டங்கள் இவை போன்ற இடங்களுக்கு அவ்வப்போதும் போய் வருவதற்கு ஒருவரும் தடை சொல்லப் போவதில்லை அப்படிப் போவதனால் புத்தி விசாலமடையும் குடும்பம் ஒரு இன்பச் சோலை. அதை மணம் கமழச் செய்வது பெண்களாலான காரியமே அதை விட்டுவிட்டு வீட்டு வேலைகளை பாதி வேலைக்காரியிடம் ஒப்படைத்துவிட்டு வெளியில் போய்



"அட கடவுளே! இப்போதானே 3-ம் நம்பர் பஸ் போவுது. 23-ம் நம்பர் பஸ் வரத்துக்கு இன்னும் 20 பஸ்ஸ இல்லே காத்தாவணும்"

உத்தியோகம் செய்துவிட்டு அலுப்போடு வீடு திரும்பினால் நம்மை மலர்ந்த முகத்துடன் வரவேற்பவர்களைக் காண்பது அரிது......

வீட்டிலிருந்து கொண்டே தேசத்திற்குத் தேவையான எவ்வளவோ சாமான்களை தயாரிக்கலாம். இதைப் பற்றி ஆராயப் புகுவோமானால் ஒரு புத்தகம் எழுதி விடலாம் ஏழை அனாதை விதவை ஸ்திரீகள் முதலியோர் தங்கள் தேவையை தாங்களே பூர்த்தி செய்ய வேண்டி இருப்பதால் அவர்கள் தொழிலில் ஈடுபடுவதில் அர்த்தமிருக்கிறது சாதாரணமாக பணக்கார குடும்பத்து ஸ்திரீகள் தொழிலில் ஈடுபடுவதால் பல ஆடவர்கள், அனாதை ஸ்திரீகள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் அனாதை விதவை ஸ்திரீகளும் பெண்டிற் குரிய தான தொழிலில் ஈடுபட்டால் மிகவும் நல்லது.



மனைவி :—என்னா. நம்ப அனுராதா நன்னா டான்ஸ் பண்றா! ஒரு நட்டுவனாரை ஏற்பாடுபண்ணி முறையா டான்ஸ் சொல்லிக்கொடுக்க அரேன்ஜ் பண்றதானே.

கணவன் —சரிதாண்டி! பெரிசா ப்ளான் போட்டுட்டியே! இன்னிக்கு நட்டுவனாரை ஏற்பாடுபண்ணணும். நாளைக்கு அரங்கேற்றத்துக்கு 'அரேன்ஜ்' பண்ணணும்பே!

இப்பொழுது பெண்டிர்க்கு சாதகமாக விவாகரத்து மசோதாவும் பலதாரவிவாகத்தடை மசோதா ஒன்றும் நிறைவேறப்பட்டிருக்கிறது இதில் பல தார விவாகத் தடை மசோதாவினால் பெண்களுக்கு எவ்வளவோ அனுகூலங்கள் ஏற்படும் ஆனால் விவாக ரத்து மசோதாவை மிக்க கவனிபபோடும், யோசனையோடும் அனுஷ்டிக்காவிடில் ஆண் பெண் இரு பாலருக்குமே பலவிதக் கஷ்டங்கள்நேரிட ஹேது உண்டு பெண்களுக்குச் சாதகமாக பல தார விவாகத்தடை மசோதாவை நிறைவேற்றி இருக்கும்போது விவாக ரத்து மசோதா பெண்களுக்குப் புதிதாகப் பலன் ஒன்றும் தரப்போவதில்லை மசோதாக்கள் வரும் முன்பு ஒரு ஆடவன் தன் மனைவியை அநியாயமாக தள்ளிவைத்துவிட்டு வேறு பெண்ணை விவாகம் செய்துகொண்டிருந்தான் இப்பொழுதோ வெனில் மனைவியிடம் ஏதாவதொரு விதமான வெறுப்பு உண்டானால் அவளைப்பற்றி ஏதாவதொரு காரணம் காட்டி ரத்து செய்துகொண்டு வேறு மனைவியை விவாகம் செய்துகொள்வான் அவ்வளவுதான் வித்தியாசம் பெண்கள் விஷயத்தில் ஒரு பெண் தன் கணவனை ரத்து செய்துவிட்டு வேறு ஒருவனை மணம் செய்து கொள்வாள் இவ்விதமாக ஒரு பெண் தன் வாழ்நாளில் அநேக ஆடவர்களை விவாகம் செய்துகொள்வது இந்தியப் பெண்மணிகளுக்கே நேர்மையற்ற முறை.

விவாக ரத்து மசோதாவில் ஒரு விதி கணவன் கொடிய வியாதியினால் பீடிக்கப்பட்டவனாக இருந்தால் விவாக ரத்து செய்துகொள்ளலாம் என்பது. நர்ஸ் வேலையை மிகவும் சந்தோஷமாகச் செய்யும் ஒரு பெண்ணிற்கு வியாதியால் பீடித்து துன்புறும் தன் கணவனுக்குப் பணிவிடை செய்வது ஒரு இளப்பமான காரியமா? 'பெண்களுக்கு வியாதி வந்துவிட்டால் ஆண்கள் அவர்களை ரத்து செய்து விடுகிறார்களே என்று நீங்கள் கேட்கலாம் உலகத்தில் யார் யார் தப்பு செய்கிறார்களோ அவர்களேபோல் நாமும் தப்பு செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர்களை நலவழியில் திருப்ப முயல வேண்டுமேயல்லாது பழிக்குப் பழி என்கிற உணர்ச்சி கூடாது மேலும் பலதார விவாகத்தடை மசோதா மட்டும் நிறைவேற்றபபட்டிருந்தால் ஆண்களைப்பற்றிக் குறைகூற இடமே இராது பலதார விவாகத்தடை மசோதாவின் பலா பலன்களை சிறிது நாள் பரீக்ஷை செய்து பார்த்துவிட்டு ரத்து மசோதாவை நிறைவேற்றுவதைப் பற்றி யோசித்திருக்கலாம்.

கணவன் முரடனாக இருந்தால் அவனை விட்டுவிட்டு சிறிது நாட்கள் தனியாக பிரிந்து இருக்கலாம். அவன் வேறு மனைவியை விவாகம் செய்துகொள்ள முடியாதபடி சட்டம் வந்துவிட்டது. அதனால் அவன் தனிமையை உணர்ந்து தானாகவே மாறிவிடாலம்! அது முடியாவிடில் அவனிடமே பொறுமையாக இருந்தால் வெற்றி பெறலாம். மஹாத்மா காந்தி மிகவும் முரட்டுத்தனமாக நடந்துகொண்ட காலத்தில் அன்னை கஸ்தூரிபா கடைபிடித்த பொறுமையை நாமும் கடைப்பிடித்துத் தான் பார்ப்போமே!

நாங்கள் அடிமையாக இருக்கமாட்டோம் என்று இனிமேலும் பெண்கள் கூச்சல்போட்டால் அதற்கு அர்த்தமே இல்லை இந்நாட்களில் ஒரு வீட்டிலும் ஒரு பெண்மணியும் அடிமையாக இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் பெண்களுக்கு சாதகமான எவ்வளவோ சட்டங்களும் வந்துவிட்டன விடுகளிலோ எஜமானி அம்மாள் வைத்ததுதான் சட்டம்

இக் கட்டுரையை எழுதுகிறவள் ஒரு பழங்காலத்திய பாட்டி என்று நினைக்கவேண்டாம். நானும் உங்களைப் போன்று நவநாகரீகத்தில் திளைகின்ற ஒரு யுவதிதான் இவை எல்லாம் என் மனதில் படிந்திருககும் எண்ணங்கள் 'இவளைப் போன்ற பெண்களால்தான் நம் சுதந்திரம் பறிபோகின்றது என்று என்னைத் திட்டலாம். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் தினசரி காலையிலிருந்து மாலைவரை வீட்டு வேலைகளைக் கவனித்துவரும் என்னுடைய இன்பத்திற்கு ஈடு இணை கிடையாது. என் கணவரும் என்னைப் பூர்ணசுதந்திரத்துடன் தான் நடத்தி வருகிறார்.

ஆரோக்ய வாழ்க்கை

வைசூரி

★

வைத்தியரத்னம்

எம். துரைசாமி ஐயங்கார்

அம்மைத்தாய் என்றும், பிடாரி என்றும், மாரியாத்தாள் என்றும் கூறிக்கொண்டு இந்நாட்டில், முக்கியமாகத் தமிழ்நாட்டில் பெரும்பான்மையான ஜனங்கள் இன்றைக்கும் மூட நம்பிக்கையினால் தம்மைப் பொல்லாத நோய்கள் வாட்டும்போது அவற்றிற்குப் பகுத்தறிவுடன் ஏற்ற பரிகார முறைகளைக் கையாளாமல் பலவித அல்லல்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்துவருகிறோம் அவ்வாறு தெய்வகோபத்தின் காரணமாயேற்படுகிறதென்கிற மூட நம்பிக்கையினால் விருத்தியாகிற ஸாங்கிராமிக (ஒட்டுவாரொட்டி தோஷமுள்ள பெருவாரி நோய்களுள் வைசூரி என்று வழங்கப்படும் மஸூரிகா ரோகம் முக்கியமானது. இவ்விதம் மூட நம்பிக்கையினால் எவ்வியாதிகளை தெய்வக் கோளாறெனக் கருதி ஜனங்கள் அவற்றால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்களோ அவ்வித வியாதிகளின் தன்மைகளையும் விலக்கும் வகைகளையும்பற்றி நாம் எவ்வளவு பிரசாரம் செய்தபோதிலும் அவ்வளவும் அவசியமேயன்றி அதிகமெனக்கூறுவதற்கில்லை

உண்மை யறியாமல் மாரியம்மன் சீற்றத்தால் தோன்றுவதாகத் தமிழர் பலர் கூறும் வைசூரி அல்லது பெரியம்மை என்கிற மஸூரிகா ரோகத்தைப்பற்றியது இக்கட்டுரை. கடுமையான தலைநோயோடும் ஜ்வர வேகத்தோடும் உண்டாகிற இந்த வியாதியில் விஸ்ப்போடங்கள் என்கிற கொப்புளங்கள் தோன்றுவதைக் காண்கிறோம. இதனால் இதற்கு ஏற்ற பரிகார முறையைக் கையாளாததினால்—கண்ணிழந்தவர் பலர். செவிடானவர் பலர், முக விகாரமடைந்தவர் பலர் வேறு வகை அங்கஹீனங்களுக்கு உள்ளானவரும் பலர் உண்டு. இவ்வியாதி விஷமித்து உயிரிழப்பவரும் உண்டு. இது ஒரு வியாதியென்னும் உண்மையறிந்து, இதற்கு ஏற்ற சிகித்ஸா கிரமங்களையும், தடுப்பு முறைகளையும் கையாண்டால் முற்கூறிய சங்கடங்களிலிருந்து தப்பிச் சுகமடையலாம்.

இவ்வியாதி ஸம்பந்தமான தோஷம் உடலிற்பற்றி அதன் சேஷ்டைகளை ஆரம்பிக்கும்போது குளிர் ஜ்வரம் காணும் இடுப்பு வலி. முதுகுவலி தலைவலி முதலியவை தாங்க வியலாமல் ஏற்படும்; மேல் வயிற்றிலும் வலியேற்பட்டு வாந்தியும் சிலருக்குண்டாகும்: உடற்சூடு அதிகரித்துச் சர்மம் வறண்டுபோம்; உடற் சோர்வும் அமைதியின்மையும் அதிகரிக்கும்; பசி மந்தித்துப்போய் உணவில் வெறுப்பும் காணும், நாடி நடை பட படக்கும்; நித்திரையுறும்போது பிணியாளி பிதற்றுவான்

ஸாதாரணமாக மூன்றாம் நாள் முகத்திலும் கழுத்திலும் கெட்டியான சிவந்த விஸ்ப்போடங்கள் என்கிற குறுவைகள் தோன்றும் இவற்றையே அம்மைக் கொப்புளங்கள் என்பார்கள். இந்த விஸ்ப்போடங்கள் கிரமமாக உடலிலும் கை கால்களிலும் பரவும். இவ்விஸ்ப்போடங்களுக்குள் லஸீகா என்கிற நிணநீர் திரண்டு தள தளப்பான கொப்புளங்களாகப் பருத்து. அநேகமாய் எட்டாம் நாள் உடைய ஆரம்பிக்கும். பிறகு இக்கொப்புளங்களின்மேல் பொருக்குகள் ஏற்பட்டு, அவை அப்பால் ஐந்தாறு நாட்களில் உலர்ந்து உதிர்ந்து விழும்.

இந்த வியாதி பிணியாளிக்குப பொதுவாக மிகத் தொல்லையிழைக்கும் இயல்பினதென்றாலும், இதன் கடுமை ஸந்தர்பங்களுக்கேற்றவாறு சிறிது மந்தமாகவோ, பெரிதும் துன்பமளிப்பதாகவோ இருக்கும். ஆனால் இதன் மந்தமான அல்லது கடுமையான தன்மை உடலிலுண்டாகும் விஸ்ப்போடங்களின் (குளுவான்கள்) அளவை நேராக அனுஸரித்ததாயிருக்கும். விஸ்ப்போடங்கள் மிகுதியாகத் தோன்றியிருந்தால் அவை கிரமமாக ஒன்றோடொன்று அணுகிச் சேர்ந்து, ஒழுங்கினமான வட்டமில்லாத அடையடையான தழும்புகளாகக் காணப்படும்; விஸ்ப்போடங்கள் எண்ணிக்கையில் சொற்பமாகத்தோன்றியிருந்தால், அவை சிறு சிறு ஒழுங்கான வட்டங்களாக அமைந்திருக்கக் காணலாம். இவற்றுள் முந்தியது அதிக தொந்தரவளிக்குந்தன்மையதாகையால், அது ஸோபத்ரவ விஸ்ப்போடம் எனப்படும்; பிந்தியது ஸாமாந்ய விஸ்ப்போடம் என்று வழங்கப்படும் ஆகவே. முந்தியது பெரிதும் அபாயகரமானதென்றறியலாம். இவ்விரண்டையும் உத்கட நிலைமை, மந்த நிலைமை என்றும் பிரித்து வழங்கலாம்.

மஸூரிகாரோகத்தில் உத்கடாவஸ்த்தை மந்தாவஸ்த்தை (அவஸ்த்தை என்றால் நிலைமை எனப் பொருள்) இவ்விரண்டுக்குமுள்ள பேதம் உபத்திரவ ஜ்வரம் எனப்படும் இரண்டாமுறை ஜ்வரம் வரும் பொழுதுதான் நன்கு விளங்கும் இவ்வுபத்திரவ ஜ்வரம என்பது விஸ்ப்போடங்கள் முற்றிலும் நீர்கொள்ளும் பொழுது அல்லது அம்மை ஆரம்பித்த எட்டாம் நாள் உண்டாவது வழக்கம். பெரியம்மை எனப்படுகிற மஸூரிகா ரோகம் ஒரு சிறிது கடுமையாயிருக்கும்போது, மஸூரிகாஜ்வரம் எப்பொழுதுமே குறிப்பிடக்கூடியவாறு தொந்தரவளித்துவரும்; ஆனால் ஸோபத்திரவ விஸ்ப்போடத்தில் (அம்மைத் தழும்புகள் அடை போல் பரவி வளர்ந்திருக்கையில்) இந்த ஜ்வரம் உக்கிரமாகப் போய் பெரும்பாலும் பிராணாபாயத்திற்கு ஆஸ்பதமான நிலைமை நேரிட்டிருப்பதற்கு அறிகுறியாகும்.

முற்கூறிய இருவகை நிலைமைகளிலும் வாயில் உமிழ்நீர் அதிகமாய் ஊறும்: தொண்டையில் புண்ணும், நாக்கில் காளானும் தோன்றும்; குட-

லில் அழற்சியேற்பட்டு அதிஸாரமும் உண்டாகும். நோயாளியின் உடலிலிருந்து ஒருவகை அருவருப்பான துர்வாஸனையும் வீசும். சிற்றம்மை என்கிற ரோமாந்திக மஸூரிகை, சர்மதளம் ஆகிய அம்மைகளில் காண்பதுபோல் இம்மஸூரிகையிலும் தொண்டை, கழுத்து முதலிய விடங்களில் கிரந்திகள் வீக்கமும், சில அவயவங்களில் வித்ரதிகள் என்கிற சீழ்கட்டிகளும், கண்பார்வையைக் குறைக்கும் நேத்திர தோஷமும் அக்னிமாந்தயம் என்னும் பசியின்மையும், ச்வாஸாசயக் கோளாறுகளும், க்ஷயரோகமுங்கூட உபத்திரவமாகத் தோன்றலாம். (இங்கு குறிப்பிட்ட எல்லா நோய்களுமே ஒருங்கே உண்டாகுமெனக் கருதக்கூடாது; ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு உபத்திரவம் உண்டாகும்)



ரஸிகர் நெ 1:—டே, எலே! எழுந்திருடா மாமா மடிலே தலையை வெச்சிண்டு, அவரை படுத்தறயே!

ரஸிகர் நெ 2:—சே சே! அதெனுலென்ன! சித்த நாழி! மிருதங்கக்காரர் தனியாகப் பொளக்க ஆரம்பிச்சார்னு தன்னுலே அலறிப் புடைச்சிண்டு எழுந்திருக்கிருன்!

மஸூரிகாரோகம் ஆகந்துகமானது என்ருல் வெளியிலிருந்து வாயுமூலமாகவோ, வேறு பிணியாளி மூலமாகவோ உடலிற் பற்றிக்கொள்ளும் விஷதோஷத்தினுல் உண்டாகும் ரோகம், மேலும் வெகு பலமான ஸாங்கிராமிகரோகம் (ஸாங்கிராமிகம் என்ருல் தொற்று வியாதி) பல ரோகங்கள் ஸாங்கிராமிகத் தன்மையுள்ளவை. ஆனுல் மஸூரிகா ரோகத்தின் விஷதோஷத்தைப்போல வேறு எவ்வியாதி தோஷமும் அவ்வளவு தூரத்திலிருந்தும், அவ்வளவு நிச்சயமாகவும் தொற்றிப் பரவும் விசேஷ சக்தியுள்ளதாயில்லையென்றே சொல்லலாம் ஆனுல் இவ்வியாதியினுல் ஒரு முறை வருந்திய மனிதனை இந்நோய் மறுமுறை தாக்குவது அரிது.

"வைசூரிக்குக் காரணமான விஷம் ஒரு மனிதனுடைய உடலில் ஊடுருவிச் சென்று, பிறகு பன்னிரண்டு நாட்களளவும் அது இரத்தத்தில் ஊறி அப்பால் அதன் குணங்களைக் காட்டுமாறு வளர்ந்துவிருத்தியாகின்றது இதில் ஒரு விசேஷம். வைசூரியால் வருந்தும் ஒரு நோயாளியின் தேகத்திலிருந்து ஒரு சிறிது வைசூரி விஷவஸ்துவை எடுத்து, ஆரோக்கியசாலியான மற்றொருவனுடைய சர்மத்தினுள் குந்திச் செலுத்தினுல் அவ்விஷம் சுயமாகப் பரவும் விஷத்தைவிட மிக்ககுறைவான குறிகளுடன் சொற்ப ஜ்வரத்தையே உண்டுபண்ணுவதாக ஆராய்ச்சியாளர் பரிசோதித்து அறிந்திருக்கிருர்கள் அதாவது இவ்விஷம் வாயு மூலமாய் நமது ச்வாஸாசயத்தில் பிரவேசித்து உடலில் ஊறினுல் சர்மத்தின் மூலமாய் நாம் செயற்கை நெறியில் செலுத்தும் விஷத்தைவிட அதிக கடுமையாக வேலை செய்து வியாதியுண்டு பண்ணும். ஆகவே வைசூரியைத் தடுக்க இவ்விஷப்பற்றுள்ள நிணநீரைச் சர்மம் மூலமாகச் செலுத்தி அம்மைகுத்தும் முறை அனுகூலமாயிருப்பதாகக் கண்டறிந்தார்கள் வைசூரி குத்திக்கொண்டவர்களில் நூற்றுக்கு ஒரு மனிதன் பெரியம்மை வியாதிக்கு உட்படலாம் அப்படி நேரிட்டாலும் அது கடுமையாயிருப்பதில்லை.' என்பது மேனுட்டு முறையினரின் கருத்து.

அம்மைகள் கருநிறமடைந்து, வெகு விஸ்தாரமாக அடை போல் பரவி. அதிக வலியும் வேதனையும் உண்டுபண்ணிக்கொண்டு. சீழ் அல்லது தூநீர்ப் பெருக்குள்ளவைகளாயிருந்தால் அவை ஸந்நிபாத தோஷ ஸம்பந்தமானவை. அந்நிலைமையில் தொண்டையில் புண் உண்டாய், உணவு விழுங்கும்போது அதிக கஷ்டமேற்படும். ஆகாரத்தில் விருப்பமிராது. உடலில் அதிக அசதியேற்படும்; வெளிச்சத்தைப் பார்க்கவியலாமல் கண்கூசும்; வாய்ப்பிதற்றலும் துர்ஸ்வப்னங்களும் தோன்றும்; விக்கலும் இருமலும் காணலாம்; இக்குறிகளைக்கண்டு நோயாளியின் நிலைமை அஸாத்யமென்றறியலாம்.

சிகிச்சை:—இவ்வியாதியில் பெரிதும் குளிர்ச்சியான பரிகார முறைகளையே உபயோகிக்க வேண்டியிருப்பதால். இதற்குச் சில வைத்தியாசிரியர்கள் 'சீதளா ரோகம்'' என்றும் பெயர் கூறுவதுண்டு ஜ்வரம் அதிகமாயிருக்கையில் மற்ற ஜ்வரங்களுக்குச் செய்வது போன்ற உபசாந்தி வகைகளையே இதிலும் உபயோகிக்கலாம் தலைவலியும், ஜ்வரமும் தணிவதற்கு சிதாம் சுரஸம்' என்னும் மருந்தை மாத்திரையாயிருந்தால் வேளைக்கு இரண்டு மூன்று மாத்திரை வீதமும், சூர்ணமானுல் வேளைக்கு பத்து குன்றுமணியெடையும் தேனில் கலந்து உட்கொள்ளலாம். ஷடங்கக்வாதம் என்கிற கஷாயம் குளிர்ச்சி தரக்கூடியதாயிருப்பதால். அதைக் கொடுத்து அடிக்கடியும் (3 அல்லது 4 மணிக்கு ஒரு முறை) ஜ்வரதாபத்தை தணியச் செய்யலாம். ஷடங்கக்வாதத்துடன் ஸ்வச்சந்தபைரவி என்னும் மாத்திரையும் உபயோகிக்கப்படுமானுல் கடுமையான ஜ்வரமும் தணியும். தசமுலாரிஷ்டம் அடிக்கடியும் சிறிது கொடுத்து வருவதும் நலம்.

இளஞ்சூடான ஜலத்தில் மிருதுவான துணியை நனைத்து, அதனுல் உடல் முழுமையும் மெதுவாக ஒத்தடம் கொடுப்பதுபோல் துடைத்து, நாள்தோறும் உடலைச் சுத்தம் செய்வது அவசியம். பிணியாளியின் உடைகளையும் அவனுக்கு உபயோகிக்கும் வேறு வஸ்துக்களையும் நன்ருகக் கழுவி கொதி நீரால் சுத்தம் செய்து வைக்கவேண்டும் போஷணை மிகவும் அவசியமாகையால் வாற்கோதுமை புழுங்கலரிசி கோதுமை ரவை முதலியதலான கஞ்சியினங்களில் ஒன்றை அடிக்கடியும் கொடுத்துவரவேண்டும். ஜ்வரம்



பர்லினில் ஸோவியத் முனையைச்சேர்ந்த பொதுவுடைமை "லார்டு மேயர்" பிரீட்ரிஷ் ஈபர்ட் என்பவர் "ஜனநாயக குழு"வை ஸ்தாபித்து அதை வியாபகப்படுத்தியிருக்கிறார். ஆட்சி புரிவோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையே ஸோவியத் முனையில் தொடர்பிருக்க இது சாதனம் என்பது அவர் கருத்து. முதலில் இதை நாஜிகள் ஏற்பாடு செய்திருந்தனர். ஒவ்வொரு நகரிலும் இத்தகைய கட்சி உண்டு. இதை ரஷ்யர்கள் இப்போது விரிவுபடுத்தியிருக்கின்றனர். 10 முதல் 14-வயதுள்ள இளம் சிறுபர்கள் இந்தக் குழுவின் ஆதரவில் ரஷ்யரால் ஆரம்பிக்கப்பட்ட "யங் பயனீர்" பத்திரிகைக்கு குறிப்பெடுத்துக்கொள்கின்றனர்.

கடுமையாயில்லாவிடில். நன்ருகச் சமைத்த அன்னத்தைப் பாலிலாவது புளிப்பில்லாத மோரிலாவது கலந்து உட்கொள்ளக் கொடுக்கலாம்

மஸூரிகா ரோகம் (பெரியம்மை) ஏற்பட்டிருக்கையில் மருந்து எதுவும் கொடுக்கக்கூடாதென்று ஸாதாரண ஜனங்கள் கூறுவது வழக்கம். ஜ்வரம் பலமாக விருத்தியாகாமலிருக்கவும், விஷவேகம் குறையவும் ஏற்ற மருந்துகள் உபயோகிப்பது அவசியம். ஆனால் கடுமையில்லாத ஸாதாரண மஸூரிகா ரோகம், எவ்வித சிகிச்சையுமின்றி ஏற்பட்ட எட்டாவது அல்லது பன்னிரண்டாவது நாள்தானே தணிந்து விடுவது வழக்கம். அவ்வித பிணியாளியைப் பரிசுத்தமாகவும் போஷணையோடும் பராமரித்து வந்தால் போதுமானது.

அட்டைப்படம்

வளையும் - வனிதையும்

★

ஒளி மிகுந்த வலம்புரிச் சங்கங்கள் நிறைந்த பகுதிகளுக்குத் தலைவனொருவனிருந்தான். தன் மன இயல்புக்கு இயந்த நங்கை யொருத்தியை இதய பீடத்திலிருத்திக்கொள்கிறான். மனத்திடை புகுந்த அம் மங்கையின் கரத்துக்குத் தன் அன்புக் காணிக்கையாக வலம்புரிச் சங்க வளையல்களை அணிவித்து அக மகிழ்கிறான். "கன்னிமாடத்திலுள்ள தலைவியை காவல்களையெல்லாம் மீறி என்ன துணிச்சலுடன் இவர் விரைந்து போகிறார்? இந்த கள்ளச் சந்திப்பால் களிப்புக்குப் பதில் களைப்புதான் தலைவிக்கு அதிகரித்துப் போகிறது. இதை இப்படியே நீடிக்கவிட்டால் தலைவியின் கதி என்னவது? தன் தலைவனின் பிரிவினால் தாபமுற்ற தலைவி ஏற்கனவே உடல் சோர்ந்தாள்; உள்ளம் சோர்ந்தாள். கை வளையல்களெல்லாம் நழுவி விழும் நிலைமைக்கு இளைத்துவிட்டாள். இதை இனி மிஞ்சவிடலாமா?" என்ற கவலை சேடிக்கு ஏற்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில்தான் தன் காதலியைக் காணவந்தான் அக்கட்டிளங்காளை. அப்போது தலைவியின் தோழி சொன்னாள்:—

"ஐயனே! சொல்வதைக்கேளும். இந்தமாதிரி தாங்கள் முன்பு வளையல்களை என் தலைவிக்குக் கொடுத்து மறைந்தேபோய் விட்டீர்கள் அவளோ உம்மை நினைந்து நினைந்து பிரிவித்துயரால் நலிந்து வாடினாள்; வளையல்கள் நழுவின. இப்போதும் வளையல்களுடன் வந்து நிற்கிறீர்கள் இவை முன் கொடுத்துச் சென்றதைப் போன்றவைதானா? அல்லது மெலிந்த காலத்தும் நீங்காதனவா? வலம்புரிச்சங்கத்திலுள்ள முத்துக்கள் குவிந்து கிடப்பதால் இருளென்றால் என்னவென்றே தெரியாத கடல்துறையினுக்குத் தாங்கள் தலைவர் என்பது என்னமோ உண்மைதான்! இருந்தென்ன பிரயோஜனம்? தாங்கள் இப்படி என் தலைவியின் மனத்தை இருட்டாக்கிவிட்டீர்களே! அவள் உள்ளத்தில் ஒளிவீசச் செய்வது உமக்குக் கடினமா? தங்கள் காதலியின் மன இருளை நீக்க, இந்த களவொழுக்கத்தை விட்டுவிட வேண்டும். இது ஊராரின் ஏச்சுக்கும் பேச்சுக்குமல்லவா இடம் தரும்! எனவே தாங்கள் அவளை சீரிய முறையில் மணந்து வாழ்வதுதான் நேர்மை. அப்போதுதான் அவளது இதய தாபம் நீங்கி இதய தீபம் பிரகாசிக்கும் இத்தகைய கருத்துக்களை குறிப்பாலுணர்த்தும் 'வளைப் பத்து" பாடலைக் கவனிக்கலாம்:—

வலம்புரி யுழுத
வார்மண லடைகரை

இலங்குகதிர் முத்தம்
இருள்கெட இமைக்கும்

துறைகெழு கொண்கநீ தந்த

அறைபுனல் வால்வளை
நல்லவோதாமே

வலம்புரி யுழுத-வலம்புரிச் சங்கங்கள் நிறைந்த; வார்மணல்-மணல் மிகுந்த; அடைகரை-கரையை அடுத்த; (துறை) இலங்குகதிர் முத்தம்-பிரகாசிக்கும் முத்துககள்; இருள்கெட இமைக்கும்-இருள் நீங்கமின்னும்; துறை கெழு-(இப்படிப்பட்ட) துறையிலே பொருந்திய; கொண்க தலைவன்; அறைபுனல்-ஒலி மிக்க கடலினின்று எடுக்கப்பட்ட; வால்வளை-வெண்மையான சங்கு வளையல்கள்; நல்லவோதாமே-நல்லவைதானா?

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து,, சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd.No.2221.

Prop: S. அஹமத் உசேன்,
கோட்டை, சேலம். S.I.R.

ஜாதகம்! ★ ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம்:–1 முதல் 3 உமது எதிர் கால கேள்விகட்கு ரூ. 2. 3—க்கு மேல் கேள்வி 1–க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிப்புகட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

★

மானேஜர்,

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

"விஜய ரக்ஷணி"

(மூலகா யந்திர தாயத்து)

இந்த கவசத்தை அணிவதால் கிரஹசாராதி தோஷம் நீங்கும். ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கலியாணம், வியாபார லாபம், பகை சமாதானம் உத்யோக உயர்வு, அதிகாரி விஸ்வாஸம், வியாஜ்ய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம், மற்றும் ஸகல வழியிலும் மேன்மையுண்டாகும். மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விவரம அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிப்பிட்டு எழுதினல் கவசம் தயார் செய்தனுப்பப்படும்.

விஜய ரக்ஷணி கவசம் 1-க்கு ரூ. 7—8—0

விஜய ரக்ஷணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ. 72-8-0

தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம், காதல், கலியாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு அதிருஷ்ட நாள், எண், நிறம், மற்றும் முக்யவிஷயங்களும் எழுதியனுப்பப்படும். ஜன்ன கால விவரம் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. மேல் கேள்வி 1–க்கு அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம் கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோகாம்சம் சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் ஒரு தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

ஹனுமதுபாளி, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்.

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32–க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24–க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12–க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15–க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80–க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும்.

தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை,

மவுண்ட் ரோடு, சென்னை.



சென்னைக் காஸ்மோபாலிடன் கிளப் தலைவரும், அங்கத்தினர்களும் சென்ற வாரம் சென்னைக் கவர்னருக்கு நடத்திய தேக்கச்சேரியின்போது எடுத்த படம்.



ஸன்யாஸிகள் நிறைந்த இடத்திற்குப் பெயர்போனதான இதாலி நாட்டில் மிருகங்களுக்குக்கூட ஸன்யாஸ ரட்சகர்களுண்டு. குதிரை முதல் நாய்க்குட்டிகள் வரை மதாசாரியனிடம் ஆசி பெறுகின்றனவாம் இந்தச் சடங்குகள் நடைபெறும் மடத்தில் நாய்ச் சொந்தக்காரர் ஒருவர் சென்று தமது நாய்களுக்கு மத குருவின் ஆசியைப்பெறும் காட்சி!

வெள்ளையானைக்குட்டியின் நன்றி



'லக்ஷ்மி'

காசியில் பிரமதத்தன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். காசிக்கு அருகே இருந்த ஒரு கிராமத்தில் ஐந்நூறு தச்சர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் எல்லோரும் படகுகளில் ஏறிக்கொண்டு கங்கை நதி வழியாய் ஒரு பெரிய காட்டுக்குப் போவார்கள் அங்கே போய்ப் பெரிய பெரிய மரங்களை வெட்டுவார்கள் தூண்களுக்கு உபயோகமானவை இவை, கதவுகளுக்கு உபயோகமானவை இவை என்று அந்த மரங்களிலேயே குறித்துவிடுவார்கள் எல்லாத் துண்டுகளையும் மறுபடி படகுகளில் ஏற்றிக்கொண்டு வந்து பட்டணங்களில் விற்பது வழக்கம்.

இப்படி இவர்கள் ஒரு சமயம் காட்டில் மரங்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள் அங்கே சிறிது தூரத்தில் ஒரு யானை இருந்தது ஒரு நாள் அதன் காலில் ஒரு விறகுத் துண்டு நன்றாய்க் குத்திவிட்டது அதனால் கால் வீங்கிப் போய்விட்டது. ஐயோ. பாவம்! அந்த யானைக்கு அந்த வலியைப் பொறுக்கவே முடியவில்லை. அதற்கு என்ன செய்வதென்றும் தெரியவில்லை. அது ஒரு நாள் மெதுவாய் நொண்டிக்கொண்டு வரும்போது, தச்சர்கள் 'படார்' 'படார்' என்று மரங்களை வெட்டும் சத்தம் கேட்டது.

அந்த யானை. 'நான் இவர்களிடம் போய் என் காலைக் காட்டினால் இவர்கள் ஏதாவது செய்து என் வலியைப் போக்குவார்கள்' என்று நினைத்தது. ஒரு காலைக் கொஞ்சம் தூக்கிக் கொண்டு மெதுவாய் நொண்டிக் கொண்டே அவர்களுக்கு அருகே நின்றது.

தச்சர்களிடம் யானை தன் காலைத் தூக்கிக் காட்டிற்று. அவர்கள் மெதுவாய் அந்த மரத் துண்டை எடுத்து அந்தக் காலை நன்றாய்க் கழுவினார்கள் பிறகு மருந்துப் பச்சிலைகளை வைத்துக் கட்டினார்கள். சில நாட்கள் ஆனதும் புண் நன்றாய் ஆறி விட்டது.

அந்த யானை நல்ல புத்திசாலி. அதனால், 'இந்தத் தச்சர்கள் என் உயிரைக் காப்பாற்றினார்கள் நான் இதை மறக்கவேமாட்டேன். இவர்களுக்குப் பதில் உபகாரம் ஏதாவது செய்வேன்' என்று தனக்குள்தானே சொல்லிக்கொண்டது

அது முதல் தினமும் அவர்களோடு யானையும் வேலை செய்யும். என்னென்ன வேலைகள் செய்யும் தெரியுமா பாப்பா? பெரிய பெரிய மரங்களையெல்லாம் வேரோடு பறித்து எறிந்து விடும். அம்மரங்களைத் தச்சர்கள் தூண் தூணாக வெட்டியதும் யானை அந்தத் தூண்களைக் கொண்டுவந்து ஓரிடத்தில் போடும். அவர்களுக்கு வேண்டிய கோடரி முதலிய கருவிகளைத் தன் துதிக்கையில் சுற்றிக் கொண்டு வந்து கொடுக்கும்

வேலை முடிந்ததும் சாப்பாட்டுவேலை. அப்போது அந்த ஐந்நூறு தச்சர்களும் ஒவ்வொருவராய் வந்து சாதத்தை ஒவ்வொரு கவளமாய் யானை வாயில் போடுவார்கள். அதைப் பார்க்க ரொம்ப வேடிக்கையாய் இருக்கும். அவர்களுக்கெல்லாம் இந்த யானையின் மேல் அதிக ஆசை.



'இந்த நல்ல யானைக்கு ஒரு குட்டி இதன் நிறம் வெள்ளை. தேவராஜாவான இந்திரனுக்கு ஐராவதம் என்று ஒரு வெள்ளை யானை இருக்கிறதாம். இந்த யானைக் குட்டியைப் பார்த்தவர்கள், 'அந்த ஐராவதமும் இவ்வளவு அழகாய் இருக்கும்: ஆனால் இதை

விடப் பெரிதாயிருக்க வேண்டும் என்றுபேசிக் கொள்வார்கள். தாயான யானைக்குக் குட்டி மேல் அதிக ஆசை.

குட்டி காட்டில் வளர்ந்து வந்தது. பெரிய யானை குட்டியைக் கவனித்துக்கொள்வதும் தச்சர்களுக்குப் பணி செய்வதுமாய்க் காலங் கழித்தது. இப்படி நாள்கள் வாரங்களாயின, வாரங்கள் மாதங்களாயின. மாதங்கள் வருஷங்களாயின. ஒரு நாள் பெரிய யானை, 'எனக் கோ வயதாகிவிட்டது. என் பிள்ளைதான் இனி இவர்களுக்கு வேலை செய்ய வேண்டும் என்று நினைத்தது. அந்த நினைப்புடன் காட்டிலிருந்து தன் குட்டியை அழைத்து வந்து தச்சர்முன் நிற்க வைத்தது

பிறகு பெரிய யானை தன்குட்டியையும் பார்த்துத் தச்சர்களையும் பார்த்தது. அந்தப் பாஷை அந்தத் தச்சர்களுக்கு விளங்கிவிட்டது. 'இந்த வெள்ளைக்குட்டி என்னுடைய அருமைப்பிள்ளை. நீங்கள் எனக்கு வைத்தியம் செய்து என் உயிரைக் காப்பாற்றினீர்கள் அல்லவா? அதற்காக உங்களுக்கு இந்த என் பிள்ளையைப் பரிசாகக் கொடுக்கிறேன்' என்று பெரிய யானை பேசுவது போலத் தோன்றியது. அப்போது குட்டி சந்தோஷமாய்த் துதிக்கையை ஆட்டியது. அந்தப் பாஷையும் தச்சர்களுக்குத் தெரிந்துவிட்டது. 'இனிமேல் என் அம்மா செய்த வேலைகளையெல்லாம் நான் செய்வேன்' என்று குட்டி சொன்னது போலத் தோன்றியது

அப்பால் குட்டி யானை வேலை செய்து வந்தது. ஐந்நூறு தச்சர் கொடுக்கும் சாப்பாட்டைச் சாப்பிட்டு வளர்ந்து வந்தது. வேலைக்குப் பின் சாப்பாட்டு வேலை.

மாலை நேரங்களில் கங்கையிலே குளித்து விளையாடும். தச்சர்களுடைய குழந்தைகளுக்கும் இந்த வெள்ளையானைக் குட்டி மேல் ஆசை அதிகம். அவர்களும் இந்தக் குட்டியுடன் விளையாடுவார்கள்.

காசிராஜாவான பிரம்மதத்தன் இந்த வெள்ளை யானைக் குட்டியைக் குறித்துக் கேள்விப்பட்டான். பார்க்கவேண்டுமென்று மந்திரி பிரதானிகளுடனும் மேளதாளங்களுடனும் வந்து சேர்ந்தான். குட்டியானை பயந்து தச்சர்களிடம் வந்து நின்றது.

தச்சர்கள் அரசனை நோக்கி, 'மாட்சிமை தங்கிய மகாராஜாவே! தாங்கள் நேரில் வர வேண்டுமா? மரத்தூண்கள் வேண்டுமென்று உத்தரவு அனுப்பியிருந்தால் நாங்கள் அரண்மனை வாசலில் கொண்டு சேர்த்திருப்போமே' என்றார்கள். அது கேட்ட அரசன் புன்னகையுடன், 'நான் இந்த அழகான வெள்ளை யானைக் குட்டியைப் பார்க்க வந்திருக்கிறேன்' என்றான். தச்சர்களும் ராஜபக்தியுடன் குட்டியானையைத் தங்கள் ராஜாவுக்குக் கொடுத்தார்கள ஆனால் குட்டி நகர்ந்தால் தானே?

ராஜா அந்த அழகான யானைக் குட்டியை மெதுவாய்த் தடவிக் கொடுத்து, 'உனக்கு என்ன வேணும் சொல்லு, குழந்தாய்!' என்று கேட்டான். குட்டி யானை தச்சர்களை நோக்கித் தும்பிக்கையை ஆட்டியது. 'உன் விலையை அவர்களுக்குக் கொடுக்கவேணும் என்கிறாயா?' என்று அரசன் கேட்டுக்கொண்டே, ஆயிரம் பொன் காசுகளை அதன் தும்பிக்கையிலிருந்து வால்வரை அடுக்கிவைத்தான். பிறகு அந்தப் பொருளைத் தச்சர்களுக்கு அளித்தான்.

இப்படிச் செய்த பின்பும் யானைக்குட்டி நகரவில்லை தச்சர்களின் குழந்தைகளை நோக்கித் தும்பிக்கையை ஆட்டிக் கொண்டிருந்தது. அது கண்ட அரசன் 'அந்தக் குழந்தைகளுக்குப் புதிய ஆடை, பாவாடை, சொக்காய் எல்லாம் கொடுக்கவேணுமா?' என்று சொல்லிவிட்டு, அவற்றையெல்லாம் அப்படியே வழங்கினான்.

யானைக்குட்டி திரும்பித்திரும்பித் தச்சர்களையும் குழந்தைகளையும் பார்த்துக்கொண்டே ராஜாவுடன் போயிற்று. அரண்மனையில் இந்தக் குட்டியானைக்கு நெற்றிப் பட்டம் கட்டினார்கள்

மணிகள் தொங்கவிட்டு அலங்காரம் செய்தார்கள் ராஜாவுக்கு ஒரு ராஜகுமாரன் பிறந்தான். இந்த யானைக் குட்டியையும் ஒரு ராஜகுமாரனை நடத்துவதுபோலவே ராஜா நடத்தி வந்தான்.

இப்படியிருக்க, ராஜா திடீரென்று இறந்து போனான். அது தெரிந்து பகையரசன் ஒருவன் காசிமேல் படையெடுத்து வந்தான், காசி ராஜா இறந்து போய்விட்டதால் சேனை கொஞ்சம் பின்வாங்கத் தொடங்கியது. அப்போது ராணி தன் குழந்தையை அலங்கரித்து வெள்ளை யானை முன் வைத்தாள். பிறகு வெள்ளை யானைக்குட்டியை அன்புடன் தடவிக் கொடுத்தாள். அப்பால், 'குட்டி ஐராவதமே!



உன் சகோதர ராஜகுமாரனை நீதான் காப்பாற்ற வேண்டும் என்றாள்.

யானைக்குட்டி இப்போது யானையாக வளர்ந்திருந்தது அது குழந்தையோடு கொஞ்சி விளையாடி விட்டுக் கோட்டைக்கு வெளியே போயிற்று. வெள்ளை யானையைக் கண்டதும் எதிரிகள் திகைத்துப் போனார்கள். யானையோ படைகளுக்கு நடுவிலே புகுந்து ஒரு கலக்குக் கலக்கி விட்டது. எதிரிகளின் படைகளில் குழப்பம் ஏற்பட்டது. அதனால் எதிரிகள் தோற்றுப் போனார்கள்

பிரம்மதத்தனுடைய மகன் தேவதத்தன் என்ற பெயருடன் காசி ராஜ்யத்தை ஆண்டு வந்தான். வெள்ளை யானை அவனுடைய பட்டத்து யானையாக விளங்கியது ஐந்நூறு தச்சர்களும் காசிமாநகரில் புதிய புதிய கட்டடங்களைக் கட்டினார்கள். புதிய அரசன் அவர்களுக்குப் பொருளை அள்ளி வழங்கினான்.

—o—

தந்தை லண்டனைப் பாதுகாக்கும் பயிற்சி வேலையில் முனைந்திருக்கும்போது குழந்தைகள், இரவில் பீரங்கிகளுக்கு அருகே குதிரைகள், பொம்மைகள் இவற்றை வைத்துக்கொண்டு விளையாடுகின்றன! மேற்கு லண்டன், ஷெப்பர்டு புஷ் ராணுவ முகாமில் இத்தகைய காட்சி யொன்றே மேற்படி படம் மாஸ்கல் என்ற பீரங்கி வீரர் தன் 4 குழந்தைகளை விளையாட்டில் ஈடுபடுத்திவிட்டு தன் வேலையில் முனையப்போகிறார்.

கர்பரக்ஷா மாத்திரை

பெண்கள் கர்ப காலங்களில் இதை சாப்பிட்டுவந்தால் எவ்வித கோளாறுமின்றி சுகப்பிரசவமாகும். கர்பச் சிதைவைத்தடுக்கும். நூறு மாத்திரை ரூ. **6—4—0.** ஐம்பது மாத்திரை ரூ. **3—8—0.**

★

தசமூலாரிஷ்டம்

பிரசவமான பிறகு உடம்பைத் தேற்றிக்கொள்ள இதுபோல் கைகண்ட ஔஷதம் வேறு கிடையாது. ஹிருதய பலவீனத்திற்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் ஆண்களும் உட்கொண்டால் பரிபூர்ண குணம் கிடைக்கும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. **6—0—0.**

விவரங்களுக்கு:—

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியரின்

ஆரிய வைத்தியாசிரமம், குமரன் வீதி, திருப்பூர்.

பிராஞ்சு : பல்லடம்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச் : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோதல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை ஸ்ரீ பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House
Mount Road, Ma...

உங்கள் முறை தவருனது

தரகர்கள் — நிபுணர்கள் — அவரவர் சொந்த நலனுக்காக லாபம் சம்பாதிக்கும்பொருட்டு, தமது அன்பான (!) உதவியின்றி வியாபாரியிடம் நீங்கள் நேரடியாகச் செல்லாமலிருக்க சாதுர்யமாகப் பேசுகின்றனர்.

ஆகையால், நீங்கள் வியாபாரியை அடையும் முறை தவருனது. வியாபாரி பைசாச மானுலும், உமது அறியாமையை எளிதில் கண்டுபிடிப்பார்; அதுவே அவரது கொள்கை. உமது அறியாமையை அறிய எவ்வளவோ வழி அவருக்கு இருக்கிறது. நீங்கள் மிகவும் புத்திசாலியாயிருந்தாலும் வியாபார விஷய மறியாதவர்தானே.

ஜப்பானிய விலைகளில், பிரிட்டிஷ் நம்பிக்கையுடன் ஜெர்மன் சரக்குகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். விலை விகிதங்களை மட்டும் பரிசீலித்து உமது நிபுணரை ரகத்தை தெரிந்தெடுக்க அனுமதிப்பது நெருப்புக்கோழி வழிபோலாகும். உமது நிபுணர் சொல்லிக் கொடுத்துள்ள வழியைப் பின்பற்றுவதாலும் நன்றுக விவரித்துக் கூறுவதாலும் சரியான ரகம் கிடைக்காது நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு ஏற்ற சரக்குதான் கிடைக்கும்.

நேர்மை, நம்பிக்கை, பெயர், நீண்டகால சேவை இவை பொருந்திய வியாபாரி கிடைப்பது உமக்கு அனுகூலமாகும். உமக்கு நம்பிக்கையான சரக்கு கிடைக்கக்கூடும். உங்களுக்குத் தேவையான நகையை அவரிடம் சொல்லுங்கள். நீங்கள் கொடுக்கக்கூடிய தொகையும் கூறுங்கள். சரியான விலையில் சரியான சரக்கு பெறுவதற்கு அது போதுமானது.

உமது வாங்கும் முறையைச் சீர்படுத்துங்கள். சுயநலம்பெற்ற தரகர்களின் வம்பு பேச்சில் சிக்கிக்கொள்ளாதீர்கள்.

நேர்மையான வியாபாரியை நம்புங்கள்
நாணயமுள்ள சரக்கு கிடைக்கும்.

வியாபாரி உண்மையில் நேர்மையானவர்

ஸூரஜ்மல்ஸ்

"1895 முதல்"
நம்பிக்கையான நகை வியாபாரிகள்

વણિકસ્ય તુલા

313, எஸ்பிளனேட் :: மதராஸ்.